TAMIL NADU LEGISLATURE LIBRARY
அக் 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

காஞ்சி வரதராஜப்பெருமாள் ஆலயத் திருப்பணி.

*வினா 504—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலயத் திருப்பணிக்காக அரசு நிதி ஏதேனும் வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம். 1976-77 ஆம் ஆண்டில் அரசு மானியம் ரூ. 20,000 வழங்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த காஞ்சி வரதராஜ பெருமாள் நல்ல வசதி படைத்தவர் தானே, அப்படியிருக்கும் போது இவ்வளவு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு என்ன காரணம் ? தனியாக இந்தத் தொகை கொடுத்துத்தான் ஆக வேண்டுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின்படி நிர்வகிக்கப் பட்டு வருகிறது. அறநிலையத் துறையினால் நியமிக்கப்பட்டும் செயல் அலுவலரே தற்போது நிர்வாக அறங்காவலராக இருந்து வருகிறார். தாததேசிக திரு வம்சத்தைச் சேர்ந்த தாதாச் சாரியார் என்ற வகுப்பைச் சேர்ந்த கிழக்குக் கிளையில் இருந்து

ஒருவரும் மேற்குக் கிளையிலிருந்து ஒருவரும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந் தெடுக்கப்பட்டு, கௌரவ அறங்காவலர்களாக பதவி வகித்து வரு கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அறங்காவலர்களுடன் நிர்வாக அதிகாரியும் சேர்ந்து அறங்காவலர் குழுவாகக் கருதப் பட்டு, நிர்வாக அதிகாரி, நிர்வாக அறங்காவலராக பணியாற்றி வருகிறார். 1386-ம் பசலி ஆண்டில் இவ்வாலயத்தின் வருமானம் ரூ. 3,17,028 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் திருப்பணிக் காக மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,14,000 அதாவது மேற்கு ராஜ கோபுரத் திருப்பணிக்காக ரூ. 3,00,000-க்கும் மேலும் கோபுர வாயில்கள் செப்பனிட ரூ. 14,000-க்குமான மதிப்பீட்டுத் தொகை இந்து சமய அறநிலைய ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையில் 1976-77-ல் அரசு மானிய மாக ரூ. 20,000 வழங்கப்பட்டுள்ளது. இதுபோக மீதி மதிப் பீட்டுத் தொகையில் ரூ. 1,37,243.60 24—12—1977 வரை நன்கொடையாக வசூலிக்கப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல கோயில்களில் சிலைகள் திருட்டுப் போயிருக்கின்றன. இந்த காஞ்சி வரதராஜபெருமாள் கோயிலில் கடந்த ஆண்டுகளில் ஏதேனும் சிலைகள் திருட்டுப் போயினவா? அப்படியென்றால் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கோவில் திருப்பணியைப் பற்றியது, கேட்கப்படுகின்ற கேள்வி மூலக்கேள்விக்கு ஒட்டிய தாக இருக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, காஞ்சியிலே காமாட்சி, காசியிலே விசாலாட்சி, மதுரையிலே மீனாட்சி, நாகை யிலே நீலாயதாட்சி இப்படி பெயர்பெற்ற ஸ்தலங்களில் காஞ்சியும் ஒன்று. இந்த ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்காக நிதி ஒதுக்குகின்ற நேரத்தில், அது மகிழ்ச்சிக்குரியதுதான். அதே நேரத்தில் இந்தக் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை இதில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கு வதற்கு அரசிடம் ஏதாவது குறிப்பு இருக்கிறதா?

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுடைய யோசனையைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

Dispensary to Konapet Village.

* *Q.* 505—THIRU N. SUNDARARAJ : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Government dispensary at Konapet village in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) ஆம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டமாக இச்செயற்குறிப்பைச் செயல்படுத்துவது, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அந்த அரசு மருந்தகத்தைக் கட்டுவதற்கு, ஆரம்பிப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் 50,000 ரூபாய் அரசாங்கத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி ஒப்படைக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால், உடனடியாக இந்த ஆண்டாவது அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறேன். 1978-79 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டமாக இச்செயற்குறிப்பு செயல்பட அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களாகப் பதில் அளித்து வருகிறார். இது தற்காலிக ஏற்பாடா? அல்லது நிரந்தர ஏற்பாடா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவருக்காக நான் பதில் சொல்லக் கூடாது என்று விதியில்லை. இம்மாதிரி யாருக்கும், யாரும் பதில் சொல்லலாம். இது நிரந்தர ஏற்பாடா, தற்காலிக ஏற்பாடா என்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்குப் பதில் தாற்காலிக ஏற்பாடு.

வளையங்குளம் வட்டாரத்திற்குப் பாசன வசதி

*வினா 484.—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்குப் பாசன வசதிக்கென நிலையூர் வாய்க்கால் சிந்தணை பேரணை இவைகளிலிருந்து ஒருகால் கொண்டுவர இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதற்கான முதல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத் திட்டம் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப உதவியாளர் சம்பளம்.

*வினா 485. திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடித்து சிவில் இன்ஜினியரிங் சப்ஜெக்ட் படித்தவர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் என்ற பெயரில், பணி ஆய்வாளர்களை விட உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பணி ஆய்வாளர் சம்பளம் வழங்கப்படும் தவறான போக்கு அரசின் கவனத்திற்கு வந்ததா?

1978 மார்ச் 10]

(ஆ) ஆம் எனில், அதனை அரசு உடன் மாற்றி நீதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) குறைந்தபட்சம் இன்ஜினியரிங் டிப்ளமா பெற்றிருப்பவர் மட்டுமே தொழில் நுட்ப உதவியாளர் வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி.-க்குப்பின் ஒன்று அல்லது இரண்டு இன்ஜினியரிங் பாடங்களில் தனியாக சர்டிபிகேட் வாங்கியவர்கள் பணி ஆய்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கே தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். தொழில் நுட்ப உதவியாளர்களுக்கும் பணி ஆய்வாளர்களுக்கும் வெவ்வேறு சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

தென் சென்னை மின் வழங்கு நிறுவன ஊழியர்கள்.

* வினா 486.—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட தென் சென்னை மின் வழங்கும் நிறுவனத்தின் ஊழியர்கள் சுமார் 4 வருடங்களாகியும் மின் வாரியப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) இப்பணியாளர்களைப் பணியில் முறைப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் தமிழ்நாடு மின் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. வாரியம், சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தொழிற் சங்கங்களோடு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. அவை முடிந்தவுடன், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இது போலவே தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் உள்ளதை அரசாங்கம் மேற்கொண்டது. அந்த மின்வாரியப் பகுதியிலே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உள்ள தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு மின் வாரியத்தில் உள்ளதுபோன்ற சலுகைகள் அளிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? கும்பகோணத்திலுள்ளவர்களுக்கு மற்றவர்களுக்கு, மற்றத் தொழிலாளர்களுக்கு அளிப்பதுபோல் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தகவல் இல்லை.

மின்வாரியப் பொறியாளர் தேர்வு

*வினா 487—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் எத்தனை பொறியாளர்கள் தேர்வு பெற்றார்கள்?

(ஆ) எத்தனை பேர் வேலையில் சேர்க்கப்பட்டனர்?

(இ) தேர்வு வரிசைப்படி வேலையில் சேர்க்கப்பட்டனரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 250 நபர்கள்.

(ஆ) 212 நபர்கள் தான் வேலையில் சேர்ந்தனர்.

(இ) ஆம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக்கு அமர்த்தப்படாமல் இருந்தார். ஆனால் நான் அதைப்பற்றி விவரங்களை அறிய விரும்பவில்லை. இருந்தாலும், சீனியாரிட்டி செலக்ஷன் லிஸ்ட் அடிப்படையில் சீனியாரிடி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சீனியாரிடிபடித்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவலை தந்திருக்கிறார்கள். வேறு விவரங்கள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து எழுதித் தந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Sub-Magistrate Court, Panruti.

*Q. 488—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) whether it is a fact that the Sub-Magistrate's Court at Panruti is without a Magistrate for the past 3 months; and

(*b*) if so, the steps taken thereon by the Government?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR:

(a) The Court of the Judicial Second Class Magistrates at Panruti was without a Magistrate from 14th May 1977 to 18th September 1977.

(*b*) A Judicial Second Class Magistrate was posted to Panruti on 19th September 1977.

அரிசி ஆலைகள்

*வினா 489—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நெல் அரைவை மில்களில் உமியை மட்டும் நீக்கும் ஹல்லர் பொருத்தப்பட வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்துள்ள அரைவை ஆலை அரிசி திருத்தச் சட்டத்தின்படி நெல் அரைவை ஆலைகளில் உமியை நீக்க ஷெல்லர்களைப் பயன்படுத்த வேண்டும். ஹல்லர்களை அரிசிக்கு மெருகு ஏற்றுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

*வினா 490—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் உள்ள கூலிக்கு அரைக்கும் அரிசி ஆலைகளில் "ஷெல்லர் டைப்" அரைவை முறைக்கு விலக்களிக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : ஆம். எல்லாவகைக் கூலி ஆலைகளும் நவீனமயமாக்கப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. மு. அம்பிகாபதி : இப்படிப்பட்ட உத்தரவின் காரணமாக சாதாரணமாக சிறு மில்கள் வைத்து அரைக்கக்கூடிய சிறு மில் சொந்தக்காரர்கள் ஏழாயிரம், எட்டாயிரம் செலவு செய்து ஷெல்லர்களைப் பொருத்த வேண்டுமென்று சொல்லியிருப்பதால் பெருத்த சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். இதன் காரணமாக பெரும்பாலான மில்களில் வேலை நிறுத்தம் நடந்துள்ளது. இதை வாபஸ் பெற வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வலியுறுத்துவதோடு அந்த உத்தரவை ரத்து செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : இந்த உத்தரவை வாபஸ் பெற வேண்டுமென்றோ அல்லது ரத்து செய்ய வேண்டுமென்றோ இதுவரை இந்த அரசு மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கவில்லை. காலத்தை நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : கிராமப் புறங்களிலுள்ள அரிசி ஆலைகளில் ஷெல்லர் டைப் வைத்தால் உரிமத்தைப் புதுப்பிக்க முடியும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதா ? அதை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பது தமிழக அரசு அல்ல—மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது. ஆகவே, காலக் கெடுவை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

திரு. க. மருதாசலம் : பல்வேறு கிராமங்களிலிருந்து ஹல்லர் மெஷின் வைக்க வேண்டுமென்று அனுமதி கேட்டு விண்ணப்பம் செய்திருக்கிருர்கள். அனுமதி தர காலம் கடத்தி வருவதால் பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை உடனடியாகத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : உடனடியாக எந்த விதமான விதிவிலக்குகளும் தர இப்போதைக்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன்: புதிதாக நிறுவப்படும் ஷெல்லர்களில் உமி மட்டுமே நீக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி நீக்குவதால் கால்நடைகளுக்குத் தேவையான தவிடு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கால்நடைத் தீவனத்திற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஷெல்லர்களைப் பயன் படுத்துவதன் மூலம் உமியை மட்டுமே நீக்க முடியும். ஹல்லர்கள் தவிட்டை நீக்கி அரிசியைத் தீட்டுவதற்குப் பயன்படுகிறது. மத்திய அரசு உத்தரவின் பேரில் இந்த அரசு ஷெல்லர்களை ஆலை களில் பொருத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. கால் நடைகளுக்குத் தவிடு இல்லாமல் தீவனம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்கிருர்கள். தவிட்டைத் தவிர எத்தனையோ சத்து வகைத்தீவனங்கள் தற்போது கால்நடைகளுக்காகத் தயாரிக்கபடு கின்றன.

டாக்டர் கே. சமரசம் : இந்தப் புதிய உத்தரவின் மூலம் ஷெல்லர்கள் எத்தனை மில்களில் பொருத்தப்பட்டிருக்கின்றன ? எத்தனை மில்களில் ஹல்லர்கள் இருக்கின்றன ? எத்தனை மில்களுக்கு எவ்வளவு காலம் நீட்டிக்கப்பட்டது ? அவ்வாறு பொருத்தப்படவில்லை என்ற காரணத்தால் எத்தனை உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஷெல்லர்கள் பொருத்தப்படாத ஆலைகளுக்கான உரிமங்களை ரத்து செய்ய அரசிடம் இப்போதைக்கு எந்தவிதமான குறிப்பும் இல்லை.

அவர்கள் கேட்டுக் கொண்டபடி காலத்தை நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. எத்தனை ஆலைகளில் ஹல்லர்கள், ஷெல்லர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தர தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: அமைச்சர் அவர்கள் காலத்தை நீட்டிக்க மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். கிராமங்களில் ஹல்லர்கள் இல்லாமல் இருக்கும் ஆலைகள் நிரந்தரமாக அப்படி வைத்துக் கொள்ளாமல் இருக்க அனுமதி தந்து, உரிமங்களை ரத்து செய்யக் கூடாது என்று மத்திய அரசுக்கு எழுதி அனுமதி வாங்குவார்களா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மூலக் கேள்வி 490க்கு விடை அளிக்கும்போது இதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஷெல்லர் டைப் அமைத்தால் தான் ஏற்கனவே இருக்கக்கூடிய மில்களைக் கூட நடத்த அனுமதிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா? ஷெல்லர் டைப் போட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதற்குக் காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், இந்தத் தவிட்டிலிருந்து எண்ணெய் அதிகமாக எடுக்க முடிகிறது என்ற காரணம் சொல்லப்படுகிறது. ஆகவே சாதாரண விவசாயிகள் முதற்கொண்டு எல்லோருமே ஏற்கனவே வாங்கியிருக்கிற லைசென்ஸ்களுக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதுமே தாங்கள் கேள்வி ரொம்ப பெரிதாகப் போடுகிறீர்கள், ஒரு நாளைக்காவது சுருக்கமாகப் போடக் கூடாதா?

திரு. வி. கே. கோதண்டராமன்: என்னை மாத்திரம் தான் உரிமையோடு கேட்கிறீர்கள். மற்றவர்கள் எல்லாம் ஒன்றரை முழம் நீட்டி கேள்விகளைக் கேட்கிறார்கள், அதைப்பற்றி தாங்கள் கவலைப்படுவது இல்லை.

1978 மார்ச் 10]

இனிமேல் புதிதாக வழங்கப்படக்கூடிய லைசென்ஸ்களுக்கு மாத்திரம் அப்படிப்பட்ட நிபந்தனை இருக்க வேண்டுமென்ற முறையிலே மத்திய சர்க்காரை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கேள்வியாகக் கேட்டு இருக்கிற காரணத்தால் நீளமாகப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும். ஏற்கனவே ஒரு துணைக் கேள்விக்கு பதில் சொல்ல அமைச்சர் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டார்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : உறுப்பினர்கள் நீண்ட கேள்விகளைப் போடுகிறபோது அமைச்சர்கள் நீண்ட பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படியானால் தலைவர் ஆகிய தாங்கள் உறுப்பினர்கள் நீண்ட கேள்விகளைக் கேட்கிறபோது எங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். ஆனால் நீளமான கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதித்து விட்டு சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று உத்தரவிடுகிறீர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களுடைய திறமை சுருக்கமாகச் சொல்வதில் தான்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : இல்லை. ஆரம்பிக்கப் பட்டு இருக்கிற மில்களுக்கும், ஆரம்பிக்கப்பட இருக்கிற மில்களுக்கும், அவைகளைத் தரம் வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு தரமுள்ள ஆலைக்கும் ஒவ்வொரு காலக்கெடு என்ற முறையிலே தேவைக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நான் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை. அமைச்சர்கள் சரியான பதிலைக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்பிகாபதி அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன், திருப்பி வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பதில் முறையாக வருவதில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்களைத் தாங்கள் அப்படிக் கட்டாயப்படுத்த முடியாது, உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய உத்திரவு என்பது சரியான உத்திரவல்ல என்பதை சுட்டிக்காட்டி நம்முடைய அரசாங்கம் இப்படிக் காலக்கெடு நீட்டிக்க வேண்டும் என்று கேட்பதைவிட அந்த உத்தரவையே ரத்து செய்ய வேண்டுமென்ற முறையிலே கேட்டுக் கொள்ளுமா ? காரணம், இதன் விளைவாக 10, 15 ஆயிரம் ரூபாய் வரையில் பழைய மில்காரர்கள் போடுவதற்குச் சிரமம் இருக்கிறது என்பதுதான். ஆகவே அந்த உத்தரவை ரத்து செய்ய மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் கோருமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அப்படிப்பட்ட யோசனை எதுவும் இந்த அரசிடம் இல்லை.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த ஷெல்லர் டைப் வைப்பதற்காக புதிய ஆலைகளுக்கும், பழைய ஆலைகளுக்கும் ஏதாவது அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் எவ்வளவு காலம் அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது ? அப்படிச் சொல்லக்கூடிய உத்திரவை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று மாநில அரசாங்கம் மத்திய அரசாங் கத்தைக் கேட்கக் கூடாது ? இதிலே இந்த அரசினுடைய உண்மையான நிலை என்ன ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அந்த உத்திரவைப் போட்டதே இதற்கு முன்னாலே இருந்த மத்திய அரசாங்கம் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒன்றுக்கும் மேற்பட்ட ஹல்லர் அல்லது ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகளுக்கு, 1973 ஆம் ஆண்டு வரை உரிமம் வழங்கப்பட்ட ஆலைகளுக்கு 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 10]

1973 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உரிமம் வழங்கப்பட்ட ஆலைகளுக்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஆலைகள், ஆலைகளின் நிர்மாண வேலை இறுதிக் கட்டத்திற்கு வந்திருந்தாலோ ஆரம்ப நிலையில் இருந்திருந்தாலோ இயந்திரங்கள் பொருத்தப்பட்ட நிலையிலோ 30—4—1977 வரை உரிமத்திற்காக விண்ணப்பம் செய்த ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலம் அவகாசம் அளிக்கப்பட்டு இருக்கிறது. 30—4—1977-க்குப் பின்னர் உரிமத்திற்காக விண்ணப்பம் செய்துள்ள ஆலைகளுக்கு உரிமம் வழங்குமுன்னர் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது புதிதாக துவக்கப்படும் ஆலைகளுக்கு ஷெல்லர் டைப் கொடுக்கப்பட்டால் தான் அனுமதி வழங்கப்படும் என்று சொன்னார்கள். கிராமப் புறங்களிலே உள்ள ஆலைகளில் ஷெல்லர் டைப் ஆலை வைப்பதால் அங்கிருக்கின்ற மக்களுக்கு அரைவை கூலி அதிகமாகிறது, அதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கூலிக்கு அரைக்கின்ற எல்லாவிதமான ஆலைகளும் நவீனமயமாக்கப்படுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு ஏற்கனவே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள்.

* வினா 491—திரு. கு. ரமணி:
திரு. என். வரதராஜன்:
திரு. துரை முத்துசாமி:
டாக்டர் கே. சமரசம்:
திரு. செ. சிவசாமி:

மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—10—77 தேதி முதல் சகல ஓட்டல்களிலும் உணவுப் பண்டங்களுக்கு விலை ஏற்றப்பட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதைத் தடுத்து விலைகளை முன்போல் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) ஓட்டல்களில் உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ) உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகள் பற்றிய கட்டுப்பாடு உத்தரவு இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டு 12—4—1976 முதல் அமுலில் இருந்து வந்தது. இந்திய பாதுகாப்புச் சட்டம் காலாவதியாகியதைத் தொடர்ந்து உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் கட்டுப்பாடு 26—9—1977 முதல் அமலில் இல்லை. இதன் காரணமாக உணவு விடுதிகளில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை ஐந்து பைசா முதல் 10 பைசா வரை உயர்த்தியதாகத் தெரிய வருகிறது.

(ஆ) 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த புதிய ஆணை ஒன்று பிறப்பிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(இ) உணவு விடுதி உரிமையாளர்கள் தங்கள் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவு பண்டங்களின் மீது 4 சதவீதம் விற்பனை வரி வசூல் செய்கின்றனர். இதை நீக்குவது பற்றியும் புதிய ஆணை வெளியிடுவதற்கு முன் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

பொதுமக்களின் கருத்தை உணர்ந்து உணவு விடுதி அதிபர்களே, சுய கட்டுப்பாடு திட்டத்தின் மூலம், விலைகளைக் குறைக்க முன்வருவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க அரசு விரும்புகிறது. இவ்வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாவிடில், அரசு தலையிட்டு, சட்டபூர்வமான கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டி வரும்.

1978 மார்ச் 10]

(முற்பகல் 9-20)

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பல மாதக் கணக்கில், ஏன் வருஷக் கணக்கில்கூட பாதுகாப்புச் சட்டம் போன பிறகு 5 பைசா, 10 பைசா என்று விலையை ஏற்றியது என்பது ஒருவிதமான வரி மாதிரி மக்கள் தலையிலே விழுந்து விட்டது. அதற்கு மேலும் விற்பனை வரி வசூல் செய்யப்படுகிறது. எனக்கு ஞாபகம், விற்பனை வரி வசூல் செய்யப்பட மாட்டாது என்று முன்பு ஒரு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்கள். அப்படியிருந்தும் இப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பல தடவை எச்சரிக்கை விட்டுள்ளதைப் பத்திரிகையிலே படித்தோம். ஆனால் எந்த ஹோட்டல் முதலாளியும் அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்த நிலைமையில் சாப்பிடுகின்ற உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி ஒரு பக்கமும், மறு பக்கத்தில் அந்தப் பண்டங்களின் விலையேற்றம் என்ற முறையிலும் போய்க் கொண்டிருக்கின்ற அந்தக் கொடுமையைத் தடுக்க உடனடியாக ஒவ்வொரு ஹோட்டலிலும் இருக்கின்ற உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயித்து அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கை. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்திலேயே இதற்கு விளக்கமான பதிலை எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து, உணவு விடுதிகளில் விற்கும் உணவுப் பண்டங்களின் எடை, அளவையும், விலையையும் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தை இந்த அரசாங்கம் ஏற்கனவே பெற்றிருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது பற்றி, அதிலுள்ள பல்வேறு சிக்கல்களைப் பற்றி பரிசீலிக்கத்தான் இன்றையதினம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கால வரம்பிற்குள், இரண்டு மூன்று தடவை உணவு விடுதி உரிமையாளர்களை அழைத்து நானும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் ஏற்கனவே பேசி அவர்களிடத்தில் சொல்லி

யிருக்கிறோம் அவர்களாகவே விலையைக் குறைப்பார்கள் என்ற நம்பிக்கையில். அப்படிக் குறைக்கவில்லை என்றால் அந்த நடவடிக்கையைக் கூடிய விரைவில் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இது இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும் பெரிய பிரச்னையாகத் தமிழ்நாட்டிலே இருப்பதால் சைவம், அசைவம் ஆகிய இரண்டு உணவு விடுதிகளிலும் சுயக்கட்டுப்பாட்டை எந்த வகையில் கடைப்பிடிப்பார்கள் என்பது தெரியாது. ஆகவே, இந்தக் காலம் முழுவதும் விலையை ஏற்றிக்கொண்டே வரும் நிலைமையிருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சாதாரண உணவு விடுதிகளில் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் பெரிய கடைகளில் அதே உணவு 2 ரூபாய் 3. ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஆகவே, இது சூதாட்டம் போல இருக்கிறது. அவர்களாகவே கட்டுப்படுத்திக் கொள்வார்கள் என்பது எவ்வளவு தூரத்திற்கு நடைமுறைக்கு வரும் என்பது தெரியாது. ஆகவே, உடனடியாக அரசு தலையிட்டு விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, உடனடியாகச் செய்ய முடியாது என்றாலும், கூடிய விரைவில் நிச்சயமாக இந்த அரசு செய்யும்.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்தத் தேதியிலே அதைப் பெற்றார்கள்? அதைப் பெற்றது முதல் ஏன் இத்தனைக் காலமாக அதைப் பயன்படுத்தவில்லை? இந்தப் பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல என்று அரசும், அமைச்சரும் கருதுகிறார்களா? அதேநேரத்தில் அரசாங்கம் நடத்தும் பல்லவன் போக்குவரத்து சென்னை பஸ் ஸ்டாண்டிலும், திண்டிவனம் போன்ற இடங்களிலும் கூட இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரசாங்கம் விலையை நிர்ணயித்து இந்தந்த விலைக்குத்தான் விற்க வேண்டுமென்று அரசாங்கம் நடத்தும் இடங்களில் கட்டுப்பாடு விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டுப்பாட்டை உணவு விடுதிகளிலே கொண்டு வருவதற்கும், செயல்படுத்துவதற்கும் மத்திய அரசாங்கம் கொடுத்த அனுமதி எந்தக் குறிப்பிட்ட நாளில் என்ற அப்போர்ப் பட்ட குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஏறத்தாழ 2, 3 மாதங் களுக்கு முன்னால் மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றதாக எனக்கு நினைவிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் உணவு விடுதி உரிமையாளர்களை எல்லாம் அழைத்துப் பேசிய தில் அவர்களுக்குண்டான பல்வேறு சிக்கல்களை எடுத்துச் சொன் னார்கள். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர், ஒரு உணவு விடுதி யிலே ரூ. 1-க்கு விற்கப்படுகிற உணவு இன்னொரு உணவு விடுதியிலே —போனால்—அதிக விலையில் விற்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் தமிழகத்திலேயிருக்கிற உணவு விடுதிகளை ஏ. பி. சி. என்கின்ற பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு உணவு விடுதிக்கும் விலைகளைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிற காரணத் தாலேதான் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர, இந்த அரசாங்கத் திற்கு அக்கறையில்லையென்கிற அடிப்படையிலே இல்லையென்பதை யும் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் உணவு விடுதி அதிபர்களை அழைத்துக் கலந்துரையாடிய நேரத்தில், விற் பனை வரி நீக்கப்பட்டு விடுமானால் தாங்கள் விலையைக் குறைத்து விற்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற உத்தரவாதம் தர அவர்கள் முன் வந்தார்களா என்ற விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர் களே, விற்பனை வரியை அரசாங்கம் நீக்குமானால் தாங்களும் வசூலிப்பதில்லை என்று சொன்னார்களே தவிர, விற்பனை வரியை நீக்கினால் விலையைக் குறைப்பதாக உணவு விடுதி உரிமையாளர்கள் யாரும் சொல்லவில்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, ஓட்டல் களில் விற்கும் உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி இருப்பதால், பொதுமக்களுக்குப் பெரும் இழப்பையும், அரசுக்குப் பெரும்

ஏமாற்றத்தையும், பொதுவாக ஓட்டல் அதிபர்கள் கொள்ளை அடிப் பதையும் அரசு அறியுமா? ஆகவே, ஓட்டல்களின் விற்பனை, தரம், வசதியைப் பொறுத்துப் பதிவுக் கட்டணம் நிர்ணயிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர் களே, விற்பனை வரியை நீக்குவது என்பது உணவுத்துறையாலே முடிகிற காரியம் அல்ல. வருவாய்த் துறை அதை நீக்க வேண்டிய நிலையிலேயிருக்கிறது. அதையும், அந்தத் துறைக்கு நாங்கள் ஏற் கனவே தெரிவித்து உள்ளோம் என்பதை உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. ராம. காயமாணிகம் அம்பலம்: சார், இப்பொழுது சென்னையிலேயிருக்கிற ஓட்டல்களில் சாப்பாட்டினுடைய தரம் மிகவும் குறைந்திருக்கிறது—சென்னை பூராவிலுமே. மற்ற டவுன் களை எடுத்துக்கொண்டால், சாப்பாட்டினுடைய தரம் நன்றாக இருக்கிறது. சென்னையிலே, ஓட்டல்களில் சாப்பாடு தரம் குறைந் திருப்பதாலே, பொதுமக்களுக்கும் குறிப்பாக, சட்டசபை உறுப் பினர்களுக்குக் கூட கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது அதைத் தவிர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர் களே, ஓட்டல்களில் வழங்கப்படுகின்ற உணவினுடைய தரத்தைச் சரிபார்ப்பதற்கு அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறி வார்கள். அரசாங்கம் வேண்டுமென்றால், வழங்கப்படுகிற உண வின் எடையைக் குறிப்பிடலாம், விலையைக் குறிப்பிடலாம். தரத் தைக் குறிப்பிடுவது என்பது அரசாங்கத்தாலே முடியாத காரியம். தரத்தை நிர்ணயிப்பது என்பது உணவு விடுதிகளுக்குச் சென்று உணவு அருந்துகின்ற பொதுமக்கள் கையிலே தானிருக்கிறது.

1978 மார்ச் 10]

பாமணி உரமணி ஆலே, மன்னார்குடி.

*விஞ 492.—திரு. மு. அம்பிகபாதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப் பாரா :—

மன்னார்குடி அருகில் உள்ள பாமணி உரமணி ஆலேயுடன் இணைந்த முறையில் பூச்சி மருந்து தொழிற்சாலே அமைக்க அரசிடம் திட்ட முன்வடிவு உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலேவரவர்களே, பாமணி உரமணி ஆலேக்குப் பக்கத்தில் பூச்சி மருந்து தொழிற்சாலே ஒன்று துவங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? (குறுக்கீடு) அதனே அமுல்படுத்துவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலேவரவர்களே, சென்னே, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனே இணையம், ஒரு பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலேயை மன்னார்குடிக்கருகிலுள்ள தனது பாமணி உரத்தொழிற்சாலேயில் நிறுவ உத்தேசித் திருக்கிறது.

இந்திய அரசு பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலே நிறுவுவதைத் தடை செய்திருக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க சங்கங்கள் சிறிய நடுத்தர தொழிற்சாலேயை நிறுவுவதற்கு இந்திய அரசு தன் தடையைத் தளர்த்துவதற்குப் பரிசீலனே செய்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

திரு. எம். எம். ஏ. ரசாக் : மன்னார்குடியிலே அமைக்கப்பட்டதைப்போல, மற்ற மாவட்டங்களுக்கும் இந்தமாதிரி அமைக்க உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அது மன்னார்குடியிலே இந்த அரசு பெறுகிற வெற்றியைப் பொறுத்தது.

பத்திரப் பதிவு அலுவலகங்கள்.

*வினா 493.—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் உள்ள "பத்திரப் பதிவு" (Sub Registrar's Office) அலுவலகங்கள் மிகவும் பாழடைந்தும், வெளிச்சம், காற்று இல்லாத நிலையில் இருப்பதனை மாற்றி நல்ல முறையில் பணிபுரிவதற்கு ஏற்ற வகையில் ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அரசுக் கட்டிடங்கள் கட்டும்போது பொதுப்பணித் துறையினரே மேற்படி கட்டிடத்தில் எல்லா வசதிகளையும் செய்து கட்டிடத்தினை வடிவமைத்து கட்டுகின்றனர். தனியார் கட்டிடத்தில் செயல்படும் பொதுவாக எல்லா பதிவு அலுவலகங்களிலும் மின் விளக்கு, மின் விசிறி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, வாணியம்பாடியிலே சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் ஒன்று இருக்கிறது. அது எப்போது இடிந்து விழுந்துவிடுமோ என்ற நிலையில் இருக்கிறது. மழைக் காலங்களில் மழைத்தண்ணீர் எல்லாம் இந்த அலுவலகத்திற்குள்ளே வந்து பைல்கள் எல்லாம் நனைந்து விடும் அளவுக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. அதைப் புதிதாகத் திருத்தி அமைக்கும் திட்டம் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதையும், அதே நேரத்தில் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் எழுதுகின்ற எழுத்தர்களுக்குத் தங்க இடம் இல்லாமலும், வருகின்ற பொது மக்களும் இடம் இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. இதற்குத் தேவையான மாற்று இடம் கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பத்திரப் பதிவு அலுவலகத்தைப் பற்றித் தனியாக என் கவனத்திற்குக் கொண்டு வருவாரானால், அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 மார்ச் 10]

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலே பங்கா இழுக்கும் முறையிருந்து வருகிறது. அந்த பங்கா இழுக்கும் முறையை நிறுத்திவிட்டு, மின் வசதி பொறுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அநேகமாக பத்திரப் பதிவு அலுவலகங்கள் எல்லாவற்றிலும் பங்கா இழுக்கும் முறையை மாற்றி, மின் வசதிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்த முறை இன்னும் இருந்து மின் வசதி கொடுக்கப்படாமல் இருந்தால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பாக சர்க்காரால் கட்டப்பட்ட கட்டடங்களில் இத்தகைய வசதிகள் இல்லாத காரணத்தினால், அவைகளை மீண்டும் திருத்தி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கட்டடத்தைப் பற்றிச் சொல்கிறார் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலம் போன்ற பெரிய நகரங்களில் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடங்களில்தான் இந்த பத்திரப் பதிவு அலுவலகங்கள் இருக்கின்றன, எந்தவிதமான நவீன வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதை மாற்றி புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகங்கள் அதேபோல சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் எங்கெங்கெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கிறதோ, அங்கே எல்லாம் சொந்தத்தில் கட்டடங்களைக் கட்டி அவற்றிலே அந்த அலுவலகங்களை வைக்க வேண்டும் என்ற

முயற்சியிலே இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தும் ஏற்கனவே குறிப்புகள் கோரப்பட்டுள்ளன. அவைகள் வந்த பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்கள் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறைந்த தொகையிலே கிராமப்புறங்களிலே இதைப் போன்ற பத்திரப்பதிவு அலுவலகங்கள் வாடகைக்கு இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டடங்கள் விலைக்கு வருகிறபோது அதை வாங்கக் கூடாது என்று அரசின் கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையை மாற்றி அமைத்து அத்தகைய கட்டடங்களை விலைக்கு வாங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : கட்டடங்களைப் புதிதாக கட்டுவதுதான் உசிதம் என்று அரசு கருதுகிறதே தவிர பழைய கட்டடங்களை விலைக்கு வாங்குவது அவ்வளவு சரியில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. கூ. ச. முருகேசன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா. அத்தகைய இடங்களில் அரசு கட்டிடங்களைக் கட்டி, அரசு வாடகைக் கொடுப்பதை நிறுத்தி அரசு வருமானத்தைப் பெருக்குவதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஏற்கனவே எழுப்பிய துணை வினாவிற்குப் பதில் சொல்லியிருக் கிறேன்.

பொறியியல் படிப்புக்கு மாணவர் தேர்வு.

* வினா 494—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

1977-78 கல்வி ஆண்டில், இன்ஜினீரிங் கல்லூரி பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக் முதலியவைகளுக்கு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேட்கப்பட்டிருக்கும் விவரங்களைக் கொண்ட அறிக்கை* ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த அறிக்கையில் கண்டுள்ளபடி கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதிகம், இரசாயனம் இவ்விரு பாடங்களுக்கும் சேர்த்து 100 மார்க்கும் ஆக மேற்படி சொன்ன 200 மார்க்குகளும் அடிக்கல பாட மார்க்குகளாக நிர்ணயிக்கப்பட்டு, மற்றும் நேர்முகத் தேர்விற்கு 75 மார்க்கும் கொடுக்கப்பட்டு, அந்த மார்க்கு எடுத்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா அல்லது குறைந்த மார்க் பெற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கணிதத்திற்கு வாங்கப்பட்ட மார்க்கில் 100-க்கு எவ்வளவு என்று பார்த்து, அந்த மார்க்கையும், பௌதிகத்திற்கு—வேதியல்—100-க்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதையும் கூட்டி அதை 200-க்கு வைத்துக்கொள்கிறார்கள். அதற்குப் பிறகு 75 மார்க்கு நேர்முகத் தேர்வுக்கு வைத்துக்கொள்கிறார்கள். இப்படி 275 மார்க்குகளுக்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்களோ அவர்களை வரிசைப்படுத்தி அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, பொறியியல் கல்லூரிக்கு 1977-78-ம் ஆண்டில் எப்படி மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வருகிற 1978-79-ம் ஆண்டிலும் இதே முறையை பின்பற்றும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா அல்லது மாற்றம் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பரிசீலனையில் இருக்கிறது.

*1049–1059-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 மார்ச் 10

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, பொறியியல் வகுப்புகளில், சிவில், மெக்கானிகல், எலெக்டிரிகல் ஆகிய இன்ஜினீரிங் வகுப்புகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில், சில வகுப்புகளுக்கு மட்டும் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, சென்டிரல் பாலிடெக்னிக்கில் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று வைத்து இருக்கிறோம். அதில் பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, இப்போது கோ-எடுகேஷன் இல்லாமல் இருப்பதால், பொறியியல் கல்லூரியில் தாய்மார்கள் சேர்க்கப்படுவது இல்லை. ஆகவே தாய்மார்களுக்கு என்று தனியாக பொறியியல் கல்லூரி ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தாய்மார்கள் என்று அவர்கள் சொல்வது மாணவிகளைத்தான் குறிக்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டு, அவர்களும் அங்கே படிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் நாம் எடுத்து இருக்கிற முடிவு, ஆண்கள் பாலிடெக்னிக்கில் பெண்களையும் சேர்ப்பது என்பதாகும்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, இன்ஜினீரிங் பட்டப்படிப்பிற்கும் டாக்டர் பட்டப்படிப்பிற்கும் 'மாணவர்கள் தேர்ந்தெடுக்கும்போது, நேர்முகத் தேர்வில் 75 மார்க்குக்கு 45 மார்க்குக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று அரசு ஏதேனும் உத்தரவு போட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தகவல் தரலாம். ஆனால் அப்படி உத்தரவு இல்லை என்றும், அப்படி தேர்ந்தெடுக்கப்படும் முறை பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 10]

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், மலை வாழ் பகுதி சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த விவரம் முன்பே இந்த அவையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, இந்த அறிக்கையில் பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 31 சதவிகிதமும், 18 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இன்னின்ன பாடத்தில் இவ்வளவு மார்க்குக்ள் எடுத்து இருக்க வேண்டும் என்று விதிமுறை வைத்து இருப்பதால், அந்த அடிப்படை மார்க்கு இல்லை என்ற காரணத்திற்காக அந்த 31 சதவிகிதம், 18 சதவீதமும் என்ற அளவிற்கும் குறைவாக அந்தந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த இடங்கள் 1328. அதில் 51 சதவீதம் பொதுத் தேர்வி*கும், 31 சதவீதம், பி*படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவீதம் ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஒதுக்க வேண்டும். ஆகவே, முறையே 706, 381, 241 என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்ட இடங் களில் அவர்கள் தேர்வு பெற்று இருப்பதாகத்தான் தெரிகிறது.

திருமங்கலம் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்.

* வினா 495—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூகா, திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

[1978 மார்ச் 10

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: திருமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு 30—12—1977 நாளிட்ட அரசு ஆணையில் புதிய கட்டிடம் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

Semester System in Colleges

*Q. 496—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether there is widespread opposition to the introduction of Semester System in Colleges;

(b) if so, in how many colleges the resentment was expressed and in what forms; and

(c) action taken by the Government to consider their demand?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கல்லூரிகளில் ஸெமெஸ்டர் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதற்குப் பரவலாக எதிர்ப்பு எதுவுமில்லை. சில தனியார் கல்லூரி மாணவர்கள் மட்டும் தாங்கள் அளித்துள்ள பல கோரிக்கைகளில் ஒன்ருக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(ஆ) மேற்கண்ட விடையில் குறிப்பிட்டவாறு தங்களுடைய பல கோரிக்கைகளில் ஒன்ருக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்பினை 13 தனியார் கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ) அரசு நடவடிக்கை எடுக்க இதில் எதுமில்லை.

(முற்பகல் 9-40.)

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, செமஸ்டர் சிஸ்டம் முறையை எதிர்த்துப் பல கல்லூரிகளில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் கடுமையான வேலைநிறுத்தம், போராட்டங்களை நடத்தியிருக்கிருர்கள் என்பது உண்மை. அது அரசாங்கக் கல்லூரியா அல்லது தனியார் கல்லூரியா என்பது பிரச்சனை யல்ல. அதில் மாணவர்கள் பயப்படுவதற்குக் காரணம் 'இன்டர்னல் அசஸ்மென்ட்' மார்க்கையும் சேர்த்துத்தான் பாஸ் அல்லது ஃபெயில் என்று அறிவிக்கிருர்கள். அதனுல் ஆசிரியர்கள் வேண்டுமென்றே தாங்கள் விரும்பாத மாணவர்களை வெற்றிபெறச் செய்யாமல் செய்துவிடுவார்கள் என்ற ஆழமான அச்சம் இருக்கிறது. ஆகவே, இந்த இன்டர்னல் அசஸ்மென்ட் முறை

1978 மார்ச் 10]

கைவிடப்படுமா? இல்லை என்ருல் அச்சத்தைத் தீர்ப்பதற்கு என்ன நடைமுறையை அரசு எடுக்கப் போகிறது என்பதை அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த முறை பல்கலைக் கழக மானியக் குழுவினுல் சிபாரிசு செய்யப்பட்டு, அதைப் பல்கலைக் கழகங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. அரசாங்கம் இந்த முறையைக் கொண்டுவரவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவர்களைச் சந்தித்தபோது செமஸ்டர் சிஸ்டம் நல்லது என்று விளக்கிச் சொன்னபோது அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தவறு ஏற்படுகிறது என்று தெரிந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வழி வைத்திருக்கிருர்கள். எந்த மாணவருக்காவது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது அல்லது வேண்டு மென்றே தன்னை விட இன்னொரு மாணவருக்குக் கூடுதலாக மார்க் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ருல் அவர் அப்பீல் செய்யலாம். அப்பீலில் அதைச் சரிபார்ப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக் கின்றன. ஒரு ஆசிரியர் வேண்டுமென்றே தவறு செய்திருக்கிருர் என்று தெரிந்தால் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழக கல்வி சம்பந்தப்பட்டவரை இந்த அக மார்க் 40 என்று வைத்திருப்பதை நம்முடைய பல்கலைக்கழகமும் 25 மார்க்காகக் குறைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, இந்த செமஸ்டர் சிஸ்டத்திஞல் வேண்டுமென்றே ஆசிரியர்கள் மாணவர்களைப் பழி வாங்கி விடுவார்கள் என்ற அச்சம் மாணவர்களுக்கு இருக்கிறது. குறிப்பாக, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அப்படியாஞல் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து, அந்த அச்சத்தைப் போக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஏற்படுகிற தவறுகளைக் கண்டுபிடித்து தண்டனை அளிக்கப்படும் என்ற உறுதியினை நாம் அளித்திருக்கிருேம். ஆஞல் செமஸ்டர் சிஸ்டம் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நல்ல பயனைத் தந்திருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் காட்டு கின்றன.

[1978 மார்ச் 10

திரு. எ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இந்த செமஸ்டர் சிஸ்டத்தில் இருக்கிற இன்டர்னல் அசெஸ்மென்ட் முறையை எதிர்த்து சட்டக்கல்லூரி மாணவர்கள் போராடினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு இருக்கிறது. இப்போது சட்டக் கல்லூரி தேர்வு நடைபெற இருக்கிறது. வழக்கு இன்னும் முடியாமல் இருப்பதால் கைதானவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, சட்டக்கல்லூரி மாணவர்கள் மீது இருக்கிற வழக்கை திரும்பப்பெற்றுக் கொண்டு, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர்களே, வழக்குப் போட்டிருப்பது சட்டக்கல்லூரி மாணவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அல்ல என்பதை வழக்கறிஞரான உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வன்முறை சம்பவங்கள் மீண்டும் உருவாகாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தேர்வு எழுத சங்கடங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி, வாய்தா பெற்றுக் கொள்ளலாம்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த சிஸ்டம் இல்லாதபோது தேறிய மாணவர்களின் எண்ணிக்கையை விட இந்த முறை புகுத்தப்பட்ட பிறகு அதிகமான மாணவர்கள் தேறுவதே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பலன் அளிப்பதாக அதாவது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக தேறுவதாக இந்த அரசு எடுத்துக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினை குறித்த தகவல்.

*வினா 497—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து 1977 ஜூலை மாதத்தில் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா?

1978 மார்ச் 10]

(ஆ) ஆம் எனில், அந்தக் கடிதத்தின் நகல் ஒன்று இந்த அவைமுன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இவ்வினுவிற்குப் பதிலளிப்பது. பொது நலனுக்கு ஒவ்வாது என்பதால் இவ்வினுவிற்குப் பதிலளிக்க இயலாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று அவ்வப்போது அறிவிக்கப் பட்டு வந்தாலும் இந்தி ஒரு கால கட்டத்தில் கட்டாயமாக ஆட்சி மொழியாக ஆகும் என்ற கருத்தை மத்திய அரசிலே தெரிவிக் கிருர்களே, இது மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைகிறது. எனவே இந்தித் திணிப்பைத் தடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசை வற்புறுத்தி ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று ஒரு தீர்மானம் போட்டு இங்கிருந்து மத்திய அரசிற்கு அனுப்ப முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கட்டாய இந்தித் திணிப்புக்கு இங்கே எந்த அளவுக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை மத்திய அரசு உணரும். ஆகவே தான் கட்டாயமாக இந்தி திணிக்கப்பட மாட்டாது என்கிற உறுதி மொழியை அவர்கள் அவ்வப்போது தந்து வருகிருர்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் வழங்கிய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று குறிப்பிட்டார்கள். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது என்ற ஒரு கேள்வியை தங்களது அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையில் இந்த அவையில் அனுமதித்தது சரிதானு என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அனுமதித்தேன். ஆனல் சில தகவல்களைத் தரக் கூடாது என்று அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய கொள்கையில் நான் நுழைய முடியாது. பதில் சொல்கிற நேரத்தில் அரசாங்கத்தின் நிலைமையை உணர்ந்து அல்லது வெளியே சொல்லக் கூடாது என்று கருதி

அமைச்சரவர்கள் சொல்லாமல் இருக்கும்போது அது என்னுடைய குற்றம் அல்ல. அது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது; நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, உறுப்பினர்கள் கொடுக்கின்ற கேள்விகளைத் தாங்கள் செயலாளர் மூலம் ஆராய்ந்து பார்த்து அவைகளைத் தேர்ந்தெடுத்து கேள்விப் பட்டியல் தயார் செய்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால் அதற்கான காரணங்களை உறுப்பினர்களுக்கு அறிவிக்கிறீர்கள். ஆகவே, அப்படி தாங்கள் அந்தக் காரணத்தை அறிவிக்காததால் இது பொது நன்மைக்கு உகந்த ஒன்றுதான் என்று தாங்கள் நினைப்பதாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேரவைத் தலைவரை இக்கட்டான நிலைக்குக் கொண்டு வருகிறார்கள். நான் அனுமதித்தது அது தேவையான ஒன்று என்று தான். ஆனால் அமைச்சரவர்கள் அவர்களுக்கு இருக்கக் கூடிய கொள்கைப்படி, . . என்னைப்படி விடையை வெளிப்படுத்துவது நல்லதல்ல என்று கூறுவார்களேயானால் அதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. இதைப் போய் பெரிய பிரச்னையாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.'

என்று விதி 39-ல் கூறப்பட்டிருக்கிறது. பப்ளிக் இண்டரஸ்ட்க்கு உகந்ததல்ல என்று அமைச்சரவர்கள் பதில் சொல்ல மறுக்கலாம். என்னுடைய கருத்து கேள்வியை அனுமதிக்கலாம் என்பதே.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, துணைக் கேள்வி கேட்டு இப்படிப்பட்ட நிலைமை எழுமேயானால் பொது நன்மைக்கு உகந்ததல்ல என்ற அளவில் அமைச்சரவர்கள் பதில் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் மூலக் கேள்வியை தாங்கள் அனுமதித்துவிட்ட பிறகு பொது நன்மைக்கு உகந்ததல்ல என்று சொல்வது சபாநாயகர் இந்தக் கேள்வியை அனுமதித்ததன் மீது அமைச்சரவர்கள் களங்கம் கற்பிப்பதுபோல் அமைந்து விடாதா—அமைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை—அமைந்துவிடாதா என்ற ஐயத்தைத் தான் எழுப்புகிறேன்.

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மேல் சபையில் இதே போன்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதே போன்ற ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இங்கே கேட்ட பிறகு அது எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில் அங்கே சொன்ன பதிலையே இங்கேயும் நான் சொல்வதில் தவறு இல்லை என்று கருதித்தான் சொல்லி இருக்கிறேன்.

[முற்பகல் 9.50]

திரு. என். சங்கரய்யா : இந்தப் பிரச்னைபற்றி இவ்வளவு தூரம் வந்ததற்குப் பிறகு இதுபற்றி அரசாங்கம் அறிவிப்பதுதான் பொதுநலனுக்கு நன்மையாக இருக்கும், அப்படி அறிவிக்காது போனால் இதில் ஏதோ மர்மம் இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் ஒரு எண்ணம் ஏற்படும். இதை தங்கள் மூலம் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியின் மூலப்பொருள் எல்லோரும் உணர்ந்த ஒன்றுதான். அதைத் தெரிவிக்காமல் இருப்பது நல்லது என்று சொன்னார்களே தவிர இதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் அவர்களின் பதிலில் அந்தக் கடிதத்தில் மொழிபற்றி ஒன்றும் பிரதமர் எழுதவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. மேல்சபையில் சொல்லப்பட்டது, மொழிப் பிரச்னைப்பற்றி கடிதம் எழுதவில்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மொழிபற்றி, அப்பிரச்சினை பற்றி அதில் இல்லை என்று சொன்னால் பிரச்னை தீர்ந்துவிடும். எனவே, அதுபற்றி அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆகவே, ஒவ்வொன்றாகக் கேட்க முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். எப்படிக் கேட்டாலும் அதே பதில்தான், தெரிவிக்க இயலாது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம்.

*வினு 498.—திரு. சோ. அழகர்சாமி, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூலி பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பேரவையின் முன் கூலி விபரம் குறித்து ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நிர்ணயம் செய்யப்பட்ட அளவில் கூலி கொடுக்க உத்தரவாதமுண்டா? விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கிடைக்காது போகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கிடைக்க உத்தரவாதமுண்டா? அதற்கு என்ன ஏற்பாடு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கூலி கொடுப்பது பற்றிய கேள்வி அல்ல இது. கூலி நிர்ணயம் பற்றிய கேள்வி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அமைச்சர் அவர்களின் குறிப்பில் கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி 31—7—1974 லிருந்து அமலுக்கு வந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இப்போது 1978-ம் ஆண்டு, நான்கு வருடங்களுக்கு முன்பாக இருந்துவந்த கூலியாகவே இருக்கிறது. ஆகவே இதைத் திருத்தியமைக்க முன்வருவார்களா? அப்படிச் செய்வதாக இருந்தால் 'லாங்க் ட்ரான் ப்ரோஸஸ்' என்றில்லாமல் அரசாங்கம் இரண்டு சைட்களிலுமிருந்து ரெப்ரெசன்டேஷன்ஸ் பெற்று டயரக்ட்டாக நோட்டிபை செய்யத் தயாரா?

[1051-1057-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலுக்கு 9—3—1974, கைத்தறி நெசவுத் தொழிலுக்கு 31—7—1974-ல் நிர்ணயிக்கப்பட்ட கூலியை மாற்றியமைக்க இரண்டு குழுக்கள் அமைக்க வேண்டும் என்பதையும், அவற்றில் யார் யாரை குழுவில் போடலாம் என்பதற்கு பரிந்துரை வழங்க வேண்டுமென்று கமிஷனருக்கு 6—1—1978-ல் கடிதம் எழுதப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. நேரடியாக அறிவிப்பதற்கு ஸி.பி.எம்.-ல் இருந்து எதிர்பார்த்த பாராட்டுதல் கிடைக்கவில்லை என்பதால் அந்த முறையில் ஈடுபடுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: இதில் நிச்சயமாக பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. அந்த முறையைக் கையாள்வதில் மாறுபாடு உண்டு என்று சொன்னால் அது வேறு விஷயம். ஆனால், ஸி.பி.எம். பாராட்டவில்லை, ஆகவே, செய்யமாட்டேன் என்று சொன்னால் It is not within order பாராட்டினால் செய்வது, பாராட்டவில்லை யென்றால் செய்யமாட்டேன் Is that the Policy of the Government? இது ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், இதை அப்ஹோல்ட் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை யொட்டிய பதிலாக இருக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஸி.பி.எம். பற்றி இதில் சொல்லக் கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்னை கிளப்பக் கூடாது என்ற முறை இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒரு வழக்கறிஞர். கேள்விக்கு மேல் ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார். கேள்விக்கு மேல் கொண்டுவரலாம். இடையே எழுந்து வேறு ஒரு பிரச்னையைக் கொண்டுவரக்கூடாது. கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதில் மீதுதான் ஒழுங்குப்பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள்.

[1978 மார்ச் 10

குழாய்களைச் செப்பனிடல்.

* வினா 499—திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் குடிதண்ணீர் குழாய்களைச் சீர் செய்ய நியமிக்கப்பட்ட ஒருவரால் ஒன்றியத்தினுடைய எல்லா ஊராட்சி குடிநீர் குழாய்களைச் செப்பனிட முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) கேள்வியில் கண்டுள்ளபடிக்கான நிலை குறித்து அரசுக்குத் தகவல் எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாப் பஞ்சாயத்துகளையும் சேர்த்து ஒரு பிட்டர் நியமித்து அப்படித்தான் இருந்தது. தற்போது அந்த நிலை இல்லையென்று முடிவு எடுத்துள்ளார்கள். அதோடு மேல் நிலை தொட்டிகளுக்கு பைப் இணைப்புக் கொடுக்க பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமை சரியாக இல்லாததால் அதைச் செய்யமுடியாமல் இருக்கிறது. ஆகவே அரசே மானியம் கொடுத்து எல்லாத் தெருக்களுக்கும் பைப் இணைப்புக் கொடுக்கமுன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி பம்பு செட்டுகள் பராமரிப்பு பற்றியதாகும்.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பழுது பட்ட குடிதண்ணீர் குழாய்களைப் பழுது பார்க்கின்ற வேலையை பஞ்சாயத்துக்கள் மேற்கொள்கின்றதா? அப்படியென்றால், தங்களிடம் குடிதண்ணீர் குழாய்களைப் பழுது பார்ப்பதற்கு பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அரசே அந்தச் செலவை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 100 பம்புசெட்டு களுக்கு ஒரு மெக்கானிக் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனால் 3, 4 யூனியன்களை இவர் கவனிக்க வேண்டியிருந்ததால், சிரமம் இருந்தது. 100 பம்புசெட்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும், இரண்டு ஒன்றியங்களிலுமுள்ள பழுதுபட்ட பம்பு செட்டுகளைப் பார்த்தால் போதும் என்று அரசு உத்தரவிடப் பட்டுள்ளது. அப்படி வந்த பிறகு இப்போது 99 சதவீதமும் நல்ல முறையில் ரிப்பேர் செய்யப்பட்டு நன்றாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜன் வாய்க்கால் பாலம்.

* வினா 500—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் ஒன்றியம், குறிச்சி பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள ராஜன் வாய்க்கால் பாலத்தினை சீர் செய்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

வந்தவாசி—கள்ளக்குறிச்சி பேருந்துப்பணி.

* வினா 501—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப் பணியினை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப்பணி தொடர்ந்து நடைபெறுவதால், மீண்டும் துவக்கச் செயற்குறிப்பு என்ற வினாவுக்கு இடமே இல்லை.

[1978 மார்ச் 1]

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலும் டவுன் பஸ்களில் பெண்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்குகின்றார்கள். அதே போல் துரித வண்டிகளில் தனியாகப் பெண்களுக்கு என்று இடம் ஒதுக்கவில்லை, போர்டும் இல்லை. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல யோசனையை அரசு பரிசீலித்து செயல்படுத்த முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை பணியாளரது முறையீடுகள்.

* வினா 502—*திரு. என். கிட்டப்பா:* மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் பர்மா அகதிகள் 2—8—1977-ம் நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு ஏதேனும் தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மேல் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) விவரமான அறிக்கை* சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, அகதிகளாக இருந்து தாயகம் திரும்பியிருக்கின்றவர்கள் பணியில் அமர்த்தப்படும் போது, அவர்கள் தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றார்களா அல்லது நிரந்தரமாக அமர்த்தப்படுகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*[1058-1059ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்புகின்றவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தற்காலிகமாக பயிற்சியாளராக அமர்த்தப்படுகிறார்கள். பயிற்சி காலம் முடிந்த பிறகு வேலையின் திறமையைப் பார்த்து முன் உரிமை கொடுத்து நிரந்தரமான வேலைகளில் அமர்த்தப்படு கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் அமல்படுத்துவதில்லை. மணல்மேடு பஞ்சாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அங்கு செய்யப்பட்ட ஒப்பந்தம் அமல் நடத்தப்படாததால் வேலைநிறுத்தம் போன்றவைகள் ஏற்படு கின்றன. ஆகவே, அரசு இதைக் கருத்திற் கொண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களை சரியான முறையில் அமல் நடத்துவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டம்-பிரிவு 12 (3)-ன் மேல் இந்த மூலக் கேள்வியில் குறிப்பிட்டுள்ள மணல்மேடு மில்லில் சமரசம் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆணைகளும் அரசு பிறப்பித் துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள உறுதிமொழிகளில் இன்னின்ன வற்றை நிர்வாகம் நிறைவேற்றவில்லை என்றோ, அல்லது நிறை வேற்றுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்றோ, தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிர்வாகத்தால் மீறப் படுகிறது என்றோ அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிர்வாகத்தின் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மரமேறும் தொழிலில் ஈடுபட்டிருந்தோருக்கு உதவி.

*503 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுவிலக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட மரமேறும் தொழிலாளர்கட்கு ஆண்டுக்கு அரசு காதி போர்டு மூலம் செய்யும் செலவுத் தொகை என்ன ?

[1978 மார்ச் 10

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: ஒவ்வொரு ஆண்டும் மதுவிலக்கின் காரணமாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு காதிபோர்டு மூலமாகச் செலவு எதும் செய்வதில்லை. ஆனல் 1973-ம் ஆண்டில் கள்ளுக்கடைகள் மூடப்பட்டபோது பாதிக்கப் பட்ட 20,300 பனைத்தொழில் வல்லுநர்களுக்கு மொத்தம் 5,03,500 ரூபாய் மானியமாகவும், ரூ. 35,52,500 கடனுகவும் வழங்கப்பட்டது. இதில் தமிழக அரசின் பங்கு ரூ. 1,27,000 மான்யமும், ரூ. 8,88,000 கடனுமாகும். பம்பாய் கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவிட மிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்ட தொகைகள் ரூ. 3,76,500 (மானியம்), ரூ. 26,64,500 (கடன்) ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சுமார் 25 இலட்சம் மரமேறும் தொழிலாளர்கள் இந்தத் தொழிலை நம்பியிருந்தார்கள். மது விலக்கினல் இவர்கள் வேலை இழந்துவிட்டார்கள். ரம், விஸ்கி, பீர், ஜின் போன்றவைகளுக்கு லைசென்சு அளித்துச் சாப்பிடலாம் என்ற ஒரு விதிவிலக்கு இருப்பதுபோல், இந்தக் கள்ளுக்கும் விதிவிலக்கு அளித்து அவர்களுடைய வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு முன்வருமா? மதுவிலக்கு வைத்துக் கொண்டு, அதை அமுல் படுத்த முடியாமல், அவர்களுக்கும் வேலை கிடைக்காமல் இருக்கின்ற நிலைமைகளைப் போக்கும் வகையில் மதுவிலக்கில் கள்ளுக்கு விதி விலக்கு அளிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்வதற்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய கொள்கை இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவறு என்றல் எல்லாமே தவறுதான். அதே நோத்தில் இந்தத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னல், அதற்கு மாற்றுத் தொழில் இன்றைக்கு வழங்கப் பட்டிருக்கிறது. பல்வேறு வகையில் மானியமாகவும், கடனுகவும் கொடுத்து பனைமரத் தொழிலாளர்கள் செயல்பட்டு வருகிறர்கள் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத்திலிருந்து இறக்கக்கூடிய கள்ளில் இரும்புத் தாதுச் சத்து, அயர்ன் சப்ஸ்டென்ஸ் அதிகமாக உள்ளது என்று கருதுகிறர்கள்.

1978 மார்ச் 10]

கள் இறக்குவது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, இந்தப் பனேயிலிருந்து வெல்லம், கருப்பட்டி போன்றவைகள் இதுபோன்ற மூலப்பொருள்கள் செய்வதன் மூலம், இந்தத் தொழிலே நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், இதனுல் வேலே இழந்தவர்களுக்குத் திரும்பவும் வேலே கொடுக்கும் வகையில் இந்த அரசு ஒரு கொள்கையை அறிவிக்குமா ? அம்மாதிரி ஒரு கொள்கையை அமைத்து அதைப் பரப்புவதற்கு, அவர்களேப் பாது காக்கின்ற அளவிற்கு ஒரு முயற்சி எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலேவர் அவர்களே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழி லாளர்கள் தொடர்ந்து தங்களுடைய தொழிலே நடத்தி வருகின்ற வகையில், கதர், கிராமக் கைத்தொழில் வாரியம் ஒரு ஆண்டிற்கு கிட்டத்தட்ட 25 லட்சம் கடனுகவும், மானியமாகவும் வழங்கி, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. அதன் மூலமாக பனே பொருள்களான வெல்லம், கருப்பட்டி போன்றவைகளேத் தயாரிக்கிருர்கள். அதேபோல், இன்றைக்கு நாம் 'பாம் கோலா' என்ற ஒரு வகைப் பானத்தையும் தயாரித்து வருகிறேம். பனே நாரிலிருந்து பல பொருள்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தத் தொழில் வளர்ச்சி அடைந் திருக்கிறது. அந்தத் தொழிலாளர்களேக் காப்பாற்ற பல வகைத் தொழிலும், தொடர்ந்து அவர்களுக்கு வேலே கிடைக்க அரசாங்கம் உதவியும் செய்து, அந்தத் தொழில் காப்பாற்றப்பட்டு வருகிறது. எனவே, இந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறுவதிலே எவ்வித மான சிக்கலும் இல்லே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி () இடம் பெற்றிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

(2) தகவல் கோரல்.

(அ) பெரியார் அஞ்சல் தலை வெளியிடுவதில் தாமதம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெரியார் அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று திராவிட கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இதற்கு முன்பிருந்த அரசின் சார்பிலும், இப்போது இருக்கின்ற அரசின் சார்பிலும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி ஒரு அஞ்சல் தலை வெளியிடப்படும் என்ற ஒரு நம்பிக்கையான உறுதி மொழி நமக்கு அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இன்று காலை பத்திரிகைச் செய்தியைப் பார்த்த போது, பாராளும் மன்றத்திலே பதில் அளித்த மத்திய அமைச்சர் அவர்கள் அது மறு பரிசீலனையில் இருக்கிறது, மறு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பெரியார் ஒரு நாத்திகர் என்ற எதிர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, அது மறு பரிசீலனையில் இருக்கிறது என்று நம்முடைய நெஞ்சைக் குலுக்கும் வகையில் ஒரு செய்தியை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பெரியார் ஒரு நாத்திகர், ஆகவே தபால் தலை வெளியிடப்பட வில்லை என்று சொன்னால், 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்ற புத்தகத்தை எழுதிய பகவத் சிங் தபால் தலை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியும், அதேபோல் தன்னுடைய இறுதிகால உயிலில் தானும் ஒரு நாத்திகர் என்ற முறையில் எழுதிச் சென்ற பண்டித நேரு அவர்களுக்குத் தபால் தலை வெளியிடப்பட்டது என்பதையும் மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி மீண்டும் பெரியார் தபால் தலை வெளியிட மத்திய அரசுக்கு இந்த அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியபடி நானும் பத்திரிகையில் பார்த்தேன். மறு பரிசீலனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு உள்ளத்தைக் குலுக்குகிற பிரச்சினையாக இருந்தது என்பதை

1978 மார்ச் 10]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பதிலளித்த அமைச்சர் இது ஆஸ்திகர்களின் உள்ளத்தைப் புண்படுத்துகிறது என்று குறிப்பிட்டது போன்ற உணர்வை உருவாக்குவது போன்ற வகையில் பதில் சொன்னார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கிற அத்தனை பேரும் தங்களுக்கென்று கொள்கைகளை வைத்துக் கொள்கிற உரிமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆஸ்திகர்களுக்கு எந்த அளவுக்கு உரிமை உண்டோ அந்த உரிமை நாஸ்திகர்களுக்கும் உண்டு.

அதுமட்டுமல்ல; மதச் சார்பற்ற சர்க்கார் என்று நாம் பெருமையோடு பேசிக் கொள்கிறோம். அப்படிப் பேசிக் கொள்ளுகிற மத்திய அரசு ஆஸ்திகர்களின் படங்களைத் தபால் தலையில் போட்டுவிட்டு நாஸ்திகர் என்ற முத்திரை பொறித்து தேசியப் போராட்டத்தில் முன்னணித் தளநாயகராக இருந்த பெரியார் அவர்களின் உருவப் படத்தைத் தபால் தலையில் போட மறுப்பது அல்லது அனுமதி வழங்கிய பிறகு அது மறு பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவிப்பது தமிழக மக்களின் உள்ளத்தைப் புண்படுத்துவதாகும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, மக்களின் உணர்வுகளை, இந்த அவையின் உணர்வுகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி ஏற்கனவே எடுத்துக் கொண்ட முடிவில் மாற்றம் வரக்கூடாது என்பதை இந்த அரசு வற்புறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வினாவிடை நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்னை குறித்து.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்துவிட்டது என்று தாங்கள் கூறியவுடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து பேசினார்கள். அவர்கள் எந்த விதியின் கீழ் எழுந்து பேசினார்கள்? அது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனா? அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா? எதிலே கிளப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசியதற்குப் பிறகு அதைப் பற்றிய விளக்கம் கேட்பது சரியல்ல,

திரு. துரை முத்துசாமி: அவர் பேசியது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் இன்பர்மேஷனு? எது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற வகையில் என்னுடைய அனுமதிப் பெற்றுப் பேசினுர். இது சபையில் தினசரி நடைபெறுகின்ற ஒன்றுதான்.

(3) அறிவிப்பு

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1977-ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் 44-வது திருத்தச் சட்ட முன்வடிவுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் 13—3—78-ம் தேதியன்று வினுக்கள்-விடைகளுக்குப் பின்பும் அன்றைய தினம் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டிய மானியக் கோரிக்கைகளுக்கு முன்பும் எடுத்துக் கொள்ளப்பெறும். தேவையிருப்பின், பேரவை அன்று மாலையிலும் கூடும்.

திரு. மு. அம்பிகாபதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மானியக் கோரிக்கை எண். 28-சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் . . .

ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபின், அது சபையில் எடுத்துக் கொள்வதற்கு முன் ஒழுங்கு பிரச்னை எழுப்புவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போய் விட்டேன். மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்துவிட்ட பிறகு என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. மு. அம்பிகாபதி: இடையிலே பேச எழுந்தேன். எனக்கு மைக் கூட வேண்டாம்,.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லாமல் பேசக் கூடாது. ஒரு நிமிஷத்தில் நான் எல்லாவற்றையும் நீக்கிவிட முடியும்.

1978 மார்ச் 10]

திரு. மு. அம்பிகாபதி: அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் கொடுத்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அதை எழுப்புவது என்பது எந்த அடிப்படையில்? உறுப்பினர் தீர்மானம் கொடுத்ததின் பேரில் அரசின் சார்பில் கேட்டறிய வேண்டும். தீர்மானம் கொடுக்காமல் எழுப்பியிருந்தால் கூடப் பரவாயில்லை. கொடுத்துவிட்டு எழுப்புவது முறையல்ல.

தாங்கள் எழுப்பியது அத்தனையையும் நீக்கிவிடும்படி உத்தர விடுகிறேன். தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள், உட்காருங்கள்.

(4) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,65,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

(முற்பகல் 10-10)

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வீட்டுவரி ஈட்டுமானியத்தை ஊராட்சிகளுக்கு இரண்டு மடங்கு அளவு தர கோரி விவாதிக்க—' மானியக் கோரிக்கை எண் 28, சமுதாய

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,65,72,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, திருமயம் தாலுகா திருமயத்தில் உள்ள ஊராட்சி மன்றத்தை டவுன் பஞ்சாயத்தாக மாற்ற வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க.

'மானியக் கோரிக்கை எண் 26—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 35,65,72,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, பல ரெவின்யு கிராமங்கள் 2,3 பஞ்சாயத்துக்களில் சேர்ந்திருப்பதை ஒரே பஞ்சாயத்தாக ஆக்காததால் ஏற்பட்டுள்ள தீங்குகளைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,65,72,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இளையான்குடி ஆர். எஸ். மங்கலத்திற்கு தண்ணீர்த் திட்டங்கள் நிறைவேற்றுவது சம்பந்தமாக விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,65,72,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க, 'மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 35,65,72,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'

என்று முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 10]

திரு எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க

I move—

"that the allotment of Rs. 35,65,72,000 under Demand No. 28, Community Development Project, etc., be reduced by Rs. 100'.

(ஆ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'மானியக்கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,90,69,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சாலைகளின் சீர்கேடு விரைந்து நீக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க — 'மானியக் கோரிக்கை எண். 34 — நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,90,69,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராசன் : தலைவர் அவர்களே, நகராட்சி களில் குடிசைப்பகுதிச் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவது குறித்து விவாதிக்க —

'மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,90,69,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றிக்கு பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத் தாமல் ஒத்தி போட்டுக்கொண்டிருப்பதுபற்றி விவாதிக்க —

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

'மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,90,69,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே,

To discuss the need to adopt new tax system for property assessments based on commercial use, residential uses, owners uses in regard to rental purposes, etc.

I move—

"that the allotment of Rs. 8,90,69,000 under Demand No. 34, Urban Development, be reduced by Rs. 100."

திரு பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, திருத்துறைப் பூண்டியை நகராட்சியாக்க வேண்டியது குறித்து விவாதிக்க.—

'மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,90,69,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க —

I move—

"that the allotment of Rs. 8,90,69,000 under Demand No. 34, Urban Development, be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நகர்ப்புற மேம்பாடு பற்றி கொள்கை விளக்கக் குறிப்புகள்* பேரவை உறுப்

[*1060-1092ம் பக்கங்களில் இணைப்புகள் IV and V ஆக அச்சிடப்பட்டிருக்கின்றன].

பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன எனக் கருதுகிறேன். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த மாமன்றத்திலே பேசியதாகக் கருதி சட்டமன்றக் குறிப்பேட்டிலே பதிவு செய்துவிட வேண்டுகிறேன். இவைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுடைய அறிவுரைகளை, ஆலோசனைகளை, கருத்துரைகளை வழங்கிட வேண்டும் எனக் கேட்டு அமைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர். — தலைமை)

*திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஊராட்சி வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அந்தக் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இங்கே கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் மானியக் கோரிக்கையின் மூலமாக 35,65,72,000 ரூபாய் கோரி இருந்தாலும் இந்த உள்ளாட்சித் துறை மூலமாக 143 கோடி ரூபாய் செலவு செய்ய இருப்பதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வளவு பெரிய தொகையை ஊராட்சி மன்றங்கள் ஒன்றியங்கள் மூலமாகச் செலவு செய்யக்கூடிய நிலையில், ஊராட்சி மன்றங்கள் ஒன்றியங்கள் மக்கள் நல்வாழ்வுக்குத் தேவையான எல்லாப் பணிகளையும் நிறைவேற்றக்கூடியவையாக இருக்கின்றன. இவ்வளவு முக்கியமான பொறுப்பேற்று இருக்கக்கூடிய ஒன்றியங்கள் எல்லாம் ஒரு ஆண்டுக்கு முன்னதாக கலைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல்கள் 75 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றிருக்க வேண்டும். மூன்று ஆண்டுக் காலமாக அது நடத்தப் பெறாமல் தள்ளிவைக்கப்படுகின்றன. ஆனால் ஜனநாயக முறைப்படி

* 1060-1092 ம் பக்கங்களில் இணைப்புகள் IV, V ஆக அச்சிடப் பட்டிருக்கின்றன.

ஊராட்சித் தேர்தல், ஒன்றியத் தேர்தல் நடத்தப்படவில்லை, அவைகளை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னாலேகூட இரண்டு தடவைகள் நான் இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். 1956-வது ஆண்டில் என்னுடைய ஊராட்சி மன்றத்தில் நான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்கிறபோது அவர்கள் பேசியது எனக்கு இன்றைக்கு நினைவுக்கு வருகிறது. ஊராட்சி மன்றங்களுடைய நிர்வாகம் அரசியல் கட்சிகளுடைய தலையீடு இல்லாமல் நடைபெறவேண்டும் என்று சொன்னார்கள்.

ஆனால் இன்றையதினம் ஊராட்சிகளுடைய நிர்வாகத்தையும், ஊராட்சி ஒன்றியங்களுடைய நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்வதற்கும், தேர்தலிலே ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களுடைய நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்காகவும் மக்கள் குழு என்று ஒரு குழுவை அமைத்து வருகிறார்கள். அந்தக் குழுவில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நேரத்தில் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது கேட்டபொழுது எந்த அமைப்பாக இருந்தாலும் நியமன முறைப்படி யாரையும் இந்த அரசு கண்டிப்பாக நியமிக்காது என்று சொன்னவர்கள் இன்றைய தினம் மக்கள் குழுவில் தங்கள் கட்சிக்காரர்களை அந்த இடத்தில் எப்படியும் புகுத்த வேண்டுமென்று நியமனங்களாக ஊராட்சி மன்றங்களில் நியமித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் ஊராட்சி ஒன்றியங்களில் 12 பேர் மக்கள் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டுமென்று சொல்லி 4 பேர்களை ஆளுங்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை நியமித்திருக்கிறார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் யாரும் குத்தாலம் ஒன்றியத்திலும், குடவாசல் ஒன்றியத்திலும் நியமிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எந்தெந்த ஒன்றியங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 10]

திரு. இரெ. இராசமாணிக்கம்: என்னுடைய தொகுதியான குத்தாலம் ஒன்றியத்திலும், குடவாசல் ஒன்றியத்திலும் நியமிக்கப் படவில்லை.

அதோடு மட்டுமல்லாமல் ஒன்றியத்திலுள்ள மக்கள் குழுக் களில் அந்த ஒன்றியத்திற்கு அப்பால் இருப்பவர்களும், அந்த ஒன்றியத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் இருப்பவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், எந்த ஒன்றியம் என்று குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று. குத்தாலம் ஒன்றியம் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிறேன், எந்த ஒன்றியத்திலே நியமித்திருக்கிறார்கள்? எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள், ஆனால் என்னைக்கூட எங்களுடைய ஒன்றியத்தில் மக்கள் குழுவில் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, எல்லா ஒன்றியங்களுக்கும், அமைக்கப்படக்கூடிய மக்கள் குழுவில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள் இருக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. ஏதாவது குறைபாடு இருக்குமானால் அதைக் கோடிட்டுக் காட் டினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் பொதுவான ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. துரை முருகன்: என்னை எங்கள் ஒன்றியத்தில் மக்கள் குழுவில் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: குத்தாலம் ஒன்றியத்தில் முருகையன் என்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் குத்தாலம் ஒன்றியத்திற்கு அப்பாற்பட்ட மாயவரத்தில் வசிக்கக் கூடியவர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதைப்போல, என்னுடைய ஊராட்சிக்கு கலியபெருமாள் என்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் என்னுடைய ஊராட்சிக்குச் சம்பந்தம் இல்லாத, மாதிரிமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்தவர்.

அதைப்போல, அசிக்காடு ஊராட்சி மக்கள் குழுவில் இராசிகுயில் வளவன் என்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் அசிக்காடு பஞ்சாயத்துக்குச் சம்பந்தமில்லாதவர், சேத்திரபாலபுரம் ஊராட்சிக்குச் சம்பந்தப்பட்டவர், அவருடைய ஊராட்சியில் அவருடைய நிர்வாகத்தையே கவனிக்க மக்கள் குழு அமைக்கும் போது அவரையே இன்னொரு ஊராட்சியின் மக்கள் குழுவிற்கு நியமித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது நியாயந்தானா? இதைப்போல் ஏராளமான பட்டியல் இருக்கிறது, அவைகளைச் சொல்ல முடியும். ஏராளமானவர்களை, ஊருக்குச் சம்பந்தம் இல்லாதவர்களை, ஒன்றியத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களை மக்கள் குழுக்களில் நியமித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு ஊராட்சித் தேர்தல்களைக் கூடுமான வரையில் விரைவில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊரிலே ஊராட்சித் தலைவர் இருப்பதாகவே மக்கள் நினைக்கவில்லை. காரணம், தேர்தல் நடைபெற்று கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் ஊராட்சித் தலைவர் இருக்கிறாரா இல்லையா என்பது தெரியவில்லை. ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு விட்டதால் ஊராட்சிகளும் கலைக்கப்பட்டிருக்குமோ என்று மக்கள் எண்ணக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும் எங்களுக்கெல்லாம் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்கும் வகையில் ஊராட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பம்பிலே தண்ணீர் வரவில்லை என்றாலும் மின்சார விளக்கு எரியவில்லை என்றாலும், ரோடு பழுது பட்டிருக்கிறது என்றாலும் எம். எல். ஏ-க்களுக்கு எழுதுகிறார்கள். சமீபத்தில்

ஓட்டுபோட்டது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் என்ற நினைப்பிலே இருப்பதால் எந்தக் குறையாக இருந்தாலும் எம்.எல். ஏ-க்களுக்கு எழுதுகிறார்கள். எனவே, கூடுமான வரையில் ஊராட்சித் தேர்தலை நடத்திவிட்டால் இந்தக் குறைகளை ஊராட்சித் தலைவர்களிடத்தில் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதோடு, ஊராட்சியிலே உள்ள தலைவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத நிலையில் இன்றைய தினம் அதிகாரங்களெல்லாம் பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மிக்க வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பல ஆண்டுகாலமாக ஊராட்சிமன்றத் தலைவனாக இருக்கிற காரணத்தாலே, இருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன்.

முன்பு இருந்த அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, அத்தியாவசியத் தேவைகளுக்கு, பம்புக்கு வாஷர் வாங்க வேண்டுமென்றால் கூட, அல்லது மின்சார விளக்குகள் எரியவில்லையென்றால், பல்ப் வாங்க வேண்டுமென்றால் கூட, அதற்காக ரூ. 100 கூட பணம் எடுக்க முடியாத நிலையில் ஊராட்சித் தலைவர்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பொருள் வாங்க வேண்டுமென்றால், 'பே ஆர்டரை' எடுத்துக் கொண்டு, ஓவர்சீரிடம் செல்ல வேண்டும். அவர், அனுமதி அளித்ததற்குப் பின்னாலே, பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியிடத்திலே செல்ல வேண்டும். அவரும் அனுமதித்ததற்குப் பிறகுதான் ஒன்றியத்திலே பணம் எடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே நினைவிலே கொள்ள வேண்டும். இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

இன்னும் ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களில், வாரத்திற்கு இரண்டு முறைதான் பணம் வாங்க வேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். அது கூடத் தவறு என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சிப் பணிக்காக, அத்தியாவசியத் தேவைக்கு, அவசியத் தேவைக்கு ரூ. 100, ரூ. 200 பணம் எடுக்க ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(5) ஒழுங்குப் பிரச்னை

கோட்டை நுழைவாயில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வெளி மாநில காவலர் உறுப்பினர்களைத் தடுத்ததாகக் கூறப்பட்டது குறித்து

திரு. சி. ஆறுமுகம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் தலைவரவர்களே, கோட்டையிலே உள்ள எல்லா கேட்டுகளிலும் வெளி மாநில போலீஸ் துப்பாக்கியோடு நின்றுகொண்டு மெம்பர்களையெல்லாம் தடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் கூட உள்ளே நுழைய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களைக்கூடத் தடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு என்ன பந்தோபஸ்து என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி: என்னை இதில் உறுப்பினர் அவர்கள் இழுத்துவிட்டார்கள், அதனால் சொல்கிறேன். நான் சட்டமன்றத்திற்கு வரும்போது என்னைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆனால், என்னோடு வந்த பொறுப்புள்ளவர்களை, அமைச்சரைப் பார்க்க வந்தபொழுது தடுத்து நிறுத்திவிட்டார்கள். என்ன காரணம் என்று கேட்டபொழுது, அனுமதி வாங்கி வரவேண்டும்; என்.ஜி. ஓ-க்கள் ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அனுமதி வாங்கி வரவேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் தரப்படும். மற்றவர்கள் வந்தால், அவர்கள் அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டுதான் வரவேண்டும். நீங்கள் உங்களைத் தடுத்ததாகச் சொல்லவில்லை. உறுப்பினர் திரு. கந்தசாமியைத் தடுத்ததாகச் சொன்னீர்கள். அவர் தன்னைத் தடுக்கவில்லையென்றும் தன்னோடு வந்தவர்களை அனுமதிச் சீட்டு வாங்கி வருமாறு சொன்னதாகவும் சொல்லி விட்டார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: வெளி மாநிலக் காவலர்கள்—ஆகவே, அவர்களுக்கு உறுப்பினர்களை அடையாளம் தெரியாது—தடுத்து விடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களைத் தடுத்ததாகச் சொல்லவில்லை. மற்றவர்கள் வரவேண்டுமென்றால், அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். உறுப்பினர்கள் வர எந்தத் தடையும் இல்லை. கூட வருபவர்கள் அனுமதி பெற்றுத் தான் வரவேண்டும்.

(4) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கொடுப்பும் தொடர்ச்சி.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதோடு இந்த பம்ப் சாமான்கள், மின்சார சாமான்கள் எல்லாம் வாங்குவதிலே பெரிய பிரச்னைகள் இருந்து வருகின்றன. எங்கே வாங்குவது, யாரிடத்திலே வாங்குவது என்பது போன்றவற்றிற்குச் சுற்றறிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சாமான்களை எல்லாம் கூட்டுறவு சிறப்பங்காடிகளில்தான் வாங்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரை, நாங்கள் கூட்டுறவு சிறப்பங்காடிக்குச் செல்ல வேண்டும் என்றால், கிட்டத்தட்ட 20, 25 மைலுக்கு அப்பாலே சென்றுதான் வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. அதனாலே எங்களுக்கு ஏற்படுகிற பயணப்படி விரயம்; நாள் விரயம்; ஆகவே, இவைகளை எல்லாம் கணக்கிலே பார்த்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் உங்கள் மூலமாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஊராட்சித் தலைவரை நம்பவில்லையென்றால்கூட, ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆணையாளரிடம் பம்புகளுக்குத் தேவையான சாமான்களை, மின்சார விளக்குகளுக்குத் தேவையான சாமான்களை அளித்து, எங்களுக்குத் தேவையான நேரத்தில் அவர் வழங்கக்கூடிய விதத்தில் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கான காரணம், ஊராட்சிகளையும், ஒன்றியங்களையும் இரண்டாகப் பிரிப்பதுதான் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அதனுடைய கெடு முடிந்து விட்டதாகவும் மாண்புமிகு

உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலுள்ள மேக்கிரிமங்கலம், கோமல் இரண்டையும் பிரிக்க வேண்டுமென்று பொதுமக்கள் அங்கேயிருந்துமனு அனுப்பினார்கள். மேக்கிரிமங்கலம் ஊராட்சி மன்றதையும் பிரித்துக் கொடுத்தால் நல்லது என்று தீர்மானம் போட்டிருக்கிறது.

இந்த கோமல், மேக்கிரிமங்கலம் இரண்டு ஊராட்சி மன்றங்களும் இரண்டு ரெவினியூ வட்டங்களைக் கொண்டது, நியாயப்படி பிரிக்க வேண்டியதுதான். ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றியும், ஊராட்சி மன்றங்கள் பிரிக்கப்படவில்லை. அதிகாரிகள் ஏதோ காரணம் எழுதியிருக்கிறார்கள்; ஆகவே, பிரிக்க முடியாது என்று இப்பொழுது தகவல் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற ரோடுகள் பராமரிக்கப்படாமல் பழுதடைந்து இருக்கின்றன. போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் ரோடுகள் சதுப்பு மண்ணால் அமைக்கப்பட்டவையாகும். மழை பெய்தால் அந்த ரோடுகள் பழுதாகி அவைகள் போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் போய்விடுகின்றன. ஏராளமான செலவு செய்து தான் சரி செய்ய வேண்டும். இந்த ரோடுகளைச் சீர்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தில் இருந்து ஒன்றிய ரோடுகளைப் பராமரிப்பதற்கு மானியமாக ஆண்டொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 18 காசு வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. அது போதுமான தொகையில்லை என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலைப் பராமரிப்புத் தொகையை உயர்த்தி கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இப்போது 225 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதையும் கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. இரா. இராசமாணிக்கம்]

பல ஊராட்சிகளுக்குப் போதுமான அலுவலகக் கட்டிட வசதியில்லை. ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டிலேதான் ஊராட்சிக் கூட்டம் நடத்தப்படுகிறது. ஆகவே, ஊராட்சி களுக்குக் கண்டிப்பாக அலுவலகக் கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கும் நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அரிசன காலனிகளுக்கு சாலை வசதிகள் இல்லை. எல்லா இடத்திலும் மோசமான நிலை இருக்கிறது. அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் இல்லை. அந்த ரோடுகளைப் பராமரிப்பதற்கு சிறப்பு நிதி ஒதுக்கி, அரிசனங்களுக்குச் சாலை களை நல்ல முறையில் பராமரிக்க தனியாக உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கொடவாசல் ஒன்றியத்தில் உள்ள விஷ்ணுபுரம், அரிசனக் காலனி ரோடு பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல், பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. பல ஊராட்சிகளில் மின்சார விளக்குகள் சரியாக எரிவதில்லை. சில ஊராட்சிகளில் மின்கம்பம் நட்டு, கம்பி இழுத்த பிறகும் மின் இணைப்புக் கொடுக்காமல் பல ஆண்டுகளாக இருக்கின்றன. அரசாங்கம் இதையெல்லாம் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தாலம் ஒன்றியத்தில் உள்ள க்ஷேத்திரபாலபுரம் ஊராட்சி அரையபுரம் அரிசனக் காலனிக்குக் கம்பங்கள் நடப்பட்டிருக் கின்றன; கம்பிகள் இழுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அதைப்போல குடவாசல் ஒன்றியத்திலே சேதினிபுரம், விழுதியூர், தென்னவஞ்சேரி போன்ற அரிசனக் காலனிகளில் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் பல ஆண்டுகளாக இருக்கின்றது. அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வட்டாரங்களின் வருவாயைப் பெருக்குவதற்கு உள் ளூர் செஸ்மேல் வரியில் ஒரு குறிப்பிட்ட குறைந்த தொகையை நிர்ணயிக்கவும், தற்போதுள்ள உச்சவரம்பு அதாவது 2.50 ரூபாய்

என்பதை மேலும் அதிகாரிக்கவும் அரசு ஆலோசித்து வருவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவித்திருப்பது விவசாயிகளுக்கு வருத்தத்தை தரும் செய்தியாகும். 2.50 ரூபாயே மிகவும் அதிகம் என்று விவசாயிகள் மத்தியில் பேசப்படுகின்றது. எனவே அதற்கு மேல் இதை அதிகரிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இங்கே பேசுகின்றபோது நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் தொகையை இந்த நேரத்தில், தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் வசூல் செய்வதைத் தள்ளுபடி செய்ய 'அணுவாரி' சான்று வாங்கி அளிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் முடியாத காரியம். அணுவாரி சான்று வாங்குவது முடியாத காரியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்பதையும் அணுவாரி இல்லாமல் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் உள்ள நில வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்குப் போதுமான வருமானம் இல்லை. எனவே ஊராட்சிக்கு வருமானம் வரக்கூடிய வகையில் பலன் தரும் மரங்கள் நடுவதற்கும், விறகுக்கான மரங்கள் நடுவதற்கும் ஒரு பகுதியை மானியமாகவும், ஒரு பகுதியை கடனாகவும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கடைகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்தால் அதிகமான வருமானம் வரும், அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சினிமா மூலம் வரும் வருமானத்தை எல்லா ஊராட்சிகளுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். எல்லா ஊராட்சிகளிலிருந்தும் சினிமா பார்க்க வருகிறார்கள். எனவே அந்த வருமானத்தை ஊராட்சி ஒன்றியமே எடுத்துக் கொள்ளாமல் எல்லா ஊராட்சிகளுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

1978 மார்ச் 10]

(முற்பகல் 10-30)

திரு. பொ. காளியப்பன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79ஆம் ஆண்டுக்கான சமுதாய— வளர்ச்சி, ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் ஏறத்தாழ 163 பெரிய ஊராட்சிகளை நிர்வாகத்தின் வசதிக்காக சிறிய ஊராட்சிகளாகப் பிரித்து நிர்வாக அமைப்புகளைச் சீர் திருத்தி இருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் போகலூர் ஊராட்சி ஒன்றியத்தையும் நிர்வாக வசதிக்கேற்ப சிறிய ஒன்றி யங்களாகப் பிரித்து இருப்பது மிகவும் வரவேற்கத்தக்தாகும்.

இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும் பெரும்பாலோர் கார் வசதி இல்லாதவர்கள். அவர்கள் தொகு திக்குச் சென்று மக்களைச் சந்தித்துக் குறைகளைக் கண்டறிவதற் காக ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பை மாதம் ஒரு நாளைக்குக் கொடுக்க வேண்டும் என்றும், அதற்காக 50 லிட்டர் பெட்ரோல் வழங்குவதை அனுமதித்துத் தந்து இருப்பதும் வரவேற்கத்தக்க தாகும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கு, இதற்கு முன்பு 300 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்குத்தான் மருத்துவ வசதி தரப்பட்டு வந்தது. அதற்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்கள் செலவு செய்து விட்டு அதைப் பின்னர் ஈடுகட்டிக் கொள்ள வேண்டும். ஆனல் இப்போது எல்லா ஊராட்சி ஒன்றிய சிப்பந்திகளுக்கும் அந்த மருத்துவ வசதி தந்து இருப்பது குறிப் பிடத்தக்கதொன்றாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, முதலமைச்சர்கள் மாநாட்டில் ஊராட்சி ஒன்றி யங்கள் அபிவிருத்தி செய்ய மத்திய அரசு ரூ. 1 கோடி கொடுத்து, அதை 10 தவணைகளில் இரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். அந்தத் தீர்மானத்

திற்கு மத்திய அரசு இசைவு கொடுத்து, ஒவ்வொரு மாகாணத்திலும் பஞ்சாயத்து அபிவிருத்திக்காக ஊராட்சி ஒன்றியங்களின் அபிவிருத்திக்காக, ரூ. 1 கோடி வழங்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு சில கருத்துக்களை ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சிக்காகக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் குறிப்பிட்டதுபோல, ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் விட்டில்தான் வானொலிப்பெட்டிகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் பொதுமக்கள் வானொலிப் பெட்டியின் மூலம் முழுப்பயனும் அடைய முடியவில்லை. குறிப்பாக, மாலையில் மாநிலச் செய்திகளும், சட்டமன்றத்தில் இன்று என்ற செய்தியும் அறிவிக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் மாநிலத்தில் நடைபெற்ற அன்றைய செய்திகளையும், சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புகளையும் தெரிந்து கொள்ளக் கூடிவிடுகிறார்கள். ஆனால் என் ஊருக்கு அருகாமையில் உள்ள நண்பர் ஒருவர் என்னிடத்தில் ஒரு புகார் கூறினர். அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர் மாலை 5-6 மணி வரையிலும் வானொலிப் பெட்டியை வைத்து விட்டு, பின்னர் மாநிலச் செய்திகள், சட்டமன்றத்தில் இன்று நிகழ்ச்சிகள் வரும் போது வானொலிப் பெட்டியை மூடிவிடுகிறார். அதற்கான காரணத்தை அவரிடத்தில் நான் கேட்டபோது, சட்டமன்றத்தில் இன்று நிகழ்ச்சி கேட்காவிட்டால் என்ன குடியா முழுகிவிடும் என்று கோபமாகக் கேட்டாராம். ஆகவே, இந்த அரசை நான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன். அந்த வானொலிப் பெட்டியை பொது இடங்களில் வையுங்கள். ஊராட்சி மன்றக் கட்டிடங்களில் வையுங்கள். அதுவும் இல்லை என்றால், ஒவ்வொரு ஊரிலும், மாரியம்மன் கோவில் அல்லது வேறு கோவில் இருக்கும்; அதில் வையுங்கள். அந்த வகையில் மக்களுக்கு அந்த வானொலி பயன் பெற அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லோகல் செஸ் 2.50 ரூ. போடலாம் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. ஆனால் இராமநாதபுரம், மாவட்டம், மிகவும் பின் தங்கிய மாவட்டம். நான் இராமநாதபுரம் மாவட்டத்தை மட்டும் குறிப்பிடவில்லை. அந்த மாவட்டத்தைப் போன்ற பின்

1978 மார்ச் 10] [திரு. பொ. காளியப்பன்]

தங்கிய மாவட்டங்களுக்கு இந்த லோகல் செஸ் அறவே நீக்கப் படவேண்டும், அதற்கான மானியத்தை ஊராட்சி ஒன்றியங் களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் இந்த லோக்கல் செஸ் கட்ட முடியாமல் கஷ்டப் படுகிறார்கள். ஏனென்றால் வரியை 2, 3 மடங்கு போட்டி போட்டுக்கொண்டு போடுகிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்ட மக்கள் நிலவரியே கட்ட முடியாமல் இருக்கும்போது லோக்கல் செஸ் எப்படி கட்டப் போகிறார்கள்? ஆகையால், ஊராட்சி ஒன்றியங்கள் கொடுக்கும் லோக்கல் செஸ்ஸை ரத்து செய்துவிட்டு அரசாங்கமே அதை மானியமாகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் இன்றைய நிலையில் ஒழுங்காக நடைபெறவில்லை. குறிப்பாக ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் பள்ளிக்குச் சரியாகச் செல்வதில்லை. காரணம், அங்கே இரண்டுவிதமான நிர்வாகம் இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஒரு ஆசிரியரை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அவரால் முடியாது. அவர் மாவட்ட கல்வி அதிகாரிக்குச் சிபாரிசு செய்து, மாவட்ட கல்வி அதிகாரிதான் ஆசிரியரை மாற்ற வேண்டும். ஆணையர் ஊரகத் துறையைச் சேர்ந்தவராகவும், மாவட்ட கல்வி அதிகாரி கல்வித் துறையைச் சேர்ந்தவராகவும் இருப்பதால் அவர்களுக்குள் கருத்து ஒற்றுமை இல்லை. அதனால் ஆணையர் மாற்ற வேண்டுமென்று சொன்னாலும் மாவட்ட கல்வி அதிகாரி மாற்றுவதில்லை. ஆகையால் ஆசிரியர் களை நேரடியாக ஆணையரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும்.

அதைப்போல டிபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் இன்ஸ் பெக்ஷனுக்குப் போகும்போது ஆசிரியர்கள் அவரை மதிப்பதில்லை. காரணம் ஆசிரியர்கள் மீது வேலை நீக்கம், அல்லது வேலை மாற்றம் அல்லது வேறுவிதமான நடவடிக்கை எதுவும் அவரால் எடுக்க முடியாது; அந்த அதிகாரம் அவருக்குக் கிடையாது. அதனால் ஆசிரியர் தவறு செய்தால், அதுபற்றி ஊராட்சி ஒன்றிய கமிஷனருக்கு அவர் தெரியப்படுத்த வேண்டும். இங்கே டிபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் கல்வித் துறையைச் சேர்ந்தவராக

இருப்பதால் ஆணையர் அவர் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. அதனால் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை யாரும் கட்டுப்படுத்த முடியவில்லை.

நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் எனது தொகுதியைச் சேர்ந்த சாக்கோட்டை ஒன்றியத்திலும் கள்ளல் ஒன்றியத்திலும் அதிகாரிகளுக்கிடையே இருக்கிற கருத்து வேற்றுமைகளினால் தவறு செய்த ஆசிரியர்களை சென்ற ஆண்டு இட மாற்றம் செய்ய முடியவில்லை. தவறு செய்யும் ஆசிரியர்களை கண்டிக்கும் அதிகாரம் ஆணையருக்கு இருந்தால்தான் ஊராட்சிப் பள்ளிகள் நல்லமுறையில் நடைபெற முடியும். அல்லது கோட்ட ஆட்சி அதிகாரிக்காவது அந்த அதிகாரம் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஆசிரியர்களை இடம் விட்டு இடம் மாற்றம் செய்வதில் சிக்கல் இல்லாமல் இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஊராட்சி ஒன்றியத்திலே வசூல் செய்யும் வேலையை கர்ணம், ஹெட்மன் செய்கிறார்கள். கர்ணமும் ஹெட்மனும் வசூல் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. காரணம் அவர்கள் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் ஒன்றியத்திலிருந்து வரும் ஆணைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதில்லை. அதனால் கர்ணம், ஹெட்மன் போன்றவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் வர வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், பூச்சி மருந்து தெளிப்பதற்கு கிராம சேவக்கள் ஒரு விவசாயிக்கு எத்தனை எக்கர் நிலம் இருக்கிறது, என்ன சாகுபடி செய்கிறார் என்பது குறித்து சான்றிதழ் கொடுக்க வேண்டும். ஆனால் அவரிடம் இந்தத் தகவல்கள் இருக்காது. அவர் கர்ணம், ஹெட்மன் உதவியை நாட வேண்டும். அவர்களிடம் போய் கேட்கும் போது அவர்கள் சரியாக, உடனடியாகக் கொடுப்பதில்லை. அதனால் குறிப்பிட்ட நேரத்தில் அவர்களால் சான்றிதழ் வழங்க முடியவில்லை. ஆகவே, கர்ணம், ஹெட்மன் போன்றவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1978 மார்ச் 10]

* **திரு. மு. சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது ஒரு சிறு அரசாங்கத்தைப் போன்றது. அந்த இலாகாவில் இருக்கும் அதிகாரிகள் எல்லாம் கமிஷனருக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். அங்கு இருக்கக் கூடிய பெருந்தலைவருக்கு எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கு ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கிற ஜில்லா பரிஷித்துக்கு இருக்கும் அதிகாரங்களை எல்லாம் கொடுக்க வேண்டும்.

இங்கே பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற கமிஷனரை யூனியன் செயலாளராக மாற்றி, அவர் பெருந் தலைவரின் கீழ் செயல்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் நல்ல முறையில் செயல்பட வாய்ப்பு இருக்கும்.

(முற்பகல் 10-40)

கமிஷனர்களை ஒன்றியச் செயலாளர்களாக நியமிக்க வேண்டும். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒவ்வொரு ஊராட்சியிலும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை (அட்வைசரி கமிட்டி) ஏற்படுத்த அரசால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு, மேலும் ஊராட்சி நிர்வாகத்தில் சிக்கலைத்தான் ஏற்படுத்துமே ஒழிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தாது.

எல்லாப் பகுதிகளிலும் 5 மைல் சுற்று வட்டாரத்திற்குள் உயர் நிலைப்பள்ளி இருக்க வேண்டுமென்ற அரசுக் கொள்கையைத் தீவிரப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பள்ளிகளுக்கு நிரந்தர கட்டிடங்கள் இல்லை. எல்லாப் பள்ளிகளுக்கும் நிரந்தர கட்டிடம் கட்டித் தர அரசு உடனே செயல்பட வேண்டும்.

மூன்றாவது வகுப்பு வரை மாணவர்கள் தேர்வு இல்லாமல் படிப்பது என்ற அரசின் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். கிராமங்களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும்

மாணவர்கள் பேரில் அதிக கவனம் செலுத்துவதில்லை. ஆரம்பக் கல்விதான் மாணவர்களுக்கு 'நாற்றங்கால்' போன்றது. ஆகவே தேர்வு முறையை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமச் சாலைகள் அபிவிருத்தி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, விவசாயத்திற்கு மின் இணைப்பு வசதி என்பது நமது அரசின் முக்கிய கொள்கையும் நோக்கமுமாகும். ஆகவே, எல்லா நகரங்களையும் இணைக்கும்படியான கிராமச் சாலைகளை அபிவிருத்தி செய்து போக்குவரத்திற்கு தடை இல்லாமல் ஏற்பாடு செய்யவேண்டும்.

முக்கியமாக எனது தொகுதியில் மூங்கில்துறைபட்டு சர்க்கரை ஆலை பகுதியிலிருந்து உளுந்தூர்பேட்டை வரையில் கள்ளிப் பாடி, திருவரங்கம் கூவனூர், தகடி, திருக்கோவிலூர், கீழ்த்தாய னூர், பழங்கூர் நாத்தாமூர், கிளியூர், பிள்ளையார்குப்பம் வழியாக உளுந்தூர்பேட்டைக்கு சாலை அமைத்து இந்தச் சாலையில் குறுக்கிடும் 'முசு குந்தா' நதியிலும், கடிலம் நதியிலும் இரண்டு பாலங்கள் அமைத்து பஸ் போக்கு வரத்திற்கு வசதி செய்து தர வேண்டும். இதனால் சாலை தூரம் சுமார் 60 மைலிலிருந்து 30 மைலுக்குக் குறையும்.

எனது தொகுதியிலுள்ள மணலூர்பேட்டைக்கு அருகில் குறுக்கிடும் பெண்ணையாற்றில் ஒரு தரைப்பாலம் (காஸ்வே) அமைக்க மறைந்த அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் காலத்தில் திட்டமிடப்பட்டு இன்று வரையில் நிறைவேறுமல் உள்ளது. இதனை அரசு கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா கிராமங்களிலும் போக்குவரத்து ஏற்படும் வகையில் உடனடியாக ஜீப் சர்வீஸ் விட ஏற்பாடு செய்ய வேண்டும்.

எனது தொகுதியில் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கோரி மனுக்கள் கொடுத்து பல ஆண்டுகளாகியும் இதுவரையில் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அரசு இதனை உடனே கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. மு. சுந்தரம்]

ஊராட்சிப் பணிகளைக் கவனிப்பதற்காக ரெவின்யூ டிவிஷனல் மட்டத்தில் தனி உதவிப் பொறியாளர் (அசிஸ்டென்ட் என்ஜினியர்) நியமித்து அந்த வருவாய் கோட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி வளர்ச்சிப் பணிகளை அந்த உதவிப் பொறியாளரே கண்காணிக்கும்படியான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இதனால் வளர்ச்சிப் பணிகள் துரிதமாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படும், கிராமச் சாலைகளைப் பாமரிப்பதற்காக ஒரு வருவாய் கோட்டத்திற்கு இரண்டு ரோடு உருளைகள் (பவர் ரோடு ரோலர்) ஒதுக்கப்பட வேண்டும்.

கிராமக் குடிநீர் வசதிக்காக ஊராட்சி ஒன்றியமும், குடிநீர் வடிகால் வாரியமும் தற்போது மேல்நிலைத் தொட்டி கட்டி வருகிறது. இதனை மாற்றி எல்லா மேல்நிலைத் தொட்டிகளும் ஊராட்சி ஒன்றியமே கட்டுவதற்கு அரசு வகை செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியம் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளை ரூ. 25,000 செலவில் கட்டி வசதி செய்துகொடுக்கிறது. இதே மேல்நிலைத் தொட்டியைக் கட்ட குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 50,000 செலவழிக்கிறது. ரூ. 50,000 செலவு செய்தால்கூட வேலைகள் தரமானதாக இல்லை. க்ராக்ஸ் இருக்கின்றன. பராமரிப்பும் சரியாகச் செய்படுவதில்லை. குடிநீர் வடிகால் வாரியம் போடுகின்ற பைப்ஸும் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே அவற்றை ஊராட்சி ஒன்றியமே பராமரிப்பு செய்தால் செலவும் குறையும், மக்களுக்கு நல்லமுறையில் குடிநீர் கிடைக்கவும் செய்யும்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ரிஷிவந்தியத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரியலூரில் உள்ள ஒன்றிய அலுவலகத்தின் பக்கத்தில் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டடம் கட்டி, நான்கு ஆண்டுகளாக அது காலியாக இருக்கிறது. இங்கேயோ வாடகைக் கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. ஆகவே ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை கவர்ன்மென்ட் டிஸ்பன்ஸரியாக மாற்றி அரியலூரில் நான்கு ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப்பட்டு காலியாக இருக்கும் அந்த இடத்திற்கு மாற்றி இரண்டு பகுதி மக்களுக்கும் வைத்திய வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தையும் வெவ்வேறு இடங்களில் கட்டி அப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலூகா தலைமையகத்திலுள்ள மருத்துவ மனையில் எக்ஸ்ரே யூனிட் வைத்தும், அதேபோல் ஆப்பரேஷன் தியேட்டர் அமைத்து, ரிசர்ச் லாபரட்டரி வசதியையும் செய்து கொடுக்க வேண்டும். கிராமத்தில் ஒருவருக்கு ஒரு விபத்து ஏற்பட்டால் எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்றால் 48 மைல் தூரம் போகவேண்டியிருக்கிறது. அப்படிப் போய் வர ரூ. 200, 300 செலவாகிறது. எனவே ஒவ்வொரு தாலுகா தலைமையக மருத்துவமனையிலும் கட்டாயம் ஒரு எக்ஸ்ரே யூனிட் அமைக்கப்பட வேண்டும் லாபரட்டரி வசதி, ஆப்பரேஷன் தியேட்டர் இவைகளும் கட்டாயம் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

தமிழகத்திலுள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் அதன் வரத்து வாய்க்கால்கள் ஆழப்படுத்தப்படாமல் பல ஆண்டுகளாக தூர்ந்து போயிருக்கின்றன. அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து எல்லா ஏரி, குளங்களையும் ஆழப்படுத்தி செப்பனிட வேண்டும். திருக்கோவிலூர் பொதுப்பணித்துறை ஏரியை டி.சி. ஆர். ஸ்கீமில் எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகளின்மேல் ஆதிக்கம் செலுத்தும் 'கரைப் பங்கு' முறையை நீக்கி அரசாங்கம் நேரிடை நிர்வாகத்தில் கொண்டுவர உடனே அரசு செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கெள்கிறேன்.

கிராம கூட்டுறவு விவசாயச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை ஆனுவல் க்ரெடிட் கார்ட் ஸிஸ்டம் மூலம் அமல் செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு கால்நடை அபிவிருத்தி மனைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆர்டிபிஷியல் இன் ஸெமினேஷன் சென்டர்ஸ் கட்டாயம் அங்கு இருக்க வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர், செஞ்சி போன்ற இடங்கள் தொழிற் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். அங்கு தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதை ஊக்குவிக்கும் முறையில் அந்த இடங்களை 15 சதவிகிதம் சென்ட்ரர் ஸப்ஸிடி பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சங்கராபுரம் பகுதியில் மாமண்டூரில் செப்புமலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள செம்பு, வெள்ளி, ஈயம் போன்ற கனி வளத்தை ஆய்வு செய்வதை தீவிரப்படுத்தி அதில் வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கி வேலையை துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு காகித ஆலை ஒன்றை அமைக்க திட்டமிட்டிருப்பதாக அறிவித்தார்கள். எனது மாவட்டத்தில் ஐந்து சர்க்கரை ஆலைகள் உள்ளன. மேலும் ஒன்று ஆரம்பிக்கப் பட உள்ளது.

அதோடு திருக்கோவிலூர் சுற்றுவட்டாரத்தில் ஏறக்குறைய 5,000 ஏக்கர் காடு நிலங்களில் காகிதம் செய்வதற்கான மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, வைக்கோல் கிடைக்கிறது, மூங்கில் கிடைக்கிறது. இவைகளைப் பயன்படுத்தி அங்கே திருக்கோவிலூர் பகுதியில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

* **திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மேம்பாட்டிற்கான புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்தை பிரதிபலிக்கும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

பெரும்பாலான கிராம ஊராட்சி மன்றங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. தற்போது ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், ஆலமரத்தடி, புளிய மரத்தடி கோவில் திண்ணை, விடுமுறை நாட்களில் பள்ளிகூடங்கள் ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. அலுவலகம் இல்லாததால் பல ஊராட்சிகளில் கூட்டம் நடத்தியதாக நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் எழுதி உறுப்பினர்களின் கையொப்பம் பெறப்பட்டு வரப்படுகிறது. அலுவலகக் கட்டிடம் இல்லாததால் புயல், மழை, வெள்ள காலங்களில் பதிவேடுகளை எப்படிப் பாதுகாப்பது என்பதெல்லாம் பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஆகவே ஊராட்சி மன்றங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்ட வேண்டியது மிக அவசரமும், அவசியமும் ஆகும். ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதிய நிதி வசதி இல்லாத ஊராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்து முன்பணம் அளித்து, அப்படி முன்பணம் பெறப்பட்ட ஊராட்சிகளுக்கு வருமானம் வரும்போது சுலபத் தவணைகளில் பிடித்தம் செய்யும் நிபந்தனையின் பேரில் முன்பணம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலான ஊராட்சி மன்றங்களில் உள்ள சாலைகள் பழுதுபட்டு குழிவிழுந்த நிலையில் போக்குவரத்திற்கு இலாயக்கில்லாமல் இருந்து வருகின்றன. இந்த நிலையைப் போக்குவதற்கு வழியே இல்லையா என்ற ஏக்கம் ஊராட்சித் தலைவர்களின் உள்ளங்களில் ஒரு கேள்விக் குறியாக உள்ளது.

ஊராட்சிச் சாலைகளைப் பொறுத்தவரையில் அதைப் பராமரிப்பது ஊராட்சிகளுக்குப் பெரும் சுமையாக உள்ளது. ஆகவே, ஊராட்சிச் சாலைகளுக்கு என்று அரசு சிறப்பு நிதி ஒதுக்கி பராமரிக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களால் மண் சாலைகள் அமைக்கப்பட்டு கப்பி போடப்பட்டுப் பல ஆண்டுகளாக சாலைகள் என்ற பராமரிப்பில் இருந்துவரும் பெரும்பாலான சாலைகள் இன்று வரை சாலைகளாக சர்வே செய்யப்படாமல் தனிப்பட்ட நபர்களின் பட்டா நிலமாகவே பதிவேடுகளில்

1978 மார்ச் 10] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

உள்ளன. எனவே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நில அளவையாளர் (பீல்டு சர்வேயர்) ஒருவரை நியமனம் செய்து ஊராட்சி ஒன்றியச் சாலைகளை சர்வே செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை அரசு ஆணை நிலை எண். 113, நாள் 21—1—77-ன்படி ஊராட்சி மற்றும் ஒன்றிய வேலைகளுக்கு தொழில் நுணுக்க அனுமதி ஒன்றியப் பொறியாளருக்கு ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வேலைகள் அளவு, மேல் அளவுகள் தற்சமயம் ஒன்றியப் பொறியாளரால் அளவு செய்யப்பட்டு, உதவிக் கோட்டப் பொறியாளரால் மேலளவு செய்யப்படுகிறது. இதை மாற்றி சமூக நலத் துறை அரசாணை எண். 879, நாள் 15—11—71-ல் உள்ளது போல் ஒன்றிய மேற்பார்வையாளர் ரூ. 5,000-க்குட்பட்ட வேலைகளுக்கு அளவுகள் எடுக்கப்பட்டு ஒன்றியப் பொறியாளர் மேலளவு செய்தால் ஊராட்சி ஒன்றிய வேலைகள் துரிதமாக நடைபெறும். எனவே, இதற்கு ஆணையிட வேண்டுகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கே. பண்ணை சேதுராம்

இதுவரையில் இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் உள்ள தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்தப்படவில்லை. மீட்டர் வாங்குவது யார் என்பதில் இதுவரை முடிவான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. எனவே உடனடியாக அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் மீட்டர் பொருத்த முடிவான ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

மின் விளக்குகளுக்குத் தேவையான பல்பு, சோக்கு, ஸ்டார்ட்டர் முதலியவற்றை சிறப்பங்காடியில் தான் வாங்க வேண்டும் என்பதால் சிறப்பங்காடிகளில் ஆர்டர் கொடுத்து தேவைப் பட்டியல் (இன்டெண்ட்) போட்டு வாங்கித்தாக் கால தாமதம் ஆகிறது. ஆகவே அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்தி ஊராட்சி மன்றங்கள் தேவையானவற்றை உடனடியாக வாங்கிக் கொள்ள ஆணைப் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

நமது புரட்சித் தலைவர் அரசு எல்லாக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதில் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. இதற்காக எனது பாராட்டுதல்களைத்

தெரிவித்துக் கொள்வதோடு, இதுவரையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட கிராமங்களில் உள்ள ஆழ்குழாய்க் கிணறு குடி தண்ணீர் பம்புகள் அடிக்கடி பழுதுபட்டு பொது மக்கள் குடி தண்ணீருக்கு அவதிப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. தற்போது 100 ஆழ் குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்க ஒரு மெக்கானிக் நியமிக்கப்பட்டுள்ளார். ஆணையாளர் மூலமாக அவருடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. அவரால் முடியாதவற்றை மாவட்ட மட்டத்தில் உள்ள குடிநீர் வாரிய மெக்கானிக் வந்து சீர் செய்ய வேண்டியுள்ளது. இதனால் கால தாமதம் அதிகமாகிறது. குடி தண்ணீர் பிரச்சினை மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியுள்ளதால் ஊராட்சியில் உள்ள பகுதி நேர எழுத்தர்களுக்குப் பயிற்சி கொடுத்து பழுதாகக் கூடிய பகுதிகளை ஊராட்சி நிதியிலிருந்து வாங்கிக் கொள்ள அனுமதித்தால் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய முடியும்.

ஊராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டதாக ஆணையிடப் பட்டு ஏட்டளவில் இருக்கும் புறம்போக்குகள் பட்டியலில் இடுகாடு, சுடுகாடு, மேய்ச்சல் தரை, களம்புறம்போக்கு, நத்தம் புறம்போக்குகளைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த ஊராட்சி முயலும்போது ஏற்படும் வழக்குகளால் வீண் செலவு ஏற்படுவதோடு வழக்குகளிலும் வெற்றி கிடைப்பதில்லை.

ஆகவே ஊராட்சி அலுவலகம், கிணறு, வானொலி மன்றக் கட்டிடங்கள், பூங்கா, படிப்பகம், பாலர் பள்ளிக் கட்டிடங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு மேற்கண்ட புறம்போக்குகளில் தேவையான நிலத்தை ஊராட்சியைச் சம்பந்தப்படுத்தாமல் கோட்டாட்சித் தலைவரே தேவையான நடவடிக்கை எடுத்து ஊராட்சிக்கு ஒதுக்கித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்களால் கொடுக்கப்படும் கொடுப்பாணைக்கு இணைப்புத் தாள் கொடுக்கப்பட்டு, அதில் மேற்பார்வையாளர், ஒன்றியப் பொறியாளர், ஊராட்சி வளர்ச்சி அலுவலர், ஆணையர் ஆகியோரின் கையொப்பம் பெறப்பட்ட பின்புதான் காசோலை மாற்ற முடிகிறது. இதனால் சிப்பந்தி களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட காலதாமதமாகிறது. ஆகவே,

இதுசம்பந்தமான அரசாணையை ரத்து செய்து இணைப்புத் தாள் இல்லாமல் பழைய ஆணைப்படி தலைவரே நேரடியாக காசோலையை மாற்றிக் கொள்ள ஆணைப் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஊராட்சி வரியினங்களை வசூல் செய்யும்போது ஒவ்வொரு வரியினத்திற்கும் கேட்புப் பதிவேடுகளை வைத்துக் கொண்டு மூன்று ரசீதுகள் எழுதிக் கொடுக்க வேண்டி உள்ளது. இதனால் நிலுவைப் பதிவேடுகள் குவிந்து, வரி வசூலிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது.

ஆகவே ஊராட்சி மன்றங்களின் வீட்டு வரி, வண்டி வரி, தொழில் வரிகளை வசூலிக்கும்போது வருவாய்த் துறை அதிகாரிகள் கேட்புப் பதிவேடுகள் வைத்துக் கொண்டு ரசீது எழுதி, வசூலிப்பதைப்போல் ஊராட்சி வரியினங்களையும் வசூலிக்க ஏற்பாடு செய்தால் நிலுவைப் பதிவேடுகளும் குவியாது, வரி வசூலும் துரிதமாக வசூலிக்க முடியும். அதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தற்போது கிராம நல ஊழியர்கள் தங்கள் பணிக் காலங்களில் பெரும் பகுதியினை வெளிப்புற வேலையிலேயே கழித்து விடுகின்றனர். இந்த நிலையில் அவர்கள் அலுவலகத் துறை சம்பந்தமான பணிகளில் ஈடுபட வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. இவர்கள் பதவி உயர்வு பெற்று கல்வி விரிவாக்க அலுவலர், ஊராட்சி விரிவாக்க அலுவலர் பதவிகளை வகிக்க இவர்களுக்கு நிர்வாகத் திறன் தேவைப்படுவதால் கிராம நல ஊழியர்கள் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை ஊழியர்களாகப் பதவி உயர்வு பெற்றபின் சில காலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உதவியாளராகப் பயிற்சி பெற வகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறாமல் ஊராட்சித் தலைவர்களை பல நூறு மைல்களுக்கு அப்பால் கடத்திக் கொண்டு போய் மறைத்து வைத்திருந்துதான் பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக வர முடிந்தது. இதனால் மக்கள் செல்வாக்குள்ள நேர்மையாளர்கள் தேர்தலில் நிற்க முடியாமல் பணம்

படைத்தவர்கள் மட்டுமே தேர்தலில் நின்று வெற்றி பெற முடிந்தது. இதை நன்குணர்ந்த புரட்சித் தலைவர் அரசு ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வகை செய்தமைக்காக இந்த அரசுக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டாரங்களில் உள்ளூர் செஸ் மேல் வரி உச்சவரம்பு ரூ. 2.50 ஆக இருப்பதை மேலும் அதிகரிக்க இந்த அரசு ஆலோசித்து வருவது கிராமத்திலுள்ள விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். எனவே, அதைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 12,500-க்கு மேற்பட்ட கிராம ஊராட்சி மன்றங்களில் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் ஊராட்சி வளர்ச்சிப் பணிகள் ஸ்தம்பித்துள்ளன. ஆகவே நிதி வருவாயைப் பெருக்க மத்திய அரசு கடனுகவோ, மானியமாகவோ ஒரு தொகை ஒதுக்கித் தருமாறு இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்ளலாம் என்ற என்னுடைய கருத்தைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றியம், பொதுப்பணித் துறை, வருவாய்த் துறைகளுக்குச் சொந்தமான குளம், ஏரிகளில் உள்ள மீன் பாசியை ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பதுடன் ஏலம் விடும் உரிமையையும் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கே மீண்டும் தர ஆணையிட வேண்டுகிறேன்.

பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறைகளுக்குச் சொந்தமான பலன் தரும் மாங்களின் காய்ப்பு மகசூலை ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பதுடன், ஏலம் விடும் உரிமையையும் ஊராட்சி மன்றங்களுக்கே தர ஆணையிட வேண்டி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

* **திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் நிலையை தெளிவுபடுத்த நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதலாவதாக, தேர்தல்கள் சீக்கிரமாக நடத்தப்பட வேண்டுமென்பதை வற்புறுத்த நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

கொள்கை அறிக்கையிலே வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டு விட்டால், சிக்கிரம் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அப்போது பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு, நகராட்சிகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, வாக்காளர் பட்டியல் உடனடியாக முடிக்கப்பட வேண்டுமென்ற கடுமையான ஒரு உத்தரவைப் பிறப்பித்து, சீக்கிரமே தேர்தல்கள் நடைபெற இந்த அரசு அதிக முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பஞ்சாயத்து யூனியன்களுடைய தேர்தலுக்கு அதற்கான சின்னங்கள் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே சட்ட மன்றத்திலே வற்புறுத்தப்பட்டது. அதை ஏற்றுக் கொண்டு, அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்கள் தேர்தலுக்கு, சேர்மன் தேர்தலுக்கு கட்சிச் சின்னங்கள் ஒதுக்கப் பட்டிருப்பதற்காக நான் இந்த அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல், மெம்பர் தேர்தல், யூனியன் சேர்மன் தேர்தல் அதையொட்டி நடப்பதன் காரணமாக, அவர்களுக்கும் கட்சிச் சின்னம் ஒதுக்க வேண்டுமென்று மீண்டும் நான் இந்த அரசை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு ஏற்கனவே வருமானங்கள் இல்லை என்பது பற்றி பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அது ஓரளவு உண்மையும்கூட, பல்வேறு பஞ்சாயத்துக்களுக்கு நிதிநிலை இல்லாததன் காரணமாக, ஆபீஸ் கட்டிடம் கட்டுவதற்கான நிதிநிலைமை இல்லாமல் இருக்கின்றது. இவைகளை எல்லாம் பரிசிலனை செய்து, கட்டிடம் இல்லாமல் இருக்கின்ற கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்கமே முன்வந்து, மற்றத் துறைகளுக்கு எப்படிக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுகின்றதோ, அதைப்போல் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்கமே கட்டிடம் கட்டிக் கொடுக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

லைட் எரிவது பற்றி தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கனவே லைட்டுகள் போடப்பட்டிருப்பதாலும், பல்வேறு பகுதிகளிலே இந்த லைட்டுகள் எரிவதில்லை. பல்வேறு பஞ்சாயத்துக்கள் இப்படி

இருப்பதால், அங்கெல்லாம் பல்புகள் போடப்பட்டு லைட் எரிய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. பழுதுபார்த்த பின் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றிருந்தது. ஆனால், அங்கெல்லாம் லைட்டும் போடப்படவில்லை. மீட்டரும் பொருத்தப்படவில்லை. ஆகவே, உடனடியாக அங்கெல்லாம் நல்ல முறையிலே விளக்குகள் எரிவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மின்சார ஹெல்ப்பரை பஞ்சாயத்தின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவர வேண்டுமெனக் கோருகிறேன்.

அடுத்ததாக, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரி ரிவிஷன் நடத்தப்படுகிறது. இப்போது இந்த ரிவிஷன் என்ற பெயராலே, பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிடிகளிலும் வரிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். சில முனிசிபாலிடிகளிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் அதிகப்படியான வரியைப் போடுகின்றார்கள். இதை அரசு கவனத்தில் கொண்டு தேர்தலுக்குப் பின், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பரிசீலித்து, அவர்கள் இந்த வரியை ரிவிஷன் செய்தால் நல்லது. இப்போது இந்த அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் வரி போடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்து பழைய வரியைத்தான் வசூலிக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்திருந்தும் கூட்டப்பட்ட வரியைத்தான் வசூலிப்போமென அதிகாரி கூறுகிறார். இது சரியல்ல.

கடைசியாக, சைக்கிள் வரியைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த வரியைப் போடக் கூடாது என்று தொடர்ந்து இந்த சட்ட மன்றத்திலே வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அரசு ஒரு ஆணையின் மூலம் இந்த சைக்கிள் வரியை வசூலிப்பதை நிறுத்த ஒரு உத்தரவு பிறக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

உள்ளாட்சித் துறையின் பகுதியாக இருக்கக்கூடிய மாவட்ட வளர்ச்சி மன்றம் இரு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று இருந்தபோதிலும், சில மாவட்டங்களில்

1978 மார்ச் 10] [திரு. ஈஸ்வரமூர்த்தி, பி. என்கிற சொரணம்]

கூடுகிறார்கள், சில மாவட்டங்களில் கூடவில்லை என்ற புகார் இருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சட்டசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்பது மாதங்கள் ஆகிவிட்ட பிறகும் இதுவரை ஒரே ஒரு முறை தான் கூடியிருக்கிறது. இதிலே அரசு தலையிட்டு அப்படிக் கூட்டாத மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஒழுங்காக இரு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தேர்தலுக்கு ஏற்பாடு செய்திருப்பதாக இருக்கிறது. இடைக்காலத்தில் ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். எங்கள் மாவட்டத்தில் சில இடங்களில் அப்படிப்பட்ட கமிட்டிகள் அமைக்கப்படவில்லை. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆலோசனைக் குழுவை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆலோசனைக் குழுவுக்காக கட்சியைச் சார்ந்தவர்கள் தங்கள் கட்சிப் பிரதிநிதி பெயர்களைக் கொடுத்தால் ' நீங்கள் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது; நாங்கள் எங்கள் இஷ்டப்படிதான் போடுவோம்' என்று தஞ்சை கலெக்டர் கூறுவதாக அரசுக்குப் புகார் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு கட்சிக்காரர்கள் சொல்லக்கூடிய உறுப்பினர்களைத்தான் ஆலோசனைக் குழுவில் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் வரி விதிப்பு முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். எற்கனவே, ஒரு ரூபாய் தண்ணீர் வரி இருந்தால் இரண்டரை ரூபாய் வரை சர்சார்ஜ் போடலாம் என்ற விதி இருக்கிறது. இப்படி இஷ்டப்படி இரண்டரை ரூபாய் சர்சார்ஜ் போடுவது பற்றி மக்கள் மத்தியில் பலமான எதிர்ப்பு இருந்து வருகிறது. சர்சார்ஜ் போடவே கூடாது என்று அரசு உத்தரவிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி போதவில்லை. ஆசிரியர்களுக்குப் பல மாதங்கள் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு இரண்டு மூன்று மாதங்கள் மொத்தமாகச் சம்பளம் கொடுக்கப்படக்கூடிய

நிலையைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் அதிகப்படியான அளவுக்கு மானியம் கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்கு, நகராட்சியில் இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்கு, குறிப்பாக நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள்—அந்த நகர சுத்தி தொழிலாளர்கள் கிராமப் பஞ்சாயத்தில் இருந்தாலும் சரி பஞ்சாயத்து யூனியனில் இருந்தாலும் சரி, நகராட்சியில் இருந்தாலும் சரி, அவர்களுக்கு அரசாங்கமே வீடுகள் கட்டிக் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மாது மாதம் ஒன்றுக்கு பயணப்படி 20 ரூபாய் பெறுகிறார். ஆனால் மருத்துவ மாதுடன் செல்லக்கூடிய ஆயாவுக்கு பயணப்படி கிடைக்காத நிலைமை இருக்கிறது. பயணப்படி ஆயாவுக்கும் உத்தரவிடக் கோருகிறேன். இரவு காவல்கள் நிரந்தரமில்லாத நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டு போதிய அளவு சம்பளம் அளிக்கப் படாமல் இருக்கிறார்கள். அவர்களும் மற்ற சிப்பந்திகளும் நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்பட்டு, அரசு ஊழியர்கள் என்று அறிவித்து அரசு ஊழியர்களின் சம்பளத்தைக் கொடுக்க முன்வர வேண்டும். இடைக்கால நிவாரணமும் அவர்களுக்கு அளிக்க வேண்டும். மரணம் அடைந்தால் கொடுக்கப்படுகிற சலுகையும் மற்ற சலுகைகளும் இவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் நிலை பற்றி ஆராய அண்ணா அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட முருகேச முதலியார் கமிட்டி பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து பல ஆண்டு வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்குப் பதவி உயர்வு பெற நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம சேவக்குகள் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக சர்வீசி லிருந்து கிராம சேவக்குகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் மேல் பதவிக்குவர வாய்ப்பில்லை. அதிகப் படியாக சொர்வீஸ்

ஆனவர்களை இ.ஓ. அக்ரிகல்சர், இ.ஓ. பஞ்சாயத்து, இ.ஓ கூட்டுறவு மற்றும் இது போன்ற பதவி உயர்வு கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நல ஊழியர்களாக ஏற்கனவே இந்த நாட்டில் விடுதலைக்குப் போராடியவர்களில் பலரை நியமித்திருக்கிறார்கள். அவர்களை நியமிக்கும்போது வயது அதிகமாக இருந்திருக்கிறது; அவர்கள் வயது கடந்து ரிடையர் ஆகும்போது அவர்களுடைய குழந்தைகளுக்கு அல்லது அவர் நியமிக்கும் வாரிசுக்கு வேலை கொடுக்கும்படியான நிலைமையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில் ஜனத்தொகை அடிப் படையில், குறிப்பாக 10,000 ஜனத்தொகை இருக்கக்கூடிய பெரிய கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்காத கிராமங்களுக்கு உடனடி யாகத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்ற முறையில் அரசு கவனம் செலுத்தி அவற்றுக்கு முதலிடம் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சிவந்திபுரம் ஊராட்சிக்கு அரசு மானியத்தில் உடனடியாகக் குடிதண்ணீர் வழங்க உத்திரவிட வேண்டுகிறேன்.

நகரியங்களை பொருத்தமட்டில் எட்டு நகரியங்கள் இருப்ப தாகக் கொள்கை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் மூன்று நகரியங்கள் இருக்கின்றன. சங்கர்நகர் டவுன் ஷிப்; மணிமுத்தாறு டவுன்ஷிப்; குற்றாலம் டவுன்ஷிப். குற்றா லத்தைப் பொறுத்தமட்டில் சீசன் என்ற முறையில் பயணிகள் வருகிற இடமாக இருக்கிறது, அதை அப்படியே வைத்துக் கொள்ளலாம். ஆனால் சங்கர் நகரும், மணிமுத்தாறும் டவுன் ஷிப்பாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த நகரியங்களை பிரித்து பக்கத்திலுள்ள முக்கிய நகரத்தோடு இணைத்து பெரிய முனிசிபாலிடிகளாக ஆக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவம் பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விக்கிரமசிங்கபுரத்தோடு மில் ஏரியா சேர்க்கப்பட்டு முனிசிபாலிடியாக ஆக்கி உத்திரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

[திரு. ஈஸ்வரமூர்த்தி, பி. என்கிற சொரணம்] [1978 மார்ச் 10

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது மாநகராட்சியிலே பல இடங்களில் வேலைசெய்யக்கூடிய மின்துறை ஊழியர்களை மின்சார வாரிய ஊழியர்களைப் போல் பாவித்து அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமும் சலுகைகளும் இவர்களுக்கும் அளிக்கப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே மீனாட்சிபுரம் என்ற இடத்திலே 15, 20 வருடங்களாக குடியிருந்த குடிசைகளை எல்லாம் அகற்றிவிட்ட நிலைமை, ரொம்ப மோசமான நிலைமை ஏற்பட்டு அங்கே இருக்கிறவர்கள் பாதிக்கப்பட்டதாக புகார் வந்திருக்கிறது. அதையெல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்து அவர்களுக்கு மீண்டும் அந்த இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. சௌ. வே. வரதராஜன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 34 ஆம் எண்ணுள்ள நகர்ப் பகுதி மேம்பாடு என்ற மானியத்தின்மீது எனக்குப் பேச வாய்ப் பளித்ததற்காக நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களும் அண்ணல் காந்தியடிகளும் கண்ட கனவுகளை நனவாக்கும் விதத்திலே மிகவும் பின்தங்கிய கிராம வளர்ச்சிக்காகவும் பாடுபடுகின்ற நம்முடைய புரட்சித் தலைவரின் அரசு நகர வளர்ச்சிக்காகவும் முக்கியத்துவம் கொடுத்து இருப்பது பாராட்டத்தக்கது. சமுதாயத்தில் நலிந்த வகுப்பினர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய அடிப்படைத் தேவையான சாலை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளை அளிப்பதற்காக நகராட்சிகளில் உள்ள பின்தங்கிய பகுதிகளுக்காக சிறப்பான திட்டங்களைத் தீட்டியிருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தில் சேலம் நகரத்தையும் இணைத்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக வேகமாக வளர்ந்து வரும் சேலம் நகராட்சியை முன்னேற்றுவதற்கான சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. செள. வே. வரதராஜன்]

சேலம் நகராட்சியை இன்றைக்கு மிகவும் முக்கியமாக எதிர் நோக்கியுள்ள பிரச்னை குடிநீர் பிரச்சினையாகும். சேலம் இரும் பாலை அங்கே ஏற்படுவதையொட்டியும், அதனையொட்டி ஏற்படும் தொழில் வளங்கள் பெருகக்கூடிய நிலையில் நகரின் விஸ்தரிப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அங்கே மேட்டூர் அணையி லிருந்தும் பனைமரத்துப் பட்டியலிருந்தும் குடிநீர் கிடைக்கிறது, ஆனால் அது அங்கேயுள்ள மக்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யவில்லை. எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துவிடும். சேலம் நகரத்திற்கு அருகா மையில் உள்ள மலைகளில் ஓடிவருகின்ற தண்ணீரை சேலம் நகருக்கு அருகிலே உள்ள சிறு ஏரிகளில் பாதுகாப்பாகத் தேக்கி வைத்து குடிநீர் வசதி ஏற்பாடு செய்யலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். இருமாபாளையம்காட்டேரி அணையைக் கட்டினால் சேலம் நகருக்குத் தண்ணீர் பிரச்சினை போக்கப்பட முடியும். ஆகவே அதை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகரத்திலே சுகாதாரத்தைப் பேணிக் காக்கும் முறையிலே நீண்ட நெடு நாட்களாகச் சொல்லப்படுவது பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்துவதாகும். அதற்காக திட்டம் 6.96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே நகராட்சியாலே தீட்டப்பட்டு அது ஊரக வளர்ச்சி இயக்குநரிடத்திலே இருப்பதாகத் தெரி கிறது. அந்தத் திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் வாங்கிக் கொடுக்க அரசு முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்றும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகரத்தில் உள்ள வீடுகளுக்கு நகராட்சி இப்போது தாங்க முடியாத அளவுக்கு வரியைப் போட்டிருப்பதாக பொது மக்கள் கூறிவருகிறார்கள். ஒரு வீட்டுக்கு மேல் உள்ளவர்களிடம் பல வீட்டுக்குச் சொந்தக்காரர்களிடம் செல்வந்தர்களிடம் வரியை ஏற்றி வாங்குவது சாத்தியமாக இருந்தாலும்கூட ஒரே ஒரு

வீட்டை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், நடுத்தர ஏழை எளிய மக்களிடம் அந்த வரியைப் போடக்கூடாது, ஆகவே அந்த மக்கள் மீது ஏற்றிய அந்த வரிச் சுமையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் நகரத்தில் மின்விளக்குகள் சரியாக எரியவில்லை. இப்போது மின்சார இலாக்காவின் பராமரிப்பில் இருப்பதால் அடிக்கடி எரியாமல் இருக்கிறது. அதனால் பொதுமக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே தெரு விளக்குகளைப் பராமரிப்பதை நகராட்சிகளுக்குக் கொடுத்து அவர்கள் அதற்காக தனியான ஊழியர்களை நியமிக்கக்கூடிய வழியில் ஏற்பாடு செய்து என் றென்றும் மின் விளக்குகள் அங்கே எரியும்படி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகராட்சியாலே கட்டிக்கொடுக்கப்பட்ட கட்டடங்கள் வாடகைக்கு ஏலம் மூலம் விடப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையினால் பெரிய பெரிய வியாபாரிகள் குறிப்பிட்ட தொகைக்கு ஏலத்தில் எடுத்துக் கொள்கிற நிலைமைதான் இருக்கிறது.

(முற்பகல் 11-10)

ஆனால் சிறு வியாபாரிகள், நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற கடைகளை ஏலம் விடும் முறையில் வைத்திருப்பதால் வசதியுள்ளவர்கள் ஏலம் எடுத்து அவர்கள் இஷ்டப்படி நடத்துவதற்கு ஏதுவாக இருக்கிறது. எனவே சிறு வியாபாரி களுக்கு பயன்படும் வகையில் குறிப்பிட்ட வாடகையில் அவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சிறு வியாபாரிகள், நடுத்தர மக்கள் என்று வரும்பொழுது அவர்கள் உண்மையானவர்கள்தானா என்பதை அறிந்து அவர்களுக்கு விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம் சேலம் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் சிறிய அளவிலே இருப்பதால் பேருந்து நிலையத்திலிருந்து வெளிவரும் பேருந்துகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டு பேருந்துகள் வருவதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. இதனால்

1978 மார்ச் 10] [திரு. செள. வே. வரதராஜன்]

பயணிகளுக்கு மிகுந்த தொல்லையாக இருக்கிறது. ஆகவே, பேருந்து நிலையத்தையொட்டி உள்ள பகுதியையும் சேர்த்து அமைத்து நெருக்கடியைப் போக்க அரசு முயற்சி எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் நகரின் மையப்பகுதியில் ஓடும் திருமணிமுத்தாறு பல வகையில் பயன்படுகிறது. அதையும் ஒழுங்குபடுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகராட்சி நிர்வாகத்தில் ஓடும் டாக்சி, ஆட்டோக் களுக்கு கூரைஷெட் இல்லாமல் மழைக் காலத்தில் மழையிலும், வெயில் காலத்தில் வெயிலிலும் நிற்க வேண்டிய சூழ்நிலை இருப்ப தால் அவர்களுக்கு கூரை ஷெட் போட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

பள்ளிகளுக்கு புதிய வகுப்புகள் கொடுக்கும்பொழுது தனிப் பட்ட ஆட்களுக்குக் கொடுக்காமல் நகராட்சிப் பள்ளிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி வளர்ச்சி உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில வார்த்தைகளை நான் சார்ந்துள்ள ஜனதாக் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சி என்ற பெயரால் மத்திய அரசிடத்திலிருந்து அதிக அதிகாரங்களைக் கேட்கக் கூடிய இந்த மாநில அரசு தன்னுடைய மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் இருக்கக்கூடிய ஊராட்சி, நகராட்சித் தலைவர்களுக்கு அதிகமான, கூடுதலான அதிகாரங்களைத் தருவதற்கு இந்த நேரத்தில் முன் வர வேண்டு மென்று அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி, ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் நகராட்சி களுக்கும், ஊராட்சிகளுக்கும் பெரிய நெருக்கடியாக இருக்கக் கூடிய ஒன்று நிதிநிலையாகும். சாதாரணமாக ஒரு சிறிய ரோடு

போடுவது, சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது ஆகியவற்றிற்குக் கூட நகராட்சிகளின் நிதிவசதி இடம் கொடுக்காததால் அவைகளைச் செம்மையாகச் செயல்படுத்த முடியவில்லை. சேலம் போன்ற பெரிய நகரங்களில், மூன்றரை இலட்சம் மக்கள் வசிக்கும் அந்த நகரில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் வருமானம் வந்தாலும் நிர்வாகச் செலவுக்கே 60 சதவிகிதம் அதாவது 120 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குச் செலவிடப்படக் கூடிய நிலைமையிருக்கிறது. இந்த நிலையில் அந்த நகராட்சி எப்படி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று அரசு சிந்திக்க வேண்டும்.

நாட்டிலே உள்ள தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும், மனிதரிலே உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. தீண்டத்தகாதவர்கள் என்ற நிலையைப் போக்க வேண்டுமென்பதற்காக கலப்புத் திருமணங்கள் நடைபெற்றால் அந்தத் திருமணத்தைச் சட்டபூர்வமானதாக ஆக்கி அவர்களுக்குத் தங்க மெடல்கள் வழங்கப்படக்கூடிய இந்த அரசில் மனிதனுடைய மலத்தை மனிதனே எடுக்கக்கூடிய அவல நிலையைப்போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மனிதனுடைய மலத்தைத் தலையிலே சுமந்து செல்லும் நிலையைப் பஞ்சாயத்துக்களிலும், சில நகராட்சிகளிலும் போக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இது நாகரிக உலகத்தில் மிகவும் அவமானகரமான செயலாகும். ஆகவே, இந்த நிலையைப்போக்க முன்வர வேண்டும். எனவே, முனிசிபல் ஏரியாக்களிலாவது முதலில் இந்த அவல நிலையைப் போக்க பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். சேலம் நகர பாதாள சாக்கடை திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை போன்ற பெரு நகரங்களின் வளர்ச்சிக்காக உலக வங்கி, உலக நாடுகள் மத்திய அரசினுடைய உதவியுடன் பெருநகர் வளர்ச்சி மேட்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் சேலம் போன்ற நான்காவது ஸ்தானத்தில் இருக்கும் பெருநகரில், குறிப்பாக இரும்பாலை சேலத்தில் ஏற்பட்டு வேலைகள் துரிதமாகத் துவங்கி விட்டன,

1978 மார்ச் 10] [திரு. எம். ஆறுமுகம்]

நகரம் நாளும் விரிவாகிக்கொண்டே வருகிறது. அத்தகைய சேலம் நகரம் பெருநகர் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு ஏன் அரசினுடைய கவனம் வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். சேலம் நகரை உடனடியாக பெருநகர் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலை ஏற்படக்கூடிய நோக்கில் மக்களுடைய வேலை வாய்ப்புகள் பெருகி புதிய குடியிருப்புகள் ஏற்பட இருக்கின்றன. அப்படிப்பட்ட குடியிருப்புகளை சட்ட விரோதமான கட்டுமானங்களாக ஆங்காங்கு ஏற்படுத்தி நகரின் வருங்கால அழகையே கெடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

ஆகவே, நகராட்சிகளிலே மட்டுமல்லாது, இரும்பாலையைச் சுற்றியுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் நகரமைப்புத் தொழில் நுட்ப அலுவலர்களை நியமித்து, இம்மாதிரி சட்ட விரோதமான கட்டுமானங்களைத் தடை செய்வதற்கும், அவைகளை ஒழுங்கு படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரைக்கும் 1920 ஆம் ஆண்டு, சென்னை மாவட்ட நகராட்சி சட்டம் இயற்றப்பட்டது. 58 ஆண்டுகளுக்குப் பின்பு, இப்பொழுது நாட்டிலே எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நகர்புற நில உச்சவரம்புகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த முனிசிபல் சட்டத்தில், நகரமைப்பு பிரிவில், ஏற்கனவே 50, 55 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட கட்டிட அமைப்பு பற்றிய விதிகள், காலப் போக்கிற்கு ஒத்துவராமல் இருக்கின்றன. எதற்கெடுத்தாலும், ஸ்கீம் ஏரியா என்று எடுத்து, திட்டப் பகுதியைப் புகுத்தி, மக்கள் அன்றாடம் சில கட்டுமானங்களைக் கட்டுவதற்கும், மாண்புமிகு நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சிறுதொழில் களை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலைக்கும் இந்தத் திட்டவிதிகளான அமுட்டுக்கட்டையாக முரணாக இருக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆகவே, திட்ட விதி என்பதைத் தளர்த்தி, கட்டிட விதிகள் மட்டும் பொருந்தினால் போதுமானது என்ற முறையில், நகரமைப்பு விதிகள் கொண்டு வர அந்த நோக்கத்தோடு சட்டத்தை மறுபரிசீலனை செய்ய ஒரு உயர்மட்டக் குழுவை இந்த அரசு அமைத்து, அன்றாடம் ஏழை, எளிய மக்கள் கட்டிடங்கள் கட்ட லைசன்ஸ் பெறுவதற்கு உள்ள காலதாமதத்தைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கூரைகளை, ஓலைக் கூரை வில்லைக் கட்டிடமாக மாற்றுகிற பொழுது, அல்லது ஓட்டு வில்லை கூரைகளை தார்சு கட்டிட மேற்கூரையாக மாற்றும்போது, புதிய கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் விதிகளைப் புகுத்தி, அந்தக் கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு நகராட்சி அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். ஒரு புதிய கட்டிடத்திற்குப் பொருந்தக்கூடிய விதியானது, பழைய கட்டிடத்தை மாற்ற மராமத்து செய்யும் பொழுது எவ்வாறு பொருந்தும் என்பதை இன்றைய அரசு உணரவேண்டும். இதனால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சேலம் மாநகரில் 7,000 தெருவிளக்குகள் இருக்கின்றன. கடந்த 6, 7 மாதங்களாக அது எரியவில்லை. அதுபற்றி, சென்ற 77-78 நிதிநிலை அறிக்கைவிவாதத்திலேயே எடுத்துக் கூறி இருக்கிறேன். நாள் ஒன்றுக்கு 200, 250 புகார்கள் வருகின்றன. ஆனால், ஒரு நாளைக்கு 30, 40 விளக்குகள்தான் பழுது பார்க்கப்படுகின்றன. காரணம், தமிழ்நாடு மின்சார வாரியத்திலே பணிபுரியும் பணியாளர்கள் சேலத்தில் போதுமான அளவு இல்லை. கோயம்பத்தூர், மதுரை, கரூர் போன்ற நகராட்சிகளில் மின்சார விநியோகத்தைக் கட்டுப்படுத்தவும், மின்சாரக் கம்பங்களில் புதிய விளக்குகளைப் பொருத்துவதற்கும், பழுதடைந்த விளக்குகளை மாற்றுவதற்கும் அந்தந்த நகராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதே முறையில், சேலம் நகராட்சிக்கும், பழுதடைந்த பல்புகளை மாற்றவும் கம்பம் நட்டுள்ள இடங்களில் புதிய விளக்குகளைப் பொருத்தவும் அதிகாரம் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரை, எரிகிற மின்சார அளவிற்குக் கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்து கொண்டு அந்த கம்பங்களைப் பராமரிக்கும் பொறுப்பை நகராட்சியிடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. எம். ஆறுமுகம்]

தலைமைச் செயலகத்தில் 4 கிளார்க்குகள் வேலை செய்யக்கூடிய பிரிவுக்கு ஒரு செக்ஷன் ஆபீசர் இருக்கிறார். ஆனால், நகராட்சிக்களை எடுத்துக் கொண்டால், 8 கிளார்க்குகள் முதல் 10 கிளார்க்குகள் வரை வேலை செய்யக்கூடிய பிரிவுக்கு ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க் இருக்கிறார். அதனால், அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. ஊழியர்கள் குறைவாக இருக்கிறார்கள். மக்களுடைய அன்றாடப் பிரச்னைகள் இதனால் தாமதிக்கப் படுகின்றன. மக்களுக்குத் தேவையான காரியங்களை உடனடியாகச் செய்ய முடியவில்லை. ஆகவே, நகராட்சிகளுக்குப் போதுமான ஊழியர்களை நியமிக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பொறுத்தவரை சேலம் நகரில், 1973-ம் ஆண்டு ரூ. 159 இலட்சம் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் மேட்டூரிலிருந்து சேலம் நகருக்கு, இரண்டாவது மெயின் லைனைப் போடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம் 1976-வது ஆண்டு பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். ஆனால், 1978-ம் ஆண்டிலும் அந்தத் திட்டம் இன்னும் முழுமை அடையவில்லை. இந்தத் திட்டம் முழுமை அடைந்தால் சேலம் நகருக்கு ஒரு நாளைக்கு 60 இலட்சம் காலன் தண்ணீர் வருமென்பது குறிக்கோள். தற்பொழுது 40 இலட்சம் காலன் தண்ணீர்தான் வந்து கொண்டிருக்கிறது. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சராசரி 20 காலன் தண்ணீர் வழங்க வேண்டுமென்பது குறிக்கோள். ஆனால், இப்பொழுது 10, 12 காலன் தண்ணீர்தான் வழங்கப் படுகிறது. தமிழ்நாடு வடிகால் வாரியத்தினர் அந்த வேலையை மெதுவாகச் செய்கிறார்கள். அதனால் குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும், அடிக்கடி மெயின் லைனில் உடைப்பு ஏற்படுகிறது. அதன் விளைவாக, சேலம் நகருக்கு தண்ணீர் வழங்கப்படுவதில் அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுகிறது. திட்டம் பூர்த்தி அடைந்த வரை நகராட்சி வசம் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது.

(முற்பகல் 11.20)

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஆகவே அரசாங்கம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இந்த சேலம் இரண்டாவது மெயின் லைன் போடக்கூடிய

திட்டத்தை துரிதப்படுத்த, வேண்டிய இயந்திரங்களைப் பொறுத்தி விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி இந்த மூன்று பிரிவுகளிலும் பணி புரியும் பொறியாளர்கள் ஒரே தகுதி படைத்தவர்கள். ஆனால் நெடுஞ்சாலை, பொதுப்பணித் துறை போன்ற இடங்களில் பணிபுரியும் பொறியாளர்கள் ஒரு லட்சம் ரூபாய் வரை மதிப்பீட்டை அனுமதிக்கலாம் என்று அதிகாரம் இருக்கிறது. ஆனால் நகராட்சியிலே பணிபுரியும் இன்ஜினியர் 40 ஆயிரம் ரூபாய் வரையில்தான் மதிப்பீட்டை அனுமதிக்கலாம், அதற்கு மேல் சாங்ஷன் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் கிடையாது. நகராட்சிகளில் பணிபுரியும் பொறியாளர்கள் திறமையில் குறைந்தவர்களா? ஏன் இந்த முரண்பாடு என்று தெரியவில்லை. பொதுப்பணித் துறை, ஹைவேஸ்—நகராட்சிகளில் பணிபுரியும் பொறியாளர்கள் அனைவரும் ஒரே அந்தஸ்தை உடையவர்கள். அப்படி ஒரே தகுதியுடைய பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை துறையிலே பணிபுரிபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை அனுமதிக்கும் அதிகாரம் இருக்கும் போது, ஏன் இங்கே உள்ள முனிசிபல் இன்ஜினியருக்கு மட்டும் 40 ஆயிரம் ரூபாய்க்கு மட்டும் மதிப்பீட்டை அனுமதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட அந்த மதிப்பீட்டை எக்சிகூடிவ் இன்ஜினியருக்கு அனுப்ப வேண்டும். அதற்குக் காலதாமதம் ஆகும். இதனால் குறித்த நேரத்தில் காரியங்களை ஆற்ற முடிவதில்லை. ஆகவே இம்மாதிரியான காரியங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும். நகராட்சி பொறியாளர்களுக்கு ரூ. 1 லட்சம் மதிப்பீட்டை சாங்ஷன் செய்ய அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில், விளக்குகளே எரிவதில்லை என்று எனக்குப் புகார் வந்துகொண்டிருக்கிறது. ஒளிமயமான எதிர்காலம் இருக்கும் என்று பேசி வாக்குகள் பெற்று வந்திருக்கிறோம். ஆனால் அங்கே இருள்மயமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே கிராமங்களில் உள்ள விளக்குகள் அத்தனையும் எரியச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1978 மார்ச் 10] [திரு. எம். ஆறுமுகம்]

நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சிகள் தான் பொருட்காட்சிகளை நடத்த வேண்டும் (மணி அடிக்கப் பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிக்கிரம் முடியுங்கள். 11.12 க்கு பேச ஆரம்பித்தீர்கள். 10 நிமிடம் கொடுத்திருக்கிறேன். சிக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: பொருட்காட்சிகளை தனியார்கள் நடத்தக் கூடாது என்று உத்தரவு போடப் போவதாக அறிவித்துள்ளார்கள். ஆனால் சேலம் போன்ற பெருநகரில் 43 நாட்கள் நடத்தக்கூடிய பொருட்காட்சிக்கு ஏலம் விட்டால் வெறும் மைதானத்திற்கு மட்டும் 4.30 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. இந்தத் தொகை முழுவதும் ஆரம்பக் கல்விக்கு செலவிடப்படுகிறது. ஆகவே சேலம் நகராட்சி இந்தப் பொருட்காட்சியை தனியாருக்கு ஏலம் விடுவதற்கு விசேஷமான அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

* திரு. வெ. பாலகுருவா ரெட்டியார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊரக வளர்ச்சி 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்கள்தான் இன்றைய ஜீவனாடி என்பதை யாரும் மறந்துவிடமாட்டார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக பல திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. அந்தத் திட்டத்தின் வடிவமாக குடிநீர் வாரியத்தின் சார்பிலே ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக குடிநீர் வழங்குவதற்காக 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வெ. பாலகுருவா ரெட்டியார்] [1978 மார்ச் 10

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு இதுவரையிலே 300 ரூபாய்க்குக் கிழே சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு இலவச வைத்திய வசதி செய்து கொடுப்பதைப்போல, 300 ரூபாய்க்கு மேலும் வாங்கக் கூடியவர்களுக்கும் அந்த வசதியைப் பெருக்க இருப்பதை நான் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள பாலமேடு ரோடு ஒன்று நீண்டநாட்களாக செப்பனிடப்படாமல் இருக்கிறது. அதை செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல கிராமங்களில் குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அதையும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தில் உள்ள ரோடுகளை தார் ரோடுகளாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்த அளவில், மதுரை நகரத்தில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் ஒன்றும், மத்திய மருத்துவ மனைக்குப் பக்கத்தில் ஒன்றும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் பகுதி நேர எழுத்தர்களை நிரந்தரமாக முழு நேர எழுத்தாளர்களாக மாற்ற வேண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

ஊர் நல அதிகாரிகள், விவசாய டிப்ளமோ படித்தவர்களுக்கும் அவர்கள் கேட்கும் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில், பாலமேடு பகுதியில் சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் வைத்திய வசதி கிடையாது. புரட்சித் தலைவர் கோரிக்கைபடி, சுகாதார வசதி முனைப்பாகச் செய்ய வேண்டும். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு மருத்துவ நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் 2 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவர் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளபடி அமைக்க இருக்கும் காகித ஆலையை, எனது பகுதியில் உருவாக்கித் தந்து, அந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைத் தணிக்கை செய்யும் பஞ்சாயத்து அதிகாரிகளுக்குப் பதிலாக கோட்டாட்சி அளவிலே இருக்கிற டி.டி.ஓ.வின் கீழ் இருக்கும் மற்ற அதிகாரிகளை வைத்து தணிக்கை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குள்ள இந்த அரசின் இரண்டாவது பட்ஜெட்டிலே 35 கோடியே 65 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கி, இங்கே மானியக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் அபிப்பிராயம் சொல்ல விரும்புகிறேன்.

கிராமத்திலே இன்று இருக்கும் நிலைமையில், கடந்த மூன்றாண்டு காலமாக தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தாலும், அதற்குப் பிறகு ஏற்பட்ட வெள்ளம், புயல் சேதத்தாலும் பாதிக்கப்பட்டு இருக்கையில், அந்த மக்களுக்காக திட்டத்தைத் தீட்டி, அது குறித்துப் பேசும் நேரத்தில், இப்போதுதான் நாம் முதல் படி எடுத்து வைக்கிறோம், என்று சொல்லிக் கொண்டு, இந்த நிலைமையில் மேலும் மேலும் வரி உயர்வு அளித்துக்கொண்டே போவது சரியல்ல என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1½ ரூ. செஸ் வரி என்று இருந்தது இன்றைக்கு ரூ. 2½ அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. பல இடங்களில் யாரையும் கேட்காமலேயே கூட்டப்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் டி.டி.சி. மீட்டிங்கில் இதை எடுத்துச்சொன்ன போது அதை நிறுத்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையில் நிறுத்தாமல் வசூல் செய்யப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கிராமத்தில் கல்வியின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. கல்வியின் தரம் சாதாரணமான நிலையில் இருப்பதால் அந்த மாணவனின் தரமும் படுமோசமாகிக் கொண்டு இருக்கிறது. அவர்கள் சரியான சத்துணவு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். உணவு இல்லாததால் அவர்கள் பள்ளிக்குச் செலவது பாதிக்கப்படுகிறது. இந்த நிலையிலிருந்து அவர்களை மாற்றும் வகையில் சத்துணவு கொடுத்து, அநத மாணவர்களைப் பள்ளிக்கு வரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் சுகாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. 3-4 மைல் சுற்றளவிற்குச் சரியான ஆஸ்பிடல் கிடையாது. பிரசவ ஆஸ்பிடல் ஆங்காங்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 7-8 பிரசவ ஆஸ்பிடல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அந்த ஆஸ்பிடலுக்குப் போவதற்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த ரோடுகள் எல்லாம் மிகவும் பாழடைந்து இருப்பதால், அந்த இடங்களில் உள்ள ஆஸ்பிடலுக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டு, அந்த நோயாளியின் நிலை மிகவும் மோசமாகச் சென்றபின், டவுனுக்கு வண்டியில் கொண்டு செல்லும்போது அவர்களுடைய உயிர் போகிறது அல்லது வேறு கோளாறு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட மோசமான நிலையில் உள்ள பாழடைந்த கிராமங்களில் உள்ள சாலைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், தொடர்புச் சாலைகள் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து விளக்குகளைப் பொறுத்தவரையில், இன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு இருக்கும் நிலையில் அங்கே லைட்டுகளைத் தொடர்ச்சியாகப் போடமுடியாத நிலை இருக்கிறது. அந்த லைட்டுகளை தொடர்ச்சியாகப் போடுவதற்கு ஏற்கனவே இருந்த சிஸ்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று

(முற்பகல் 11.30)

கேட்டுக்கொள்கிறேன். அப்படி விளக்குகள் இன்றுவரை போடப் படாமல் இருக்கின்றன. பல்புகளை எல்லாம் நேரடியாக பஞ்சாயத்து தலைவர்களே வாங்கிப் போட வேண்டுமென்ற ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். எற்கெனவே அந்த நிலைமை

இல்லை. ஆகையால் இன்றைக்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் மிகப் பெரும் தொந்தரவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதை மாற்றி, ஏற்கெனவே இருந்த முறையைக் கொண்டுவந்து, ஓட்டுகள் போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டு பஞ்சம் ஏற்பட்டிருந்ததால் ஆங்காங்கே குடிதண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு தண்ணீர் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஏனென்றால் அப்போது தொடங்கப்பட்ட திட்டம் எல்லாம் பாதியிலே நின்று விட்டது. அப்படி பாதியில் நிறுத்தாமல் தொடர்ச்சியாக வேலைகளைச் செய்து, வசதிகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு சில இடங்களில் 2 சென்ட், 3 சென்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் வீடுகளை எப்படிக் கட்டிக்கொள்வார்கள் என்பதைச் சிந்திக்கவில்லை. அந்த ஏழை எளிய மக்களால் இன்றுவரை வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியவில்லை. ஒரு சாதாரண தொழிலாளி ஒரு நாள் 3 அல்லது 4 ரூபாய் சம்பாதிக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள கடன் உதவியாவது செய்து கொடுத்து, மாதம் 10 அல்லது 15 ரூபாய் வீதம் திருப்பிப் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் நிச்சயமாக வீடு கட்டிக்கொள்ளவும் முடியும்; வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவும் முடியும். அதற்கு வேண்டியத் திட்டங்களைத் தீட்டி, அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளையாங்குடியைப் பொறுத்த மட்டில் குடிதண்ணீர், ஆஸ்பத்திரி, என்ற இரண்டுக்கும் சாங்ஷன் கேட்டு, பல தடவை முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது 'டெஃபர்' ஆகிவிட்டது என்று அமைச்சரவர்கள் அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். அதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. குடிநீர் இல்லை என்று பலதடவை கேட்டும், மீண்டும் மீண்டும் டெஃபர் ஆகிவிட்டது, டெஃபர் ஆகிவிட்டது என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது விரைவில் இளையாங்குடிக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடிக்கு குடிதண்ணீருக்காக ஒன்றுக்கு இரண்டு வரியை உயர்த்தி விட்டார்கள். இந்த நிலைமை மாற்ற வேண்டும். அங்கே குடிநீர் எப்படிக் கொண்டுவரப்படுகிறது என்றால் வயல் வெளியிலிருந்துதான் எடுத்துவர வேண்டும். அங்கிருந்து எடுத்து வருவதற்கும் சரியாகத் தண்ணீர் சப்ளை இல்லை. ஆனால் வரி மட்டும் ஒன்றுக்கு இரண்டு என்று உயர்த்திவிட்டார்கள். அதை உடனடியாக நிறுத்தி, மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற டிராக்டர்கள் வேலை செய்கின்றனவா என்று பார்த்தால் இன்றைக்கு எந்த யூனியனிலும் டிராக்டர்கள் வேலை செய்யவில்லை. அதனால் பல ஆயிரம் ரூபாய் பாழடிக்கப்பட்டிருக்கிறது. 100 ரூபாய், 200 ரூபாய் கூட ஒரு டிராக்டரிலிருந்து வருமானம் கிடைக்கவில்லை. பரமக்குடியிலும் டிராக்டர் வேலை செய்யவில்லை. பனூர் பஞ்சாயத்திலும் அப்படித் தான் இருக்கிறது. இதைப்போல எங்கு பார்த்தாலும் டிராக்டர்கள் ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இது யூனியன்களுக்கு மிகப்பெரிய இழப்பு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல 'ஸ்பிரேயர்ஸ்' எங்கும் சரியாகக் கிடையாது. விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கிட்டத்தட்ட 10 முதல் 20 ஸ்பிரேயர்கள் நல்ல முறையில் இருக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களுக்குச் சரியான கட்டட வசதி கிடையாது. பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட சாமான்கள் எல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்களின் வீடுகளிலே இருக்கின்றன. இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு உடனடியாக எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் கட்டட வசதியை ஏற்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமேஸ்வரம் டவுன்ஷிப் இருக்கிறது. அதை நிர்வகிக்க ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியிலிருக்கின்ற மெம்பர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவர்களாக இல்லை. ஒருவர் கூட சொந்த ஊர்க்காரர் கிடையாது. அதே ஊரில் உள்ளவர்களை அந்தக் கமிட்டியில் மெம்பர்களாக நியமிக்க வேண்டும். அப்போதுதான் வேலை சரியாக நடைபெறும். வேறு கட்சிக்காரர்களைப் போடா

1978 மார்ச் 10] [திரு. செ. சிவசாமி]

விட்டாலும் அந்த ஊரிலுள்ள அண்ணா தி.மு.க. வினரையாவது போட்டால் நலமாக இருக்கும். இப்போது இருக்கிறவர்கள் இராமநாதபுரம், மண்டபம் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள். இந்த நிலையை மாற்றி, அந்த ஊரிலேயே இருக்கிற வேறு கட்சிக் காரர்களைப் போடாவிட்டாலும்—அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த வர்களையாவது போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்த ஊரைச் சேர்ந்தவரும் போடப்பட்டிருக்கிறார்.

திரு. செ. சிவசாமி: பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்களுக்கும் எம்.எல்.சிக்களுக்கும் இடம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. ஏற்கனவே உத்தரவுகள் அதற்காக அனுப்பப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. பத்திரிக்கைகளிலும், நேரடியாகவும் கூட நாம் அதைப் பார்த்தோம். அப்படிப்பட்ட சர்குலர் அனுப்பி ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் இன்று வரை அவர்களுக்குப் பல இடங்களில் தனியாக இடம் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி ஒதுக்கப்படாமல் இருக்கக்கூடிய இடங்களிலே உடனடியாக ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அங்கு ஜீப்புகள் ஒரு நாளைக்குத் தான் கொடுக்கப்படுகிறது. அப்படி இல்லாமல் மாதத்திலே இரண்டு நாட்களுக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஜீப் கொடுக்கப்பட வேண்டும் என்றும், பெட்ரோல் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள சில முக்கியமான பிரச்சினை களுக்கு என்று ஒதுக்கப்படக்கூடிய ரூபாய்களை கடைசி நிமிஷம் வரைக்கும் செலவழிக்காமல் கடைசியாக மார்ச் மாதம் 28 அல்லது 29 தேதிகளில் ஒரே நேரத்தில் மொத்தமாகச் செலவழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. ஒரு சில பஞ்சாயத்துக்களில் அதுவும் கூட செலவழிக்கப்படாமல் கடைசியில் சரண்டர் செய்யப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாறவேண்டும். தொகை எந்தக் காரியத்திற்காக ஒதுக்கப்படுகிறதோ அந்த ரூபாய்களை உடனடியாக அந்தக் காரியத்திற்காகச் செய்து முடிக்கவேண்டும். அப்படிச் செய்து முடிக்கப்படாத இடங்களில் என் செய்யப்பட

வில்லை என்ற எக்ஸ்ப்ளனேஷன் கேட்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமுதாய வளர்ச்சித் திட்டத்திலே பணம் ஒதுக்கப்பட்ட பிற்பாடும்கூட அவர்கள் அஜாக்கிரதையின் காரணமாக செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்வது சரியான முறையல்ல என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இளையாங்குடி போன்ற இடங்களில் துப்புரவு தொழிலாளர்களுக்கு பல மாதங்களாகச் சம்பளம் கிடைக்காத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கொடுக்கப்படுகிறது. ஒரு வருஷத்தில் பல தடவைகள் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. இரண்டு மாதம் மூன்று மாதம் தொடர்ச்சியாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும் பார்ட் பார்ட்டாக 4 பேர்களுக்கு அல்லது 5 பேர்களுக்கு என்று அதுவும் இரண்டு மாதங்கள் கழித்தும் கூட சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி சாதாரண கீழ் கட்டில் உள்ள அந்த ஜனங்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் உடனடியாகச் சம்பளம் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பட்டணம் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அங்கும் ஒழுங்காகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சமுதாய வளர்ச்சித் திட்டத்தை இன்று நடத்தக்கூடியவர்கள், கிட்டத்தட்ட 7½ இலட்சம் பேர்கள் இன்றைக்கு வெளியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக 8 நாட்களாக ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளை, அவர்களுடைய கோரிக்கைகளை, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு உடனடியாக அவைகளுக்கு ஆவன செய்து சமுதாய வளர்ச்சித் திட்டம் தடங்கல் படாமல் வேலை தொடர்ந்து நடப்பதற்கு அந்தத் தொழிலிலே இருக்கக்கூடிய 7½ லட்சம் பணியாளர்களுடைய உதவியை நாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய பகுதியான அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர், கடலாடி போன்ற தொகுதிகள் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றமே நன்கு அறியும் என்று நினைக்கிறேன்.

வெள்ளையர் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் சுதந்திரப் போராட்டத்திலே தீவிரமாக உழைத்தார்கள் என்ற காரணத்திற்காக அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் அரசாங்க காலத்தில் அந்தப் பகுதி மக்கள் அவர்களுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதற்கு அந்தப் பகுதி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற திண்டுக்கல் இடைத்தேர்தலில் முக்குலத்தோர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக ஒத்துழைக்கவில்லை என்பதற்காகப் பாதிக்கப்பட்டார்கள். அந்தப் பகுதி பெரும்பாலும் முக்குலத்தோர் வாழும் பகுதி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஒன்றாகும்.

அந்த அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் பகுதிகள் நம்முடைய தமிழகத்தின் தலைவிதியையே மூன்று தடவைகள் மாற்றி இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

ஒன்று, 1952-ம் ஆண்டில் அருப்புக்கோட்டையில் காங்கிரஸ் கட்சி சார்பாக ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்களும், பார்வேர்ட் ப்ளாக் சார்பாக திரு. எம். டி. ராமசாமி அவர்களும் போட்டியிட்ட போது, அப்போது முதல் அமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து நான் வேண்டுமா வேண்டாமா என்பதற்கு இதில் தீர்ப்பு அளியுங்கள் என்று அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் கேட்டார்கள். அந்தப் பகுதி மக்கள் அன்று பார்வேர்ட் ப்ளாக்கை ஆதரித்து திரு. எம்.டி. ராமசாமி அவர்களை பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்தார்கள்.

அதற்குப் பின்னால் 1957-ல் ஏற்பட்ட கலவரத்தில் அந்தப் பகுதி மக்கள் காங்கிரஸ் அரசாங்கத்தை மாற்றியமைக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்து 1967-ல் காங்கிரஸ் ஆட்சி மாற்றியமைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு தற்போது ஏற்பட்ட தேர்தலில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றையதினம் அவர்கள் தலைமையில் சிரிய முறையில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் அந்தப் பகுதி மக்களால்தான் இப்போது இந்த அரசாங்கம் நடக்கிறது. அவ்வளவு சிரிய அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அந்தப் பகுதி மக்களை கடந்த 30 ஆண்டுக்காலமாக இருந்த அரசுகள் கவனிப்பாரற்றவர்களாக ஆக்கிவிடக்கூடிய நிலைக்கு ஆக்கிவிட்டார்கள்.

அது மட்டுமா ? அந்தப் பகுதியில் தென் மேற்குப் பருவ மழை சரியாகப் பெய்வதில்லை. வட கிழக்கு பருவ மழையும் அங்கே சரியாகப் பெய்வதில்லையென்பதை அரசு புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நமது புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கத்தில்தான், இந்த முப்பது ஆண்டுக்காலமாக இல்லாத நிலையில் இப்போதுதான் முதுகுளத்தூர் தாலுகாவில் மூன்று பேர்களுக்கு மெடிக்கல் ஸீட் கிடைத்துள்ளது.

அதேநோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 70 மெடிக்கல் ஸீட்ஸ் கிடைத்திருக்கிறது. என் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் கன்னியாகுமரி அளவிற்கு அந்தப் பகுதி வளரவேண்டுமென்றால் அல்லது முன்னேறவேண்டுமென்றால் கிட்டத்தட்ட இன்னும் நூறு ஆண்டுகளாவது பிடிக்கும் என்று நினைக்கிறேன்.

மத்திய அரசு வறட்சிப் பகுதிகள் என்று இராமநாதபுரம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தையும் எடுத்துள்ளார்கள். மத்திய அரசு அங்கே செலவு செய்யக்கூடியது காட்டில் கரைத்த

1978 மார்ச் 10] [திரு. ஆர். சி. சுப்பிரமணியம்]

பெருங்காயம் போல்தானிருக்கிறது. ஆகவே பெருவாரியான அளவில் அப்பகுதிகளை முன்னேற்றுவதற்கான அளவில் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தொழில்வளம் பெருகக்கூடிய வகையிலுள்ள திட்டங்கள் திட்டப்படவேண்டும். அதோடு நம்முது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தில் உதவியோடு ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்து, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய பகுதிகளுக்கு ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரித்து கிட்டத்தட்ட நூறு கோடி ரூபாய் அளவிற்கு ஒரு திட்டத்தை நிறைவேற்றினால் தவிர அந்தப் பகுதிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னேறவே முடியாது என்பதைத் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

அதோடு மலட்டாறு திட்டத்தையும் கிருதமால் நதித் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மூன்று மாதங்கள் விவசாய வேலை இருப்பதுபோக மீதி ஒன்பது மாதங்களுக்கு வேலை யில்லாதிருப்பதை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர், கடலாடி, உத்தரகோசமங்கை போன்ற யிடங்களில் ஆயிரம்பேர்கள் வேலை செய்யக்கூடிய அளவிற்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. நம் மாநிலத்தில் உள்ள அதிகாரிகள் இம்மூன்று பகுதிகளுக்கும் அநேகமாக வருவதில்லை என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. காரணம், அப்பகுதிகளில் அவர்கள் தங்க டி.பி. வசதியில்லை என்று கருதுகிறேன். ஆகவே மாநில அரசு அதிகாரிகள் அப்பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்து செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டை, கடலாடி, முதுகுளத்தூர் போன்றயிடங் களில் பால்வளத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கீழக்கரை நகரம் இப்போது பேரூராட்சியாக இருப்பதை நகரசபையாக மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழக்கரை நகரின் பிரதான வீதியை சீதக்காதி நகர் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்.

சாயல்குடி உயர்நிலை பள்ளியை செகண்டரி கல்விப் பள்ளியாக மாற்றியமைக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடலாடியில் ஒரு நியமனப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. து. இராசரத்தினம்: பேரன்புமிக்க சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித்துறை ஆகிய மான்யங்களின்மீது என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்ள விழைகிறேன்.

குறிப்பாக கிராம வளர்ச்சி இரண்டு ஆண்டுகாலமாக கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூடி பேசுகின்ற நிலைமை தற்போது அமையவில்லை. அதற்கிடையில் பேசுகின்ற பொழுது, ஆங்காங்கு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது.

ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை எந்தக் குழுக்களும் அமைக்கப்பெற்றிருக்கிறதா என்று பார்த்தால், இது வரை அமையவில்லை. அமையப் பெற்றிருக்கின்ற குழுக்கள் எப்படியிருக்கின்றன என்பதைப் பார்த்தால் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்தக் குழு அமைக்கப்பட்டு, மாதந்தோறும் கோட்டாட்சி வளர்ச்சித்துறை அதிகாரி மூலம் கூட்டம் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் அந்தக் குழுவில் இடம் பெற வாய்ப்பில்லை, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவர் அங்கம் வகிக்க முடியாத நிலைமை தான் இரண்டு ஆண்டுக் காலமாக இருந்துவந்தது. அதே நிலைதான் மீண்டும் தொடர இருப்பதாகத் தெரிகிறது. இதை மாற்றி ஊராட்சி மன்றத் தலைவருக்கு அந்தக் குழுவில் இடம் கொடுத்து,

ஊராட்சி மன்றத் தலைவர் கிராமங்களிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்வதற்கும், அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கும் இது உதவியாக அமையும் என்பதைக் கூறி, அதற்கான உத்திரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஊராட்சிகளுக்கு இருக்கின்ற நிதி நிலையைப் பார்த்தால் போதுமான அளவுக்கு நிதிநிலை இல்லை. அதில் குறிப்பாக புறநகர் பகுதிகளில் நகர வளர்ச்சித் திட்டத்தின் காரணமாக எந்த இடத்தையும் வாங்கவோ, விற்கவோ கூடாது என்ற நிலைமை இருந்து வருவதால், முத்திரை வரி, மேல் முத்திரை வரி, இவைகள் மூலமாக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 2 லட்சம் வரும் என்றால் இன்றையதினம் 40 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வருகிறது. இதன் மூலம் எந்த அளவுக்கு பகிர்ந்து அளிக்க முடியும் என்று பார்க்கிற பொழுது, இதில் நாம் தனியாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. மேலும் முத்திரை வரியின் மீது அரசாங்கம் மானியம் கொடுக்கின்ற நேரத்தில் நகர்புறங்களில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள் இப்போது கிடைப்பதில் பாதி அளவுக்குத்தான் பெற முடியும். இதை வைத்துக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவதே மிகவும் கஷ்டமாக இருக்கக்கூடிய நிலை ஏற்படும்.

மாதவரம், சோழவரம், பூவிருந்தவல்லி, பரங்கிமலை, குன்றத்தூர், காட்டாங்களத்தூர் போன்ற ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் இந்த நகர உச்சவரம்புச் சட்டத்தால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்போது இருக்கின்ற 2 ரூபாய் 50 பைசா என்றிருக்கின்ற சர்சார்ஜை அதிகப்படுத்தலாமா என்கின்ற எண்ணம் இருப்பதாக இந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற 2 ரூபாய் 50 பைசா என்பதே விவசாயிகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் இன்னும் உயர்த்த வேண்டியது அவசியம் தானா என்று பார்த்து, இது தேவையில்லை, இன்னும் அதிகமாக உயர்த்தக் கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுவரி வசூலிக்கின்ற விஷயத்தில் இப்போது வருவாய்த் துறை மூலமாக வசூலிக்கப்படுகிறது. இதில் போதுமான கவனம் செலுத்தப்படுகிறதா என்று பார்க்கும் போது, இந்த வரி சரியான

முறையில் வசூலிக்க முடியாத நிலையிலிருப்பதால், ஈட்டு மானியமாக கொடுக்கப்படும் 50 சதமான தொகையை அரசாங்கத்திலிருந்து முறையாகப் பெற முடியவில்லை.

மேலும், கடந்த ஆண்டு கூட நான் சொன்னேன், அதாவது டெவலப்மென்ட் அலவன்ஸ் என்று கொடுக்கப்படுவது, அங்குள்ள கிராம மணியக்காரருக்கும், கர்ணத்திற்கும், வெட்டியான், தலையாரி இவர்களுக்கெல்லாம் ஊராட்சி மன்றத்தின் மூலமாகக் கொடுப்பதின் மூலமாக—இப்போது சமுதாய நலத் திட்டத்திலிருந்து வருவாய்த் துறைக்குக் கொடுக்காமல், இதில் கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களின் கீழ் பில் கலெக்டர்கள் மூலம் இதை வசூலிக்க அனுமதித்தால், ஏறத்தாழ 2,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும். இதனால் அரசாங்கத்திற்குப் பணத் தட்டுப்பாடு வருவதற்கு வழியில்லை.

இப்போது கொடுக்கின்ற டெவலப்மென்ட் அலவன்ஸ் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுத்தால் போதும். அதே நேரத்தில் 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்கள் கீழ் இருந்து வருகின்ற பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொண்டால், பழுதுபட்ட பள்ளிக்கூட கட்டிடங்களில், துணைக் கட்டிடங்கள் கட்டவேண்டும் என்றால் கட்ட முடிவதில்லை. கடந்த இரண்டு ஆண்டு காலமாக இருந்த நிலைமைதான் இப்போதும் இருக்கிறது. துணைக் கட்டிடம் கட்டவேண்டும் என்றால் அதற்கு எந்தவிதமான வழியும் இல்லை. மேலும் புதிதாக ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டவேண்டு மென்றால், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 16 ஆயிரம் ரூபாய்க்கு அனுமதி கொடுக்கிறார்கள். இப்படி எடுத்துக் கொண்டால் உதாரணமாக பூவிருந்தவல்லி ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால் 16 பள்ளிக்கூட கட்டிடங்கள் தேவைப்படுகிறது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு இப்படி 16 ஆயிரம் ரூபாய் மட்டும் தருவதாக இருந்தால் 16 பள்ளிக்கூடத்திற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு 16 ஆண்டுகள் ஆகும். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11-50)

ஏற்கனவே புறநகர்ப் பகுதியாக இருக்கக்கூடிய அளவிற்கு, பெருமளவிற்கு மாணவர்கள் சேருகின்ற காரணத்தினாலே, ஆசிரியர்கள் அதிகமாக நியமித்துத் தர வேண்டுமென்று நான்

கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நீட்டித்துத் தருகிறேன். இன்னொரு உறுப்பினருடைய உரிமை போய்விடும். நான் நீட்டித்துத் தரத் தயார். இதனால் உங்கள் கட்சி உறுப்பினர் ஒருவருடைய பெயர் அடிபட்டு விடும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள், இரண்டு நிமிஷங்களுக்குள்.

திரு. து. இராசரத்தினம்: இப்போது டவுன் பிளானிங்குக்கு பில்டிங் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். புற நகர்ப் பகுதிகள் பெருவாரியாக இருக்கின்ற காரணத்தினால், ஆரம்பச் சுகாதார நிலையத்திலுள்ள ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் வருவதற்கு முடிவதில்லை. இந்த நிலை இருக்கின்ற காரணத்தினால், பில்டிங் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதன் காரணமாக வருவாயும் அதிகம் வருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அதற்கு மின்கட்டணம், தொழில் துறைக்கு வசூலிப்பதுபோல் அதிகமாக மின்கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. ஏற்கனவே, பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் குறைவாக இருக்கிறது. எனவே, தொழில் துறைக்கு மின்கட்டணம் வசூலிப்பது போல் இதற்கு வசூலிக்காமல், விவசாயத்திற்கு எப்படி குறைத்து வசூலிக்கப்படுகின்றதோ, அதைப்போல் குறைந்த அளவுக்கு வசூலிக்கப்பட வேண்டும். அப்போதுதான், ஊராட்சி மன்றங்கள் குடிதண்ணீர் வழங்கு வதற்கு வசதியாக இருக்கும் அது ஒத்தாசையாக அமையும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூவிருந்தவல்லிக்கு ஆரம்பச் சுகாதார நிலையம் இல்லை. ஆவடி நகரியப் பகுதிக்கு இது சென்றுவிட்டது. எனவே, பூவிருந்த வல்லி ஊராட்சிக்கு என்று ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்விளக்குகளில் பராமரிக்கப்படுகின்ற நிலைமைகளைப் பற்றி இன்றையத்தினம் பார்க்கும்போது, ஊராட்சி மன்றங்களிலே பல்புகளை மாற்றுவதற்கும், பல்புகளை வாங்குவதற்கும் நிச்சயம் முடியவில்லை. இதை நிரந்தரமாகப் போக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்றால், லைன் இன்ஸ்பெக்டர்கள், லைன்மென்கள்

நியமிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ஊராட்சி மன்றத்திற்குப் பல்புகள் போடுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

குழாய்கள் பழுதுபார்ப்பது பற்றிக் கூற விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே 97 குழாய்கள் இருக்கின்றன. அவற்றில் 35 குழாய்கள்தான் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அமைச்சர் அவர்கள் 99% குழாய்கள் நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். ஆவடி நகரியத்தைப் பொருத்தவரையில், அது நகரியமாக மாற்றப்பட்டு, அதன் மூலம்......

(அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்.)

*திரு. போ. எ. சீனுவாச ரெட்டியார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி வளர்ச்சி நிதி நிலையைப் பற்றிப் பேச அனுமதித்ததற்கு நன்றி கூறி, சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள நான் முற்படுகிறேன்.

சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும், கிராமங்களுக்கு குடி தண்ணீர் இல்லை. அதை நிறைவேற்றுவேன் என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல் இன்னும் சில கிராமங்களிலே என்னுடைய தொகுதியில் குடி தண்ணிர் வசதி இல்லை; நிறைவேற்றித்தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மணப்பாறை நகரத்திலே, ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே, 22,10,000 ரூபாய் எல்.ஐ.சி. யிலே இருந்து கடன் பெற்று, ஒரு குடி நண்ணீர் திட்டம் அமைப்பதற்கான திட்டம் போடப்பட்டு, குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக பொன்னை ஆற்றுப் பக்கத்திலே ஒரு கிணறு வெட்டப்பட்டு, மணப்பாறை நகரத்திற்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய ஆரம்பித்தார்கள். அந்த நகரத்திலே வாழ்கின்ற மக்கள் 30,000. ஆனால் 14,000 பேர்களுக்கான எஸ்டிமேட் போட்டு, இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். அதனால் அந்தப் பகுதியிலே தண்ணீர் கிடைக்கவில்லை. இருக்கக்கூடிய தண்ணீர் ஜூன், ஜூலை வரை தான் கிடைக்கும். பின்னாலே மழையில்லாத காரணத்தால் தண்ணீர் கிடைப்பதில்லை.

அங்கே உள்ள கிணறுகளில் உப்புத் தண்ணீர் இருக்கிறது. இப்போது அங்கே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் நகராட்சி அலுவலகத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்த உப்புத் தண்ணீரையும் நிறுத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இதனுடைய விவரம் முதல்வர் அவர்களுக்கு ஒரு புத்தகமாக அடித்து ஏற்கனவே தரப்பட்டிருக்கிறது.

அடுத்து, மருவூர் கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அதற்கு மருத்துவரும், ஆயாவும் இதுவரை போடப்படவில்லை. அந்த சுகாதார நிலையம் மட்டும் சும்மா இருக்கிறது. அதேபோல், அங்கே அறுவை சிகிச்சைத் திட்டமும் இருக்கிறது. அதற்காக கட்டிடமும் கட்டப்பட்டு, 3, 4 ஆண்டுகள் ஆகியும், அதுவும் சும்மா பராமரிக்கப்படாமல் இருக்கிறது. மூடப்பட்டு இருக்கிறது.

அதே நேரத்திலே, அய்யர்மலையில் ஒரு அறுவை சிகிச்சைக் கட்டிடம் கட்டப்பட்டு, அதுவும் பூட்டப்பட்டு சும்மா இருக்கிறது. எந்தவிதமான ஆட்களும் போடப்படவில்லை. அதிலே உள்ள சாமான்கள் எல்லாம் திருடு போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கே பூட்டு உடைக்கப்பட்டு, கதவுகள் திறந்திருக்கின்றன. அந்தமாதிரி நிலை இருக்கிறது.

அடுத்து, அய்யர்மலையில் ஒரு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதிலே மூன்று வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மீதி வகுப்புகள் ஆறு பர்லாங்குக்கு அப்பால் நடக்கிறது. ஒரு பீரியட் முடிந்து அடுத்த வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் ஆறு பர்லாங் தூரம் நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கேயே மற்ற வகுப்புகளுக்கு ஒரு ஷெட் அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தோகைமலைப் பகுதியில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்கு நிரந்தரமாக டாக்டர்கள் போடப்படுவதில்லை. திருச்சி மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மாதம் ஒரு முறை டாக்டரை அனுப்புகிறார்கள். அவர்கள் 15 நாள் கூடச் செல்லுவதில்லை. ஒழுங்காகச் செயல்படுவதில்லை. முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறேன். இதுவரை அங்கு டாக்டர் போடப்படவில்லை.

கூடலூர் கிராமம் என் பகுதியில் இருக்கிறது. அங்குள்ள மருத்துவ மனையிலும் மருத்துவர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.

அடுத்து மேஜர் பஞ்சாயத்தாக உள்ள எங்கள் பகுதியில் மூன்று மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. வரும் வருமானம் பூராவும் அதிகாரிகளுக்குச் செலவிடத்தான் சரியாக இருக்கிறதே தவிர, கிராமப் பகுதிகளுக்கு எந்தவிதமான பணிகளும் செய்யப் படவில்லை. அந்த மேஜர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தால் கிராம மக்களுக்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, ராஜேந்திரன் கிராமம் என்கிற வாளாந்தூரில்—நான் ஆரம்பக் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன்—பிற்பட்ட பகுதி. முப்பது ஆண்டுகள் ஆகியும் பாதை வசதி கூட இல்லை. நிதி நிலைமை இல்லை. அரிசன மக்கள் குடியிருக்கிறார்கள். நான்கு பர்லாங் தூரம் இருக்கும், அதற்கு சாலை அமைக்கப்படவில்லை. உடனடியாக சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

என்னுடைய குளித்தலை தாலுகாவுக்குப் பக்கத்தில் பேட்டை வாய்த்தலை சர்க்கரை ஆலை இருக்கிறது. அங்கு 50,000 ஏக்கருக்கு மேல் கரும்பு பயிரிடுகிறார்கள். நெருப்புப் பிடித்துக் கொண்டால் தீயணைக்கும் படை 25 மைல் தூரத்திலிருந்து வர வேண்டியிருக் கிறது. என்னுடைய தாலுக்காவில் ஒரு தீ அணைக்கும் படையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு போலவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தை ஆதரித்து பேசக் கூடிய வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பொதுமக் களுடைய தொடர்பு இல்லாமல் பண பலத்தினால் ஒன்றியத் தலைவர் களாக இருந்தார்கள். அந்த நிலையை மாற்றி, பொதுமக்களோடு நேரடித் தொடர்பு கொண்ட, பொதுமக்களுடைய ஆதரவு கொண்ட ஒன்றியத் தலைவர்களாக வரக்கூடிய ஜனநாயக வாய்ப்பை

1978 மார்ச் 10] [திரு. கா. செங்கோடன்]

நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்திக் தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி மன்றங்களில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் ரோடுகள் பழுதடைந்து பாழாகிக் கிடக்கின்றன. அந்த நிலையை மாற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களைத் தரவேண்டும். அதிக நிதி வசதி கிடைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். குறிப்பாக இணைப்புச் சாலைகளையும், பஸ் போய்க் கொண்டிருக்கும் போக்குவரத்துப் பாதைகளையும் அரசே மேற்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழாய்க் கிணறுகளை குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவை பழுதடைந்து விட்டால் குடிநீர் வடிகால் வாரியத்தைத் தேடும் நிலை இன்று இருக்கிறது. அந்த நிலையை மாற்றியமைக்க குழாய்க் கிணறுகளை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சிகளைப் பிரிக்கும்போது மக்கள் எண்ணிக்கையைக் கொண்டு பிரிப்பதைவிட பொருளாதாரத்தை மனதில் வைத்துப் பிரிப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, மதிய உணவு வழங்குவதிலே பல ஊராட்சிகளிலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் மாணவர்கள் பெரும் அவதிக்கு ஆளாகிறார்கள். அந்த நிலையை மாற்றியமைப்பதற்காக ஒன்றியங்களிலேயே மதிய உணவு நிதியைப் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்துவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைக் கட்டித் தருகின்றன, ஒன்றியங்கள் தான் ஆசிரியர்களை நியமிக்கின்றன, ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதும் ஒன்றியங்கள் தான், ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்வது போன்ற அதிகாரங்களும் ஒன்றியங்

களுக்குத்தான் இருக்கின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, ஆசிரியர்களை மாற்றுகின்ற அதிகாரம் மட்டும் கல்வித் துறையினிடத்திலே தந்திருக்கிறார்கள்.

மாவட்ட கல்வி அதிகாரிகள் தான் ஆசிரியர்களை மாற்றக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையினை மாற்றி ஒன்றியங் களே அவர்களை மாற்றுகின்ற அதிகாரத்தையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஆசிரியர்களுடைய நலன்களிலே அதிகமாக அக்கறை கொண்டிருப்பவை ஒன்றியங்கள் தான். ஒன்றியத் தலைவர்களும், ஊராட்சித் தலைவர்களும் தான் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு நிறைவேற்றும் வாய்ப்பினைப் பெற்றவர்களாக இருக் கிறார்கள், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, வேளாண்மைத் துறையாக இருந்தாலும் சரி அல்லது கல்வித் துறையாக இருந் தாலும் சரி, உள்ளாட்சித் துறையின் மூலமாகத்தான் ஒன்றியத் தலைவர்களின் மூலமாகத்தான் ஊராட்சிகளின் தலைவர்களின் மூலமாகத்தான் மக்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. மக்களோடு நேரடியாக அவர்கள்தான் தொடர்பு கொண்டு அவர்களுக்காக நல்ல காரியங்களைச் செய்து கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எத்தனை தனி அதிகாரிகள் இருந் தாலும்கூட ஒன்றியங்களிலே உள்ள அதிகாரிகளை, கிராம நல ஊழியர்களை, சமூக ஊழியர்களைப் பயன்படுத்துகின்ற நிலைமை தான் இருக்கிறது, அப்படி அவர்களைப் பயன்படுத்துவது சரியாக இருக்காது. எனவே, அதையும் அரசு மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடக் கட்டடங்களை கட்டுவது பற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஒரு கட்டடம் என்ற முறையிலே, அது ஒரு ஆசிரியர் பணியாற்றக்கூடிய பள்ளியாக இருந்தாலும் ஒரு கட்டடம், 10 ஆசிரியர்கள் பணியாற்றக்கூடிய பள்ளியாக இருந் தாலும் அதற்கும் ஒரு கட்டடம்தான் என்ற முறையிலே உள்ள நிலைமையை மாற்றி அதிக மாணவர்கள் பயிலக்கூடிய பள்ளிக் கூடங்களுக்கு அதிகமான கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

1978 மார்ச் 6] [திரு. கா. செங்கோடன்]

என்னுடைய கபில மலைத் தொகுதியிலே ஜேடர்பாளையத்திற்கும் அருகிலுள்ள பள்ளிப் பாளையத்திற்கும் பாதை வசதியில்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜேடர்பாளையத்திலே ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்துத் தர வேண்டும் என்ற முறையிலே 10 ஆயிரம் ரூபாய் அரசினிடத்திலே கட்டியிருக்கிறார்கள். அப்படி உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஐயம்பாளையத்திலே ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் அவசியம் தேவையென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம், அதையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக கிராமப் பகுதிகளிலே உள்ள இடுகாடுகளுக்கு செல்லக்கூடிய பாதைகள் இல்லாமல், பாதைகள் இருந்தால் குறுகிய அளவிலே இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அவற்றை அகலப்படுத்தித் தர அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி அகலப்படுத்துவதற்கு அருகில் உள்ள நிலக்காரர்கள் இடம் தர மறுக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே இடுகாட்டுப் பாதைகளை அகலப்படுத்த அரசு சிறப்பான முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, என்னுடைய தொகுதியிலே கூடுதுறை, ஐயம் பாளையம் ஆகிய இடங்களில் இடுகாட்டுச் செல்கின்றபோது வாய்க்காலைத் தாண்டித்தான் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆகவே அந்த வாய்க்காலைக் கடக்கக்கூடிய முறையிலே ஒரு சிறு பாலத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியிலே மோகனூரில் ஒரு கரும்பாலை இருக்கிறது. அங்கே கரும்பு நிறைய விளையக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு காகித ஆலையை நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வது என்னுடைய நீங்காத கடமையென்று கருதுகிறேன்.

கிராமப் பகுதிகளிலே சுகாதார வசதிகள் அதிகமாக ஏற்படுத்தித் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமப் பகுதிகளிலே குடிசைத் தொழில்களையும் சிறுசிறு தொழில்

களையும் ஏற்படுத்தித் தந்தால் கிராமங்கள் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லி எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய இதயங்கனிந்த நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின்மீது நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

தற்போது கிராமங்கள் வளர்ச்சியடையவேண்டுமென்று கூறிக் கொண்டிருக்கிறோம். ஒன்றியங்கள், ஊராட்சிகள் வளர்ச்சியடையவேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் அந்த ஊராட்சிகளுடைய அதிகாரங்களை கைப்பற்றக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் பல கிளை கால்நடை மருந்தகங்கள் இருந்து கொண்டிருந்தன. அவைகளைத் தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அரசாங்கமே மேற்கொண்டிருக்கிறது.

அடுத்து, ஊராட்சிகளிலுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை அந்தந்த ஊராட்சிகளே பராமரித்து வருகின்றன. அப்படிப் பராமரித்து வருவதால் அங்கு ஏற்படும் பழுதுகளை உடனடியாகச் செய்யக்கூடிய வாய்ப்பை அவைகள் பெற்றிருக்கின்றன. அவைகளையும் தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும், ஊராட்சி மன்றங்களிலிருந்தும் குடிநீர் வாரியத்திற்கு வழங்க தகுந்த ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மேலும் சுகாதார உதவியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கி வந்தார்கள். சுகாதார உதவியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருந்தால்தான் கிராமங்களில் அடிக்கடி பரவும் பல சிறிய தொத்து வியாதிகளைப்பற்றி ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே கூறி அவைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதுவும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கண்ட்ரோலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. அவைகளை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களின் கண்ட்ரோலில் இருக்கும்படி செய்யவேண்டும்.

கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 5000 ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்கு ஏற்படுத்தப் போவதாகக் கூறியிருப்

பதை 3,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புத் தரக் கூடிய நிலைமையிலே, 300 ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆரம்பப் பள்ளியைத் திறக்க வேண்டும். தற்பொழுது படித்துப் பட்டம் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பணியில் நியமிக்க வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பி.டி., ஆசிரியர்களை நியமிக்கலாம். நடுநிலைப் பள்ளிகளில் ஒரு உடற்பயிற்சி ஆசிரியரையும், தமிழாசிரியரையும் நியமிக்கலாம். இப்படிச் செய்தால் படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கும்.

ஆகவே, 300 ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரியின் அனுமதியில்லாமல் ஊராட்சி மன்றத்தின் தலைவரவர்களின் ஒப்புதலைப் பெற்று ஆணையாளர் அவர்கள் ஆரம்பப்பாடசாலைகளைத் திறக்க அனுமதியளிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வரி ஈட்டு மானியத்தின் மேல் தற்பொழுது உள்ளதைவிட இரண்டு மடங்கு அதிகரித்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் ஊராட்சிகளிலுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

சில ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொழுது போதிய நிதிவசதி இல்லை. சில ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி வசதி இருக்கிறது. போதிய நிதி வசதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களிலே எந்த வேலையையும் தற்பொழுது செய்ய முடியவில்லை. நிதி வசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் வேலைகளைச் செய்ய வேண்டுமென்ற சில சூழ்நிலைகள் இருக்கின்றன.

இப்படியிருக்கும் சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி ஊராட்சி ஒன்றியத்தின் லோகல் செஸ் சர்சார்ஜ் விதிக்கும் அந்த முறையை ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரே மாதிரி இருப்பதைப்போல் அல்லாமல் எல்லா ஒன்றியங்களிலும் ஒரே மாதிரியாகச் செய்ய

வேண்டும். இரண்டு ரூபாய் என்றால் இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய் என்றால் இரண்டரை ரூபாய் என்று ஒரே நிர்ணயமாக இருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தகுந்தாற் போல் ஒன்றரை ரூபாய், இரண்டரை ரூபாய் என்று இப்படி அவர்கள் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் விதிக்கும் அளவிற்கு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் ஒரே முறையாக இருக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள சில ஊராட்சிகளுக்குப் போதிய நிதி வசதி கிடையாது. அப்படி நிதி இல்லாத ஊராட்சிகளில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த அரிசன காலனிகளுக்கு அரசாங்கத்தால் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் கிராமங்களுக்கு மட்டும் வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன, கிராமங்களைச் சேர்ந்த அரிசன காலனிகளுக்கு வானொலிப் பெட்டி இல்லை. ஆகவே, நிதி வசதி இல்லாத எல்லா ஊராட்சி மன்ற அரிசன காலனிகளுக்கும் வானொலிப் பெட்டியை அரசு வாங்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு—பம்பு செட்டுகளுக்குத் தரப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டிற்கு வாங்கும் தொகை கிராமங்களில் தரப்படும் மின்சாரத்திற்கு எவ்வளவு வாங்கப்படுகிறதோ அதே அளவில் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு தனியாக, யூனிட் ஒன்றுக்கு 40 பைசா, 50 பைசா வீதம் வசூல் செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

[பிற்பகல் 12-10]

*திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இங்கே, குறிப்பாக, கல்ராயன் மலைப் பகுதியிலே ஜாகீர் கிராமங்களில் ஊராட்சிகளை அமைக்கும் பணியை மேற்கொண்டிருப்பதை

நான் மிகவும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அந்தப் பணியைச் சற்று விரைவாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளூர் தல வரி உச்ச வரம்பு தற்பொழுது ரூ. 2.50 ஆக இருக்கிறது. அதை உயர்த்த ஆலோசனை செய்து வருவதாக இக்குறிப்பில் அறிவித்திருக்கிருர்கள். நான் மெத்த பணிவோடு, தற்போதுள்ள ரூ. 2.50 காசே மிகவும் அதிகம் என்று கருதுகிற இந்த நேரத்தில், தயவுசெய்து அதை உயர்த்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வட்டாரங்கள், உள்ளாட்சிகள் இவற்றின் எல்லைகளை மாற்றுவதற்காகத் திட்டம் மேற்கொள்வதாக இருக்கிறது. அதை வெகுவாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்ருல், என்னைத் தலைவராகக் கொண்டிருக்கிற பணகுடி பேரூராட்சி பகுதிகள் நடைமுறைக்குச் சாத்தியக்கூறு இல்லாத வகையில் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் மாற்றி, நடைமுறைக்கு உட்பட்ட வகையிலே, எல்லைகளைப் பிரித்தால், கிராமங்கள் நல்ல முறையில் பணிகளைச் செய்ய, பயன்பெற வசதியாக இருக்கும் என்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றியப் பெருந்தலைவர்கள் தேர்தல் நேரடியாக நடத்துவதை, புரட்சித் தலைவரவர்களின் சீரிய திட்டமாகக் கருதி, வெகுவாகப் பாராட்டுகிறேன்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற, பயிற்சிக் கூடங்கள் அமைக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஊட்டச்சத்து உணவுத் திட்டத்தை நல்லபடியாக நிறைவேற்றுவதற்காக, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பயிற்சி அளிக்கப்படுகிற நேரத்தில், பயிற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஊட்டச் சத்துணவு காரணமாக, நல்ல பிரஜைகளை வருங்காலத்தில் உருவாக்க முடியும் என்ற காரணத்தால், அதனை ஆக்கமாகவும் ஊக்கமாகவும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியத்திற்காக இந்த ஆண்டு ரூ. 1,350 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். இந்த ஆண்டு கேளிக்கை மற்றும் காட்சி வரிகளின் மூலம் ரூ. 110 இலட்சம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னுர்கள். அந்த வரியையும் நல்லவிதமாக வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. **ஆகவே,** கிராம இணைப்புச் சாலைகள் இல்லாத எஞ்சிய பகுதிகளிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை, கால்நடை வளர்ச்சிக்காக ரூ. 53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது போதாது.

குடி நீர் திட்டங்களுக்கு 1978-79-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 150 இலட்சம். இதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எங்கள் ராதாபுரம் தொகுதியில், செட்டிகுளம், கூடன்குளம், விஜயாபதி திசையன்விளை பேரூராட்சி போன்ற பகுதிகளில், குடிநீர் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களுக்கு ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசு மானியம் ஒதுக்குவதில், ஒன்றியத்திற்கு மட்டுமன்றி தனியாக நிர்வாகம் நடத்துகிற நிலையிலுள்ள பேரூராட்சிகளுக்கும் தனியாக மானியம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரி, குளம் பராமரிப்புக்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டங்களை நிறை வேற்றுகிற நேரத்தில், காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்பட்டு, நூல் மான்பவர் முறை கொண்டுவரப்பட வேண்டும். அதே நேரத்தில் மைனர் இனம் அபாலிஷன் ஆக்டுக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட இனம் குளங்களையும் பராமரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் மிகவும் அதிகமான பள்ளிகளும், மாணவ, மாணவியரும் இருக்கிற காரணத்தால், தற்பொழுது அந்த மாணவர்களுடைய பொது நலனைக் கருதி, தொழிலாளர் நலத் துறையிலே எப்படி ஈ.எஸ்.ஐ. திட்டம் இருக்கிறதோ, அதைப்போல், மாணவர் காப்பீட்டுக் கழகம் உருவாக்கி, மாணவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. யா. சை. மு. யூசுப்]

தாய்-சேய் நல விடுதிகள் தேவை அடிப்படையில் கொண்டுவரப் பட வேண்டுமே தவிர, செல்வாக்கின் அடிப்படையில் அல்லவென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன குடியிருப்புகளுக்கு வானொலி அமைக்க காலவரம்பு கூடிய திட்டமிடப்பட்டு, அதன்படி நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் நலத்திற்கு கன்வீனர்கள்—அமைப்பாளர்கள் அமைக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த அமைப்பாளர்களை மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். தேர்தல் முறையிலே புதிய அமைப் பாளர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகள் காப்பகங்கள் 1,398 இருக்கின்றன. என்னுடைய ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பின்தங்கிய பகுதியாக இருந்த போதிலும், அதிலே 6 காப்பகங்கள் இருக்கின்றன. அங்கே மேலும் 10 காப்பகங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் மூலமாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் விளக்குகள் எல்லாம் சரியாக எரிவதில்லை. அவைகளை முன் போல மின்சார வாரியமே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) ஊராட்சி களுக்கு 2, 3 ஊர்களுக்கு மேற்பட்ட ஊர்களை ஒன்றாக்கி ஊர் நல அதிகாரிகளை, நிருவாக அதிகாரிகளாக அமைக்க வேண்டும்.

மேலும் குமரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் இருப் பதைப்போல பப்ளிக் ஹெல்த் சேனிடேஷனை, அரசே மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, சமுதாய நலத் திட்ட மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நீண்ட நாட்களாக கிராமப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த சமுதாய நலத் திட்டத்தில் சார்பாக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள் ஜில்லா போர்டினுடைய

வாரிசாக இருக்கின்றன. ஜில்லா போர்டுக்கு இருந்த அதிகாரங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு இல்லை. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அப்படிப்பட்ட அதிகாரங்கள் இல்லை. அப்படிப்பட்ட அதிகாரங்கள் இருந்தால்தான் இது நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

குறிப்பாக ஒரு அதிகாரி தவறு செய்தால் அவர்மீது பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கிடையாது. நன்றாக யோசிக்க வேண்டும். ஒரு அதிகாரி தவறு செய்கிறார் என்றால் அவர் மீது யூனியன் கவுன்சில் தீர்மானம் போட்டு நடவடிக்கை எடுக்க சட்டம் செய்ய வேண்டும். தீர்மானம் போட்டு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இப்போது இல்லை. அப்படிப்பட்ட சட்ட விதிகளை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பஞ்சாயத்துக்களிலே ஒரு அபிவிருத்தி கவுன்சில் போடுவதாகக் கூறியிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர், சட்ட பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் அங்கே வேலை செய்து கொண்டு இருக்கும்போது, மேற்கொண்டு கவுன்சில் எதற்காகப் போடவேண்டும் என்று யோசனை செய்யவேண்டும். எனக்கு முன்பாக பேசியவர்கள் அத்தனை பேர்களும் சொன்னார்கள். உங்கள் கட்சிக்காரர்களை போடுவதற்காகத்தான் அப்படிப்பட்ட கவுன்சில் போடுவதாகச் சொன்னார்கள். அதை நன்றாக யோசிக்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருக்கும்போது வேறு ஒரு கவுன்சில் தேவைதானா? மாநில சுய ஆட்சி கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் கிடையாது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரத்தை அதிகரிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லை என்றால், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்வதிலே எந்தவிதமான அர்த்தமும் இல்லை. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும்படி இன்றைய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் எதற்கெடுத்தாலும் சர்க்கார் வேலை செய்ய பங்குத் தொகை கேட்கிறார்கள். பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்றால் பங்குத் தொகை கொடுக்கவேண்டும். குடிநீர் வேண்டுமென்றால்

பங்குத் தொகை கொடுக்கவேண்டும். கிராம மக்கள் இந்தப் பங்குத் தொகையை எப்படி கொடுக்க முடியும் என்பதை நன்றாக எண்ணிப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 12-20)

கிராமத்திலே இருக்கின்ற பல மக்கள் சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். மேற்கொண்டு எந்தச் செலவும் செய்ய முடியாமல் கடன் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கிராம மக்கள் பங்குத் தொகை எப்படி கொடுப்பார்கள்? எங்கேயிருந்து கொடுப்பார்கள்? ஆகவே, கிராமத்தை முன்னேற்றம் செய்யவேண்டுமானால் அந்தப் பங்குத் தொகை விகிதாச்சாரம் கேட்கக்கூடாது. இந்த பங்குத் தொகையைக் கேட்காமலேயே கிராமங்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சேர்மன்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். நீங்களே யோசித்துப் பாருங்கள், மந்திரிகளுக்கு அதிகாரம் இல்லை என்றால் எப்படி ஆட்சி நடத்த முடியும்? அதே போல், பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும். இப்போது இருக்கும் கமிஷனர்கள் சேர்மென் அவர்களுக்குக் காரியதரிசிகளாக இருக்கவேண்டுமே தவிர, கமிஷனர்களுக்கு அதிகாரம் கொடுத்து, கமிஷனருக்கு இருக்கும் அதிகாரத்தை வேறு டிபார்ட்மென்ட் அதிகாரிகளுக்குக் கொடுத்து விட்டால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் எப்படி நிர்வாகத்தை நடத்த முடியும் என்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களுக்கு இப்போது 25 லட்ச ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். பத்து வருஷம் சேர்மனாக இருந்து இருக்கிறேன். அந்த அனுபவம் இருக்கிற காரணத்தாலே, இந்த ஒதுக்கப்பட்ட பணத்தைப் பார்த்தால், ஒரு யூனியனுக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்குக் கூட அந்தப் பணம் வருமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே பள்ளிக்கூடங்களைக் கட்ட வேண்டும். பள்ளிக் கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க

வேண்டும். அப்படி அவர்களுக்கு பள்ளிகளுக்கு அருகில் வீடுகள் கட்டிக்கொடுக்காத காரணத்தால் ஒரு நாளைக்கு 10 மைல் 15 மைல் என்று அவர்கள் சைக்கிளில் செல்லும் நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, கிராமங்களில் இருக்கும் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க முழு கிராண்டில் அவை கட்டப்படவேண்டும்.

இந்த நிலையில் ஒரு வருஷத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் தான் என்றால்—ஏற்கனவே 26 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டு—இன்னும் அந்தப் பள்ளிக்கூடங்கள் அரசால் கட்டப்பட முடியாத நிலை இருக்கிறது—இன்னும் எத்தனை வருஷத்திற்கு அப்படியிருப்பது என்பதை இந்த அரசு நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் ஏற்பட்ட புயல்-வெள்ளத்தால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை சீர்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. கழிக்கையில் வைத்து இருக்கிறார்கள். ரோடுகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்றால், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் எப்படி முன்னேற்றம் பெற முடியும்? ஆகவே, அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போன வாரத்தில் இங்கே இருந்து நான் ஊருக்குச் செல்லும் போது, பகலில் பஸ்ஸில் சென்றேன். அப்போது வெள்ள நிவாரண ரோடுகள் வேலை ஆங்காங்கு நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டு சென்றேன். அங்கேயெல்லாம் பொய்மூட்டு போட்டு பொய் தாரு வைத்து இருந்தார்கள். இப்படி அரசாங்கப் பணம் பொய்மூட்டுக் கணக்கு எழுதுவதற்காக செலவிடப்படுவது நல்ல முறை தானா என்பதை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதைக் கண்டுபிடித்து, அதைத்தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் இருக்கிற ரோடுகளுக்கு எல்லாம் தூம்பு கிடையாது. கிராமங்களில் ரூரல் ரோடு என்று போடப்பட்டது. அந்த ரோடை கிராம ஜனங்கள் எல்லாம் 'ஊழல் ரோடு' என்று தான் சொல்வார்கள். அந்த ரோடில் மனிதர்கள் நடமாட

முடியாது. எந்தவிதமான போக்குவரத்தும் போக முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட ரோடுகளைச் செப்பனிட அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணங்குடி பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் அலுவலர்களுக்கு இதுவரையில் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அவர்கள் தேவக்கோட்டை டவுனில் இருந்துதான் வருகிறார்கள்—பியூன் உள்பட—ஆகவே, அந்தப் பகுதிக்குச் செல்லும் பஸ் நின்றுவிட்டால் அலுவலகம் பூட்டி இருக்கும், மழைக்காலம் என்றால் பூட்டி இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரிலே ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு சாங்ஷன் ஆகியிருக்கிறது. மக்கள் பங்குத் தொகையாக 26—6—1974-ல் ரூ. 10,000 ஸ்டேட் பாங்கில் கட்டியிருக்கிறோம். செலான் நம்பர் 23. அதற்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம். நான்கு வருடமாகிவிட்டது; இன்னும் கட்டடம் கட்டவில்லை என்றால் எப்படி அங்கே அபிவிருத்தி ஏற்படும் என்பதை சிந்தித்துப் பார்த்து, உடனடியாக கட்டடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணங்குடியைச் சுற்றி வெறும் ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அதனால் மழைக் காலங்களில் அந்த ஊரோடு தொடர்பு கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆகவே, ஆறுகளில் பாலங்கள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலங்கள் கட்டிக் கொடுத்தால்தான் போக்குவரத்திற்கு ஏற்றதாக இருக்கும்.

இப்போது ஜீப் கார்களை எம்.எல்.ஏ.-க்கள் மாதம் ஒரு நாள் பயன்படுத்திக்கொள்ளலாம்—யூனியன் ஜீப் காரை ஒரு நாள் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது போதாது. இரண்டு நாட்களாவது கொடுக்க வேண்டும். எம்.எல்.ஏ-க்களுக்கு ஏதாவது டைப் செய்ய வேண்டுமானால் அந்த பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற டைப்பிஸ்டுகள் அந்த வேலையை செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதே மாதிரி எம்.எல்.ஏ-க்கு அந்த யூனியனிலிருந்து ஒரு பியூன் போட வேண்டும். அந்த பியூனை அவர்கள் விருப்பம்போல் யாரையாவது போட்டுவிடக்கூடாது. எம்.எல்.ஏ.-யே நியமித்துக்கொள்ளக் கூடியமாதிரி இருக்க வேண்டும். எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்துதான் எடுக்க வேண்டுமென்றும் இருக்கக்கூடாது. சில

கண்டிஷன்கள் பேரில் எம்.எல்.ஏ.-யே போட்டுக்கொள்ளலாம் என்ற முறையில் இருக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) மேலும் பேசுவதற்கு நேரம் இல்லாததால் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த மானியங்கள்மீது உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், நாங்கள் கிராமப்புறங்களில் இருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள். அந்தக் கிராமப்புறங்களில் இருக்கிற இணைப்புச் சாலைகளைப் பார்க்கும் போது, இணைப்புச் சாலைகள் போடப்பட்டதாக ஏற்கெனவே அங்கே இருக்கிற பதிவேட்டில் இருக்கிறது ; ஆனால் அங்கே இணைப்புச் சாலைகளை காண்பது கஷ்டம் ; ஆனால் இணைப்புச் சாலைகள் போடப்பட்டதாகச் சொல்லி தொகை பெறப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் அந்தத் தொகையைப் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த சிரமங்கள் இருக்கும்போதே வேலையை முடிக்காமலேயே முந்தைய ஆட்சியில் தொகையை பெறக்கூடிய வழிவகை இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து யூனியனில் இருக்கிற ஜீப் காரை அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் மாதத்தில் ஒரு நாள் பயன்படுத்திக்கொள்ள இப்போது வாய்ப்பு இருக்கிறது. இந்த நேரத்தில் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டின் தொடக்கத்தில்—நியூ இயர்—முதல்நாள் வருகிறது என்றால் அன்று தமிழ்நாடு முழுவதும் இருக்கிற யூனியன் ஜீப் கார்களை அந்தந்த யூனியன் ஆணையர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை காணச் செல்கிறார்கள். அந்த ஒரு நாளைக்கு மட்டும் எவ்வளவு செலவாகிறது ? எவ்வளவு பெட்ரோல் போடவேண்டியிருக்கிறது ? அந்த பணம் யாருடையது ?

இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணம்தான் அந்த வகையில் செலவாகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களை முகஸ்துதி செய்வதற்காக அந்தப் பயணம் நடைபெறுகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. கிராமப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்களை அமைக்கும் போது 'சிமின்ட்' அதாவது 'ஆஸ்பெட்டாஸ் சீட்' களை வைத்து கூரை அமைக்கிறார்கள். அந்த முறையை நீக்கி 'ஆர்.சி.சி.' போட்டு கிராமப்புறங்களில் இருக்கிற மாணவர்களுக்கும் நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற முறையில், கூரை அமைக்க வேண்டும். அதற்கு அதிகமாக தொகை செலவாகிவிடாது. ஆர்.சி.சி. கூரை போடுவதினால் கூடுதலாக ஆயிரம் ரூபாய்தான் செலவாகும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற மக்களோடு மிகுந்த நெருக்கத்தோடு பழகுகின்ற கிராம நல அலுவலர்கள்—கிராம சேவக்கள்—பல குறைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை அக்கறையோடு கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 25 ஆண்டு காலமாக முதல்நிலை ஊர் நல அலுவலர்களாக 2,102 பேர்களும் இரண்டாம் நிலை ஊர் நல அலுவலர்களாக 2,161 பேர்களும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் சுமார் 16 ஆண்டுகளாகப் பதவி உயர்வு இல்லாமல் எந்த நிலையில் வேலைக்கு வந்து சேர்ந்தார்களோ அந்த நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தருகின்ற வகையில் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கிராமப் புறங்களில் இருக்கிற மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வேளாண்மைத் துறையிலும் கிராமத் தொழில் முறையிலும் அவர்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லுகின்ற அந்த கிராம வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு உயர் பதவி கொடுக்கவேண்டும்.

கிராமப் புறங்களில் மதிய உணவுத் திட்டங்களுக்கு வேலை செய்யும் அவர்கள் பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்ஸ் ஃபார் ஸ்கூல் எஜுகேஷன் என்று

சொல்லுகின்ற அளவில் ஒரு பஞ்சாயத்து யூனியன் 20 கிராமப்புற ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளில் பணியாற்றி வந்திருக்கிறது. ஆகவே அடிஷனல் எக்ஸ்டென்சன் ஆபீஸர் ஃபார் எஜுகேஷன் என்ற முறையிலே அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்று முருகேச முதலியார் தலைமையிலே அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய பரிந்துரை ஒவ்வொரு பஞ்சாயத்து தொகுதியிலே இருந்தும் நிர்வாக அலுவலர்களாக கிராமப்புற சேவக்குகள் நியமிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் அதன் காரணமாக வேலையற்று இருக்கக்கூடிய 8,000 பேர்களுக்கு வேலை கிடைக்கவும், 1,200 சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கு வழி வகை காண வேண்டும் என்பது பற்றியும் விளக்கி இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஊரக இயக்குநர் அலுவலகத்திலிருந்து 42 அசிஸ்டெண்டுகளுக்கு வேலை வாய்ப்பு பதவி உயர்வு இல்லாத அளவில் 23—3—77 அன்று பிறப்பிக்கப்பட்ட சட்டத் திருத்தத்தின் படி கிராமப் புறங்களிலிருந்து வேலை செய்யக்கூடிய அந்த கிராம சேவக்குகளுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம், கிராம சேவக்குகள் தற்போது பதவி உயர்வு என்பது எந்த விதத்திலும் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயமான முறையில் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு (பி.ஆர்.ஓ.) மக்கள் தொடர்பு அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் என்னிடம் ஒன்றைச் சொல்லி அதனைப் பேசச் சொன்னார்கள். வந்தவாசி தொகுதியில் கேத்தரை கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திலே ஹரிஜனங்களுக்கென்று 42 வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளிலே அவர்கள் சென்று குடியேறுவதற்குள்ளாகவே அந்த வீடுகள் இடிந்து பாழடைந்த நிலையில் உள்ளன. அதற்கு என்ன காரணம் என்றால் முருக்கை மரத்தால் கூரைகளை வேய்ந்திருக்கிறார்கள். இதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து

TRUTH ALONE TRIUMPHS

அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : சட்டமன்ற துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு ரூரல் டெவலப்மெண்ட் என்ற முறையை வைத்துக் கொண்டு இருக்கக்கூடிய சாலைகளை எல்லாம் இன்றைக்கு ஹைவேஸ் டிப்பார்ட்மென்டிலே சேர்த்திருப்பது விரும்பத்தக்கதல்ல. இதனைப் பஞ்சாயத்திலே விட்டுவிட வேண்டும். இந்த நேரத்திலே இந்தச் சாலைகள் அமைப்பதற்கு இப்போது அரசாங்கத்தால் ஒதுக்கி இருக்கக்கூடிய மானியத் தொகை ரூ. 302 இலட்சமாகும். இது முன்னூறுக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு எந்த வகையிலே போதுமானது என்பதை அருள்கூர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொகையை அதிகமாக்கித் தர வேண்டும். சென்ற வருடத்தை விட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்குவார்கள் என்று நம்பி இருந்தேன். 5 இலட்சம் மட்டும் தான் அதிகமாக ஏற்படுத்தி இருப்பது விரும்பத்தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு குடிநீர் வாரியத்தின் மூலமாக குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. எங்கெங்கு வேண்டுமோ அங்கங்கு பம்புகளை, கைப் பம்புகளை இறக்கி விட்டுவிட்டு போய்விடுகிறார்கள். அவர்கள் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளரிடம் இதுபற்றி கலந்து கொள்வதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களிடமும் இதுபற்றி கலந்து கொள்வதில்லை. அவர்கள் இஷ்டம் போல் மனம் போன போக்கில் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி பஞ்சாயத்து ஒன்றியக் கமிஷன் ஆணைக்கு உட்பட்டு இவற்றைச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. பஞ்சாயத்துக்கள் முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாவது தரம், நான்காம் தரம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள் அரசாங்கத்திலிருந்து.

அதற்குத் தகுந்தபடி நிதி வசதி செய்து கொடுக்கப்படுகிறது அரசாங்கத்திலிருந்து. எப்போதோ எடுக்கப்பட்ட கணக்கினை வைத்துக் கொண்டு நிதி வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக நல்ல வசதிகள் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு நிதி அதிகமாகக் கிடைக்கவும், குறைந்த வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு குறைந்த நிதி கிடைக்கும் வகையிலும்தான் இப்போது நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இதை மறுபரிசீலனை செய்து குறைந்த வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படியாக நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. மருந்தகங்களை ஒன்றியங்கள் ஏற்று நடத்தி வருகின்றன. அதற்கான போதிய நிதி வசதி ஒன்றியங்களிடம் இல்லை. மேஜர் பஞ்சாயத்து மருத்துவமனைகளை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒன்றியங்களிடம் கொடுக்கக் கூடாது. ஏற்கனவே அவர்கள் நிதி வசதியின்றி திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்கள் மருத்துவ மனைகளை நடத்தக் கூடிய சக்தி உள்ளவையாக இல்லை.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல சுறுசுறுப்புள்ளவர்கள். இதைச் சொல்வதால் நான் அமைச்சர் அவர்களுக்கு ஐஸ் வைத்துப் பேசுகிறேன் என்று தயவுசெய்து யாரும் கருதிவிடக் கூடாது. அவர்கள் நல்ல சுறுசுறுப்புள்ளவர். ஒரு தடவை வேலூருக்குக் கூட அவர்கள் வருகை தந்திருந்தார்கள். பஞ்சாயத்து ஒன்றியக் கட்டடங்களைக் கூட அவர்கள் வந்து திறந்து வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் இன்னும் இரண்டு இலாகாக்களைக் கொடுத்தால் அவற்றையும் சேர்த்து சமாளிக்கக்கூடிய திறமை உள்ளவர்கள் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நான் அப்படி பேசச் சொல்லவில்லை என்பதை முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 10]

திரு. எஸ். ஜே. இராமசாமி : நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம், குடிநீர் வடிகால் வாரியம் அவர்களிடம் இருந்தால் பஞ்சாயத்து ஒன்றியங்களில் குடிநீர் வசதி செய்து கொடுக்கலாம், அது ஒன்றியங்களுக்கும் உதவிகரமாக இருக்கும், அமைச்சர் அவர்களுக்கும் உதவிகரமாக இருக்கும், இன்னொரு இலாகாவிடம் போய் கேட்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்காது என்ற காரணத்தினுல்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து, சாண எரிவாயுத் திட்டம். உதவித் தொகை வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஒன்றுக்கு ரூ. 6,000, ரூ. 7,000 ஆகிறது. மானியம் கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும் யாரும் அதை நடத்த அவ்வளவாக முன்வருவதில்லை. ஆகவே இதற்காக சற்று அதிகம் மானியம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மத்திய அரசு கூட அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. கூடுதல் மானியம் அளித்து அதற்காகும் செலவைக் குறைக்க வேண்டும், அதற்கான வழிவகை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) மாநகராட்சி பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மணி அடிக்காமல் என் கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோடம்பாக்கம், திருவான்மையூர் இவற்றை சுற்றியுள்ள கிராமங்களை கார்ப்பரேஷனில் சேர்த்திருப்பது வரவேற்கத் தக்கது. நகரத்தில் உள்ள வசதிகள் அந்தக் கிராமங்களுக்கும் கிடைக்க இது உதவிகரமாகயிருக்கும். சில பேர்கள் சொல்கிறார்கள், கிராமங்களில்தான் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்று. சென்னை நகரில் உள்ள வளர்ச்சியோடு கிராமங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் கிராமங்களில் குறைந்த அளவு வசதிகள் தான் உள்ளன. இங்கே ஒரு ரோட்டிலாவது ஒரு குழி, பள்ளம் இருக்கிறதா ? கிராமங்களுக்கு வந்து பாருங்கள், எவ்வளவு குழிகள் பள்ளங்கள் இருக்கின்றன என்பது தெரியும்.

திரு. மு. அரங்கநாதன்: பாயின்ட் ஆப் ஆர்டர். சென்னை நகரில் இருக்கிற சாலைகளில் குழி, பள்ளம் இல்லை என்று சொல்கிறார்கள். நண்பர் ராமசாமி அவர்கள் என்னோடு வந்தால் காண்பிக்கத் தயார், ஆயிரக்கணக்கான குழிகள், பள்ளங்கள் இங்கு இருக்கின்றன.

திரு. எஸ். ஜே. இராமசாமி: என்னுடன் வந்தால் என் கிராமத்தில் அவற்றைக் காண்பிக்கத் தயாராயிருக்கிறேன். திரு. அரங்கநாதன் என்னோடு வராதவர் அல்ல.

குப்பை கூட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படயிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். அது வரவேற்கத்தக்க அம்சம். ஆனால் அதற்காக பணம் ஒதுக்கும்போது ஜாக்கிரதையாகச் செலவு செய்ய வேண்டும். ஏனென்றால் நகராட்சியில் பலவித தவறுதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கொஞ்சம் உஷாராக இருந்து கண்காணித்துச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12.40)

மேலும் அங்கு துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நெடுங்காலமாக அவர்கள் சென்னையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். வேலூரில் இப்படிப்பட்டவர்கள் மார்க்கட்டில் கடைகள் வைத்திருக்கிறார்கள். நகராட்சி மன்றம் இவர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கிறார்கள். அதாவது 11 மாதம் கொடுக்கிறார்கள். இந்த 11 மாதத்தில் எப்படி வியாபாரம் பண்ண முடியும்? இப்படி நகரங்கள் முழுவதும் இந்த உதவி இருக்க வேண்டும். அது மட்டுமல்ல 11 மாதம் என்றில்லாமல் குறைந்தது மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் கடை வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உதவி சபாநாயகர் அவர்களின் விருப்பப்படி இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, சபையின்முன் வந்திருக்கக்கூடிய சமுதாய நல வளர்ச்சி ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை ஆகிய மானிக்கங்களை வரவேற்று (சிரிப்பு) மான்யங்களை வரவேற்று

என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன், நான் மாணிக்கம் என்று சொன்னால்கூட அது தவறில்லை. சமுதாய நல வளர்ச்சி என்பது "The soul of India lives in villages" என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதை மாணிக்கம் என்று சொன்னாலும் பொருத்தம் தான்.

சமுதாய நலத்திற்காக நமது புரட்சித் தலைவர் அவர்கள் தனது முழு சக்தியையும் பயன்படுத்தி, ஏழை, பாட்டாளி, விவசாய மக்களுக்காகப் பாடுபடுகிறார், அதற்காக பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டங்களை எல்லாம் மாணிக்கம் என்று சொல்வதில் எந்தவித தவறும் இல்லை மிகவும் பொருத்தமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இதற்கு மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நிதியைச் சற்று அதிகமாக ஒதுக்கியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். நமது முதல்வர் அவர்கள் சமுதாய நலனுக்காகப் பாடுபடக்கூடியவர்கள் இதில் அக்கறை செலுத்தி இன்னும் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என்பதை இந்திய தேசீய பார்வார்டு பிளாக் சார்பாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையில் நாட்டுக்குச் சுதந்திரம் வந்த காலத்திலிருந்து கிராம ராஜ்யமாக அமைய வேண்டுமென்று "Unto the last" of Mr. Ruskin" என்கிற புத்தகத்தைப் படித்து—கிராமங்களில் எல்லாம். "Most neglected and uncared for; ignored by the society" என்று இருக்கிற நிலையைப் போக்கி சமுதாய நலங்களை ஏற்படுத்துவதற்காக—நல்ல பணிகளை எல்லாம் செய்வதற்காக—இந்த நாட்டில் ராம ராஜ்யம் என்கின்ற அளவில் அமைய வேண்டும் என்பதற்காக ராம காவியத்தைப் படித்து—அன்றைக்கு ராமன் ஆட்சி நடந்தது போல் கிராம ராஜ்யமும் நடைபெற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததுதான் கிராம ராஜ்யம். 'கிராம ராஜ்யம்' என்று ஒரு பத்திரிகை கூட நடத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு கிராமங்களில் சாதாரணமாக நடைபெறுகின்ற தேர்தலில்கூட கணவனுக்கு

மனைவி விரோதமாக மாறிவிடுகின்ற அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. இந்த நிலைமையில், அன்றைக்கு ராமச்சந்திரனுடைய ஆட்சியின்கீழ் ராம ராஜ்யம் நடைபெற்றதைப் போல் இன்றைக்கு புரட்சித் தலைவர் இராமச்சந்திரனுடைய தலைமையின்கீழ் கிராம ராஜ்யத்தின் ஆட்சி நடைபெறுகின்ற நிலை. . . rare histrical coincidence. இது இயற்கையாகவே அப்படி அமைந்துவிட்டது. (ஆளும்கட்சி தரப்பில் ஆரவாரம்.) இன்றைக்கு இயற்கை நமக்குச் சாதகமாக அமையாவிட்டால் மிகுந்த வேதனைப்பட்டிருப்போம். வறுமை நீடித்துக் கொண்டுதான் இருந்திருக்கும். இயற்கையிலேயே குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்துவிட்டது, இல்லாவிட்டால் மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் முயற்சி எடுத்து எவ்வளவோ கோடிக்கணக்கில் பூமியில் கொட்டினாலும் கூட குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்திருக்காது. எங்கள் தொகுதியில் பல இடங்களில் குடிதண்ணீர் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது, அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். உங்கள் தொகுதிக்கு வருகிறேன் என்று சொன்னார்கள், அவர்கள் ஜோஸ்யம் சொல்வது போல் சொன்னார்கள். அதற்கேற்றவாறு இந்த ஆண்டு இயற்கையின் விளைவால் நாடு முழுவதும் தண்ணீர் வந்தது. இப்படி இயற்கை நம்மோடு ஒத்துழைத்தது. ஒத்தாசை செய்தது, ஆனால் சில மனிதர்கள் ஒத்தாசை செய்ய மறுத்து வருகிறார்கள். காரணம் நமது இந்திய நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது அரசியல் காரணங்களுக்காக மூலைமுடுக்குகளில் எல்லாம் எத்தனையோ விதமான கருத்து வேறுபாடுகள் என்றெல்லாம் இருந்தாலும்கூட இயற்கை நமக்கு ஒத்தாசை செய்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் கிராம மக்களின் நலனில் அக்கறை கொண்டு அதற்காகப் பாடுபடுகிறார்கள். அதோடு இந்தத் துறைக்கு கொஞ்சம் அதிக நிதியையும் ஒதுக்கி ஒத்தாசை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலுள்ள நரிக்குடியிலிருந்து வண்ணான்குளம் என்கிற ஊருக்குப் போக வேண்டுமென்றால்—இந்த ஊர் நமது முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியில் தான் இருக்கிறது— இந்த ஊருக்கு வண்டியில் தான் நானும் பெரியசாமி அவர்களும்,

பெருமாள் அவர்களும் போனேம், காரில் போக முடியவில்லை, வண்டி கூட சரியாகப் போக முடியாத அளவுககு, சாலை பழுதடைந்திருந்தது. இது முதல்வர் தொகுதியில் சேர்ந்த இடமாக இருந்தும் கூட, ஏதோ சுயநலம் காரணமாக ஏதோ அதிகமாகச் செலவு செய்து விட்டார்கள் என்று எண்ணுமல் இருக்கின்ற அளவுக்கு கவனிக்கப்படாமல் இருக்கிறது என்கின்ற நிலைமையையும் நிலவரத்தையும் சபாநாயகர் அவர்கள் மூலமாக நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தெரிந்து கொள்வதற்காக இதைச் சொல்லுகிறேன். சாலை வசதி, கிராமப்புறங்களில்—போக்குவரத்து வசதி இதில் முதல் கவனம் செலுத்தி, மக்களுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிக்க பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த டெவலப்மெண்ட் ஸ்டாபைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதிலே வேலை செய்யக்கூடிய பீ.டீ.ஓ., டீ.டீ.ஓ., கிராம சேவக், இன்னும் விஸ்தரிப்பு அதிகாரிகள் என்று சொல்லப்படுகின்ற எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் எல்லாம் இருக்கிறுர்கள். நான்கூட வெங்கடாசலபதி அவர்கள் காலத்திலே விஸ்தரிப்பு அதிகாரியாக வேலை பார்த்தேன். அவர் சொல்வார்கள். கதர் அணிய வேண்டும். காந்தி அடிகள் கண்ட திட்டத்தை நல்ல முறையிலே கிராம மக்களிடையே பரப்ப அவர்களை அணுக வேண்டுமானுல், நமது உடை, நடை, பாவனை எல்லாம் அதிகாரிகளைப் போல் அல்லாமல், ஏதோ ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வருகிறுர், தாசில்தார் வருகிறுர் நம் பொருள்களை ஜப்தி செய்வதற்காக வருகிறுர் என்று பயந்து ஓடாமல், நாம் அவர்களுக்கு நன்மை செய்வதற்காக வருகிறேம் என்கின்ற முறையிலே நாம் அவர்களை அணுக வேண்டுமென்று சொல்வார்கள். அது இன்றைக்கு உண்மையா என்று பார்ப்போமானுல், இல்லை. அப்படி மக்களோடு மக்களாக நாம் இணைந்து செயல்பட வேண்டும். இப்போது அப்படிச் செயல்படவில்லை என்பதை நான் மிகவும் வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன்.

இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், இந்த அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் 'பைப்பர்கேட்' செய்யப்பட்டு பிரித்து எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, தங்களுக்குப் போதிய அதிகாரமில்லை என்று சொல்கிறார்கள். காரணம், அவர்களுடைய அதிகாரங்கள் எல்லாம் இப்படி பல நிலையிலே, இன்றையதினம் பல துறைகளாலே பிரித்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் சோர்வு அடைந்திருக்கிறார்கள். கிராமத்திலே இருந்து வருகின்ற மக்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய அளவுக்கு அவர்களுக்கு சக்தியிருக்கிறது; ஆனால் அதிகாரம் இல்லை. அதனால் அவர்கள் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. இது எப்படியிருக்கிறதென்றால், பச்சை இலையிலே பச்சைப் புழு போய் உட்கார்ந்திருக்கும். அப்படி ஒரு அரை மணி நேரம் உட்கார்ந்திருந்தால் போதும். அதிலே இருக்கக்கூடிய சத்து அனைத்தையும் உறிஞ்சி விடும். ஆனால் பார்ப்பதற்கு பெயரளவிற்கு பச்சை பசேலென்று இருக்கும். அதேபோல்தான் இந்த அதிகாரிகள் காட்சியளிக்கிறார்கள். பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தோடு இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் அதிகாரம் இல்லை என்பதை நான் மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு அதிகாரம் தரவேண்டும் ஏதோ அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து விடுவார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. இதிலே இருக்கக்கூடிய பண்டமென்டல் ஆப்ஜெக்ட் என்னவென்றால், கிராமங்களிலே இந்த லெவலிலே இருக்கக்கூடிய ஸ்மாலர் டெவலப்மெண்டு அதிகாரிகளுக்கு அதிகாரத்தை டீ-சென்ட்ரலைஸ் பண்ண வேண்டும். இதற்கு உதவியாக மினிஸ்டீரியல் அட்மினிஸ்ட்ரேஷனிலே உள்ள டிபார்ட்மெண்டு அதிகாரிகள் இத்தகைய அதிகாரிகளுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தால், வேலையை முறையாகச் செய்வார்கள். இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்று சொன்னால், உதாரணத்திற்கு ஒரு என்ஜினியர் ஹைவேஸ் ரோடு போட வேண்டுமென்றால், ஆண்டிப்பட்டியிலிருந்து மதுரைக்கு 50 மைல் தூரம் சென்று, டீ.இ.யிடம் சாங்ஷன் வாங்கி வர வேண்டுமென்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இதனால், இப்படிப்பட்ட ஹைவேஸ் ரோடு போடுவதாக இருந்தாலும். ரூரல் ரோடு போடுவதாக இருந்தாலும் இதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. கே. கந்தசாமி]

அடுத்ததாக, மற்ற டிபார்ட்மெண்டிலே இருக்கக்கூடியவர்கள் இதிலே வேலை செய்கின்ற அதிகாரிகளை ஏதோ ஒரு தேர்ட் பார்ட்டியைப் போல், ஆர்பனேஜைப் போல் நினைக்கிறார்கள். அவர்களை கவுரமாக நடத்துவதில்லை. வேறுபடுத்தி நடத்துகிறார்கள். பஞ்ச நிவாரணக் காலத்திலும், வெள்ள நிவாரணக் காலத்திலும சில இடங்களில் அவர்கள் முறையாகப் பயன்படுத்தாத காரணத்தினால், வேடசந்தூர் போன்ற இடங்களில் வேலையில் தாமதம் ஏற்பட்டது என்ற விவரத்தை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட அறிவார்கள். அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தோம். ஆகவே, இப்போப் பட்ட அதிகாரிகளுக்கு உரிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால், அவர்கள் உரிய முறையிலே செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.

முன்னாலே எல்லாம் கிராமங்களுக்கு இத்தகைய அதிகாரிகள் சைக்கிளிலே போய் வருவார்கள். இப்போது பீல்டு மேன், அக்ரிகல்சுரல் ஸ்டாப் போன்றவர்கள் அப்படிப் போவதில்லை. பயிருக்கு பூச்சி அடித்திருக்கிறது என்று சொன்னால், இவர்கள் ஆபீசிலேயே உட்கார்ந்து கொண்டு பதில் சொல்கிறார்கள். 'சம்திங் லைக் கிளரிகல் ஸ்டாப் மாதிரி இருக்கிறார்களே தவிர, எக்சிகியூடிவ் பீல்டு ஸ்டாப்' மாதிரி அவர்கள் பணியாற்றுவதில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்திலே நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்கள், இரண்டு மைல் என்று சொன்னாலும்கூட, கிராமங்களுக்கு நடந்தோ அல்லது சைக்கிளிலோ போவது கிடையாது. கம்பளிப் பூச்சி போன்ற பூச்சியினால் பயிர்கள் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் சேதமடைய உள்ளது என்று சொன்னாலும்கூட, ஆபீசிலேயே உட்கார்ந்து கொண்டு, வெள்ளைக்காரன் போல் பதில் சொல்கிறார்கள் என்பதை மிகவும் வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். "we are here to serve the people who are our master" என்ற நிலைமையிலே அவர்கள் செயலாற்ற வேண்டும். அந்த நிலைமை இன்றில்லை.

அடுத்து, பார்ட் டைம் கிளார்க் என்று சொல்லக்கூடியவர்கள் மாதம் 25, 20 ரூபாய்க்கு பஞ்சாயத்துக்களில் பணியாற்றுகிறார்கள். இப்படி இவர்கள் 10, 15 வருஷங்களாக 3, 4 பஞ்சாயத்துக்களில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் அந்தப்

பஞ்சாயத்துத் தலைவர் பதவி முடிந்து போகும்போது, இவர்களும் வீட்டிற்குப் போகக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். தவிர, "poor paid, ill paid and unsafe, they are".
எனவே, இவர்களை ரெகுலேஸ் பண்ணி, இவர்களுடைய நிலைமைக்கும் நாம் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

[பிற்பகல் 12.50]

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனில் 50 ஸ்கூல் கண்டக்டர்ஸ், ஆயாக்கள் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எட்டு, பத்து வருஷ காலமாக வேலை பார்த்து வந்தும் 50 ரூபாய் தான் சம்பளம் பெறுகிறார்கள். சில யூனியன்கள் அவர்களுக்கு 75 ரூபாய், 100 ரூபாய் கூடக் கொடுப்பதாக அறிகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் டெவலப்மென்ட் ஸ்டாப் பெட்ரோல் இல்லாமல் நீண்ட தூரம் போய்ப் பார்க்க வேண்டிய இடங்களுக்குப் போகாமல் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் கூட சரியாகப் போவதில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வந்த நேரத்தில் கூட 15 பேர் யூனியனில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் அட்டெண்டன்ஸ் போடப்பட்டிருக்கிறது. ஒரு மாதம், இரண்டு மாதங்கள் கூட பள்ளிக்கூடத்திற்குப் போகாமலே சம்பளம் வாங்கக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இந்தக் குறைகள் போக்கப்பட வேண்டுமென்றால் நான் ஏற்கனவே கூறியதுபோல் அந்த யூனியன் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். அப்படி இரண்டாகப் பிரிப்பதற்கு நிதி குறுக்கே இருக்கிறது என்கிறார்கள். நான் நாஞ்சிலார் அவர்களுக்குத் தனி வேண்டுகோளாக வைக்கிறேன். ரொம்ப நாள் கோரிக்கை; காட்டுப் பகுதி, மலைப் பகுதி அந்த மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் இரண்டாகப் பிரிக்க வழிவகை செய்ய வேண்டும்.

நிலப்படை—லாண்ட் ஆர்மி பற்றி முதல்வர் அவர்கள் முடிவு எடுத்து அறிவிக்க வேண்டிய விஷயம். பஞ்சாயத்து டெவலப்மென்ட் ஸ்டாப் சேர்ந்து செயல்பட்டால் நல்ல முறையில் இருக்கும் என்று கருதுகிறேன். இந்த மானியத்தை வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

1978 மார்ச் 10]

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த முன்னேற்றங்கள் எல்லாம் நாடு நகரங்களில் ஏற்பட்டு வருகின்றன என்று சொல்லும்போது அந்த நாடு நகரங்களுடைய முன்னேற்றங்களுக்கு, மேம்பாடுகளுக்கு நிதி ஒதுக்கிடக் கோரும் கோரிக்கைகளாக இந்தக் கோரிக்கைகள் அமைந்திருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்த நாட்டில் மன்னராட்சி இருந்தது. மன்னராட்சி வேண்டாமென்று வரலாற்று நிகழ்ச்சிகள் அந்தத் தத்துவத்தை ஒதுக்கித் தள்ளியது. காரணம் அது தனி மனிதனுடைய சுரண்டல் ஆட்சியாக இருந்த காரணத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்டது. பிரபுக்கள் ஆட்சி நாட்டில் இருந்தபோது ஒருசிலரே நாட்டின் பொருளாதார வளத்தைச் சுரண்டிக் கொண்டிருந்தார்கள் என்ற காரணத்தால் பிரபுக்கள் ஆட்சியும் ஒழிக்கப்பட்டு விட்டது.

இன்று உலகம் முழுவதும் சோஷலிச தத்துவத்தை ஏற்றுக் கொண்ட ஜனநாயக ஆட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஜனநாயக ஆட்சி முறையிலே மக்களுக்குச் சேரவேண்டிய நன்மைகள் முறையாகச் சேருகின்றனவா என்ற கேள்வி எழுப்பப்படும்போது—இங்கே கூட ஒருவர் சுரண்டல் மறைந்து, பலருடைய சுரண்டல் மறைந்து, இன்றைக்குச் சுரண்டல் அடிப்படையே பரவலாக்கப்பட்டிருக்கும் முறையிலே இன்று ஜனநாயக அமைப்பே மாறிவிடுமோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிணற்றிலேயிருந்து நீரை இறைத்து கால்வாய் மூலமாகப் பாய்ச்சுகிறோம். ஆனால் பயிரைப் போய்ப் பார்த்தால் காய்ந்து கொண்டிருக்கிறது. எந்தப் பயிருக்காக வாய்க்காலில் நீரைப் பாய்ச்சினோமோ, அந்தப் பயிருக்கு நீர் செல்லவில்லை. வாய்க்காலில் இருக்கும் சந்து பொந்துகளில் அந்த நீர் எங்கோ சென்று விட்டது. பயிருக்குச் செல்லவில்லை. பயிர் வாடிக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமைதான் இன்றைக்கு நாட்டில்

இருக்கிறது என்று சொல்லிக் கொள்வதோடு இது ஒரு பயங்கரமான உணர்வை மக்களிடத்திலே ஏற்படுத்தி வருகிறது. இதைத் தடுக்க செம்மையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

அப்படி அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை, சமுதாயத்திலே தூய்மை ஏற்பட வேண்டுமென்ற திட்டங்களைக் கொண்டு வரும் போது அதற்கு ஏற்படுகிற தடங்கல்களையும், எதிர்ப்புகளையும் உணர்ந்தவர்களாக இருக்கிறோம். ஆனால் மக்களுடைய நன்மைக்காகச் செய்யப்படுகிற இந்தக் காரியத்திற்கு ஏற்படுகிற எதிர்ப்புகள் முறியடிக்கப்படும், வேரோடும் மண்ணோடும் தகர்த்தெறியப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

இன்றைக்கு இந்திய நாட்டிலுள்ள 61 கோடி மக்களில் 2 கோடி மக்கள்தான் இந்த நாட்டின் வளத்தை, இந்த நாட்டின் பொருளாதாரம் உயர்ந்திருப்பதால் இருக்கிற வருமானத்தை (இன்க்ரீஸ்டு இன்கம்) அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். 59 கோடி மக்கள் அன்-ஆர்கனைஸ்டாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, உதாசீனப் படுத்தப்படுவார்களாக கவனத்தைப் பெறமுடியாத நிலையில் இருக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். இதே நிலைமை நீடிக்குமானால் எந்த ஜனநாயகத்தை மக்கள் விரும்புகிறார்களோ அதே ஜனநாயகத்தைத் தூக்கி எறிவதற்குக் கூட மக்கள் தயங்கமாட்டார்கள். காரியத்திற்கு உதவாத, கவைக்கு உதவாத தத்துவம், மக்கள் வாழ்க்கைக்கு வளம் சேர்க்காத தத்துவம் மக்களுக்குத் தேவையில்லை என்று உணர்வு நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு திட்டங்கள் கிராமங்கள் வளர வேண்டும், நகரங்கள் வளரவேண்டும், நகரத்திலே சுகாதாரம் மேம்பாடு அடைய வேண்டும், நகர மக்களுக்கு கிராம மக்களுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையிலே நாம் எல்லாக் காரியங்களையும் செய்துகொண்டு

1978 மார்ச் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

இருக்கிறபோது அவை பயனற்றவையாக மாறுமேயானால் நிச்சயமாக மக்களிடமிருந்து வரிகளைப் பெறுவதற்கு நமக்கு உரிமையில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். These should be a corresponding benefit to the people for all the tax they have paid."

இது ஒரு பன்டமெண்டல் பிரின்சிபிள். வரிக் கொடுக்கின்ற மக்கள் தாங்கள் எவ்வளவு வரி கொடுக்கிறார்களோ அவ்வளவு அந்த அளவிற்கு நன்மை கிடைக்காவிட்டால் வரிக் கொடுக்க மாட்டோம் என்று சொல்வார்களேயானால் தர்ம நியாயப்படியும், சட்டப்படியும் அது நியாயம் என்று கற்பிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும். நகர மக்கள் வரி கொடுக்கிறார்கள், கிராம மக்கள் வரி கொடுக்கிறார்கள், எதற்காகக் கொடுக்கிறார்கள்?

To have the basic civic amenities

எலக்டரிசிடி வேண்டும், சாலைகள் வேண்டும், துப்புரவு வேண்டும் என்பதற்காகத்தான், துப்புரவு இன்றைக்குப் பார்த்தால் துப்புரவு என்ற அந்த வார்த்தையையே துப்புரவாகப் பெருக்கி வீசிவிட்டிருக்கிறார்கள். துப்புரவைத் துப்புரவு செய்து இருக்கிறார்களே தவிர துப்புரவு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு, மூன்று வாரங்களாக துப்புரவு செய்யப்படாத நிலைமையில் குப்பைகள் எடுக்கப்படாமல் இருக்கிறது. ஒரு வாரமாக விளக்குகள் எரியவில்லை. அங்கேயிருக்கின்ற சானிடேரி இன்ஸ்பெக்டர்களைப் பார்த்தால் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு கீழ் நிலையிலே உள்ள ஊழியர்களுடைய சம்பளத்தை முதல் தேதியிலே பட்டுவாடா செய்யாமல் அவர்கள் வட்டிக்குப் பணத்தை கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆம்பூரிலே இப்படி நடக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ஆனால் அது வேறு துறை, நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். என்ன இருந்தாலும் கூட்டுப் பொறுப்பு என்று ஒன்று இருக்கிறது. அவர்களும் முனிசிபல் எம்ப்ளாயிஸ்தான். அவர்கள் தவறுகளைச் செய்கிற போது அவற்றைக் கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் செய்தால்தான் பணிகள் நல்ல முறையிலே நடைபெறும். இந்தத் துறையை நிர்வகிக்கின்ற அமைச்சர் அவர்களும்

துறைத் தலைமை அதிகாரிகளும் மிகவும், சுறுசுறுப்போடு பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றுகிறவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

கீழ் நிலையிலே உள்ளவர்கள் ஆர்கனைஸ்ட் ஆக இருப்பதால் அவர்கள் வேலைக்கு வந்தாலும் வராவிட்டாலும் முழுமையாக வேலைசெய்தாலும், வேலை செய்யாவிட்டாலும், எங்களுக்கும் சம்பளம் வந்துவிடும், நாங்கள் ஏன் செய்யவேண்டும், எங்கள் மீது ஏதாவது டிஸிப்ளனரி ஆக்‌ஷன் எடுத்தாலும் கூட அது நீக்கப்பட்டுவிடும் என்ற முறையிலே Because we are organised என்ற காரணத்தாலே வரிக் கொடுக்கிற மக்கள் எங்களுக்கு அதற்குச் சரியான பலனைத் தாருங்கள் என்று கேட்கக்கூடிய உரிமை உண்டு. அந்த உரிமையை நாம் அவர்களுக்குத் தர மறுத்தால் நாட்டிலே ஒரு குழப்பம் தான் ஏற்படும்.

வாணியம்பாடியிலே மொத்த விளக்குகள் எண்ணிக்கை 1008. அதிலே 207 தான் எரிகின்றன, 1008-இல் 207 விளக்குகள் தான் எரிகின்றன. அதைப்போல சாலைகளிலே சிறிய சாலைகள் எல்லாம் சேர்த்து 300 சாலைகள் இருக்கின்றன, ஆனால் ஒரு சாலையிலே கூட அது மோட்டாரபிள் அதாவது வண்டி போகக்கூடிய சாலையாக இல்லை. சாலைப் பராமரிப்பை எடுத்துக் கொண்டால் இரண்டு வாரங்களாக குப்பைகள் எடுக்காமல் இருக்கிறது. கேட்டால் —.

We are organised sector. We can do anything because this is democracy. In democracy anything can be done by anybody. Everybody is the King of this country. So nobody can question, including the Minister, Administrative Officers, because I am the King, I am the Monarch. I survey that everybody thinks that I am the King.

* * * *

என்று சொல்கிறார்கள், இப்படிச் சொல்கிற அளவிற்கு இருக்கிறது என்றால் இந்த நாட்டிலே நான் கூட கிங் தான், என்னுடைய மூக்கை உடைத்தால் உன்னுடைய மூக்கை உடைப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. . . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. லத்தீப் அவர்கள் நானும் ஒரு கிங் என்று சொன்னார். அவர் எந்த நாட்டினுடைய நவாபு என்று கேட்க விரும்புகிறேன்.

1978 மார்ச் 10]

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த நாட்டு மக்கள் எல்லாம் நவாபு கள்தான் என்பதுதான் என்னுடைய ஜவாபு. (ஆரவாரம்.) ஆகவே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆம்பூரிலே 1,155 விளக்குகள் இருக்கின்றன. அவைகளில் 278 விளக்குகள்தான் எரிந்து கொண்டிருக்கின்றன. தயவுசெய்து

[பிற்பகல் 1-00]

அமைச்சரவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருது கிறேன்.

பஞ்சாயத்துப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் எவ்வளவு பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள், பஞ் சாயத்து யூனியன்களின் சார்பில் மாநிலம் பூராவும் 23,077 பள்ளி கள் நடத்தப்பெறுகின்றன என்று. ஆனால், எத்தனை பள்ளிகள் உண்மையிலேயே நடந்து வருகின்றன? சுமார் 15,000 பள்ளி கள் சரிவர நடைபெறாமல், திறக்கப்படாமல், கல்வி தரப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. 3,000 ஸ்கூல்கள் கோஸ்ட் ஸ்கூல் களாக இருக்கின்றன. அந்த ஸ்கூல்கள் எல்லாம் இருக்கிறதா என்றால் உண்மையில் இல்லை. அமைச்சரவர்கள் என்னோடு வரட்டும், துறைத் தலைவர்களும் வரட்டும். என்னுடைய பகுதி யிலேயே சொல்கிறேன், வேறு பகுதிக்குக்கூடச் செல்ல வேண்டி யதில்லை. திருப்பத்தூரிலும், ஆம்பூரிலும் ரெக்கார்டில் தான் பள்ளிகள் என்று இருக்கின்றனவே தவிர, அங்கே சென்றால் ஸ்கூலும் கிடையாது, மாணவர்களும் கிடையாது, உபாத்தியார் களும் கிடையாது. ஆனால், ஒவ்வொரு மாதமும் சம்பளப்பட்டு வாடா மட்டும் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி பஞ்சாயத்து யூனியன்களினால் நடத்தப்படும் ஸ்கூல்களில் சுமார் 3000 ஸ்கூல் கள் கோஸ்ட் ஸ்கூல்களாக இருக்கின்றன. இதை நான் ஒரு சேலஞ்சாகவே எடுத்துக் கொள்கிறேன். அமைச்சர் ரிபட் செய்யட்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைன்று, சமுதாய வளர்ச்சித் திட்டத்தை எடுத்துக் கொண்டால், சென்டரல் கிச்சன் என்று, அதாவது மதிய உணவுத் திட்டம் என்று நடத்துகிறார்கள். அங்கே என்ன அநியாயம் நடக்கிறது ? இருதயமே இல்லாத, மனிதாபிமானமற்ற மக்களிடத்தில் இதைக் கொடுத்து, ஏழைப் பிள்ளைகளுக்காக மதிய உணவு கொடுக்கத் தரப்படுவதெல்லாம் அவர்களுடைய வீடுகளுக்குப் போய்விடுகிறது. பாவம், அந்தச் சிறிய குழந்தைகள் மதிய உணவு சாப்பாட்டிற்காக வருகின்றபொழுது ஒரு குவளை, சில இடங்களில் அதுகூடக் கிடைப்பதில்லை. பல ஸ்கூல்களில் அது கிடைப்பதில்லை. ஒரு நிகழ்ச்சியைப் பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஆலங்காயம் பகுதியில் உள்ள சென்டர் கிச்சனில் இருந்து மிளகாய், பருப்பு, அரிசி, எண்ணெய் எல்லாம் திருட்டுப் போய்விட்டது என்று கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். நானும் அப்பொழுது இருந்தேன். அவன் என்னிடத்திலே வந்து அழுதான். அதிகாரிகளிடத்தில் சொல்லி, அதிகாரி மன்னித்து விட்டார்.

பிறகு 4 ஆம் தேதி நான் போயிருந்தேன். சட்ட மன்ற உறுப்பினர் போனார் என்பதற்காக கையும் களவுமாகப் பிடித்து வந்தார்கள். மிளகாய், எண்ணெய் இவைகளோடு, செண்ட்ரல் கிச்சனில் வேலை செய்யும் ஒரு ஊழியரைப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். வந்தவுடன் அவன் காலிலே விழுந்து, மன்னித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறான். சட்டமன்ற உறுப்பினர் ஒரு நாள் போனதற்கே பிடித்துக் கொண்டு வருகிறார்கள். இது ஆலங்காயத்தில் மட்டுமல்ல, எல்லாயிடங்களிலும் நடக்கின்ற நிகழ்ச்சியாக இருக்கிறது. ஏழைகளுக்காக, 'கேர்' நிறுவனம் தரும் அந்த உணவுப் பொருட்களை மற்றவர்கள் திருடிச் செல்கிறார்கள் என்றால் தயவு செய்து அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். அப்படித் திருடிச் செல்கின்றவர்களுக்கு அதிகபட்சத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய ஜவ்வாது மலையைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. உங்கள் துறையைச் சார்ந்த தலைமை அதிகாரிகள் இதிலே அக்கறையெடுத்து சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். அதற்

1978 மார்ச் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

காக உங்கள் மூலமாக அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலங்காயத்தில் கட்டிடங்கள் இருக்கின்றன. அப்படியே அவைகள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தும் வகையில் ஆலங்காயத்தைத் தலைமை நிலையமாக வைத்து, வேறொரு யூனியன் ஏற்படும்பொழுது அதைப் பயன்படுத்த வேண்டும்.

பாலசேவிகா, பால்வாடி ஆகிய இவர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு 70 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. 70 ரூபாயை வைத்துக் கொண்டு ஒரு குடும்பத்தை எப்படி நடத்த முடியும்? தாதியருக்கு 30 ரூபாய் சம்பளம். 30 ரூபாயைப் பெற்றுக் கொண்டு முழு நேர ஊழியராக எப்படி இருக்க முடியும்? அவர்கள் வேறு எங்கேயோ வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்; பேருக்கு 30 ரூபாயை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். 30 ரூபாய் கொடுத்து அவர்களைப் பேருக்கு வைத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒன்று, தாதியர் என்பதையே எடுத்துவிடுங்கள் அல்லது 30 ரூபாய்க்குப் பதிலாக 150 ரூபாயாவது சம்பளம் கிடைக்கும் வகையில் தாதியர்களுக்கும், சேவிகாக்களுக்கும் ஏற்பாடு செய்தால் அது நல்லமுறையிலே பயன்படும்.

வட்டார வளர்ச்சி, கிராம வளர்ச்சி, நகர வளர்ச்சி ஆகிய இவைகளுக்காக இன்னும் கொஞ்சம் மானியம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். எல்லா நகராட்சிகளுக்கும் அரசாங்க மானியத்தை அதிகமாக ஆக்கி, போர்க்கால நடவடிக்கையைப் போல எடுத்து, எல்லா நகராட்சிகளையும் செட்-ரைட் செய்ய வேண்டும். 100 கோடி ரூபாய் என்ற அளவில் அதிகமாக ஒதுக்கி செம்மைப் படுத்துகின்ற அந்தக் காரியத்தைச் செய்தால் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற அது வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சாவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த வாட்டர் போர்டைப் பொறுத்தவரையில். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள்தான் தினமும் பேசுகிறீர்கள். நாளைக்குப் பேசுங்கள்.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir, just one one minute. May I beg your pardon. கடைசியாக,

The Hon. Minister for Local Administration must send a notice to Mr. Raghavanandam.

என்ன காரணம் என்று சொன்னால், நமக்குச் சேர வேண்டிய இந்த முனிசிபாலிட்டிகளுக்கு, லோக்கல் பாடிஸ்ஸுக்குச் சேர வேண்டிய பணத்தை—கணக்குகளை எல்லாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்—தண்ணீர் திட்டங்களுக்காக, நம்மிடம் வாங்க வேண்டிய பணத்திற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தினர் வட்டி வாங்குகிறார்கள். ஆனால், நம்மிடமிருந்து வாங்கும் பணத்திற்கு அவர்கள் வட்டி கொடுக்கவில்லை.

Within 15 days of this date if they do not send a circular, then you must send a notice, and if you want my services I am also ready to render my services, with justifiable facts and figures to the Hon. Minister for Water Boards.

HON. THIRU S. RAGHAVANANDAM : Water Board is an Autonomous Body.

* திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, இந்த மன்றத்திலே பேசிய நம்முடைய ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் அனுபவம் வாய்ந்த முதியவர், பெரியவர். அவர் ஒரு கருத்தைச் சொன்னார். கிராமப்புறத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதுமானது அல்ல என்று சொன்னார். குற்றச்சாட்டாகக் கூடச் சொன்னார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரத்தைப் பார்த்தால் கூட அப்படித்தான் தெரிகிறது.

பொதுவாக, எல்லோரும் என்ன பேசுகிறார்கள்? கிராம வளர்ச்சி, கிராம முன்னேற்றம் என்று பேசுகிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், போதுமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அது வேதனை தரத்தக்கதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நம்முடைய நிதியமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற சில பகுதிகளைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். ". . நமது ஆண்டுத் திட்டங்களையே எடுத்துக்கொண்டால், நகரப் பகுதிகளுக்கு நபர்வாரி முறையில் செலவிடப்படும் தொகையில் பாதிக்கும் குறைவாகவே கிராமப் பகுதிகளுக்குச் செலவிடப்படுகிறது." மேலும் சொல்கிறார், "கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இந்த ஏற்றத் தாழ்வைப் போக்குவது இந்த அரசின் கொள்கையாகும்' என்று அதேபோல ". . . . அரசைப் பொறுத்தவரை, கிராமங்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து, ஆண்டுக்காண்டு கிராமப்புறங்களுக்காக ஒதுக்கப்படும் தொகைகளைப் பெருக்கி, இந்தப் புரட்சிப் பணியில் பின்தங்காது முன்னேற்றம் காணத் திடமாகச் செயல்படுவோம். . ." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைக் கொள்கை விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, நிதி ஒதுக்கீடுகளைப் பார்க்கும்போது, எதிர்பார்க்கிற அளவு நிதி ஒதுக்கப்படவில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பார்க்குபோது. 1976-77-ல் மொத்த ஒதுக்கீடு ரூ. 628.98 கோடி. அதில் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூ. 34.94 கோடி. அதே நேரத்தில், 1978-79-ல் ஆண்டு ஒதுக்கீடு ரூ. 726.75 கோடியாகும். 1976-77-ஐ விட 1978-79-ல் அதிக ஒதுக்கீடு 17 சதவீதம். ஆனால், ஊரக வளர்ச்சிக்கு ரூ. 35.65 கோடி, 1978-79-ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 1976-77-ஐ விட, 2 சதவீதம் அதிகமாக இருக்கிறது. ஆண்டு ஒதுக்கீடு 17 சதவீதம் உயர்ந்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சிக்கு அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் 2 சதவீதம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், ஊரக வளர்ச்சியைப் பார்க்கும்போது, 1976- ரூ. 140.92 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1978-79-ல் ரூ. 143.07 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1.5 சதவீதம்தான் அதிகமாக, பல்வேறு துறை முதலீடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல். ஊரக வளர்ச்சியைப் பார்க்கும்போது, 1976-77-ல் மொத்த ஆண்டு ஒதுக்கீடான ரூ. 628.98 கோடியில், ஊரக வளர்ச்சிக்கு ரூ. 34.94 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது, 'இது

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 மார்ச் 10

5.5 சதவீதம் ஆகும். 1978-79-ல் ஆண்டு மொத்த ஒதுக்கீடு ரூ. 726.75 கோடி. அதில், ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூ. 35.65 கோடி, அதாவது, 1976-77ஐ விட, 1978-79-ல் 5.5 சதவீதத்திலிருந்து, 4.9 சதவீதமாகக் குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதே போல், ஆண்டு நிதி ஒதுக்கீட்டை எடுத்துக் கொண்டால், 1976-77-ல் மொத்த ஒதுக்கீடு ரூ. 628.98 கோடி. அதில் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூ. 140.92 கோடியாகும். அதாவது, மொத்த ஒதுக்கீட்டில் 22 சதம் ஆகும். 1978-79-ல் ஆண்டு ஒதுக்கீடு ரூ. 726.75 கோடி. அதில் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூ. 143.07 கோடி. அதாவது, மொத்த ஒதுக்கீட்டில் 19.7 சதம். எற்கனவே, 22 சதம் இருக்கிறது. இப்பொழுது 19.7 சதவீதமாகக் குறைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமப்புறங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஆண்டுக்காண்டு அதிகப்படுவதற்குப் பதிலாக இப்பொழுது குறைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊராட்சிகள், ஒன்றியங்கள், மன்றங்கள் ஆகியவற்றில் சிறப்பு அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகம் நடத்தி வருகிறோம். சிறப்பு அதிகாரிகள் சில பேர் நல்லமுறையில் செயல்படலாம், அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால், மக்களுடைய ஆட்சி நடைபெறுவதுதான், சிறப்பு அதிகாரிகள் ஆட்சியைவிட சிறப்பாக இருக்கும்.

[பிற்பகல் 1-10]

Good Government is no substitute for Self-Government.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மக்களாட்சி மக்களால் நடைபெற வேண்டும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரையிலே மாநகராட்சியிலே தனி அதிகாரியினுடைய ஆட்சி நடைபெறுகிறது. தனி அதிகாரி எவ்வளவுதான் சிறப்பாக செயல்பட்டாலும் கூட, மக்களுடைய குறைகளைத் தீர்க்க வழிவகைகள் இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்

1978 மார்ச் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அட்வைசரி கமிட்டியைப் பற்றிப் பேசினுர்கள். ஆளும் கட்சியினர் எங்களுக்கு எல்லாம் இடம் கொடுக்கவில்லை என்று கூடக் கேட்டார்கள். இன்றைக்குப் பார்க்கும்போது, நான் சொல்வது ஒரு யூனியனைக் கலைத்த பிறகு ஓராண்டிற்குள் அதை ரீ கான்ஸ்டிடுட் செய்ய வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனுல் இப்போது 1½ ஆண்டு காலம் ஆகியும் கலைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் ரிகான்ஸ்டிடுட் செய்யப்படவில்லை. நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுவும் சட்டபூர்வமாக இயங்க இடம் இல்லை.

Panchayat Union Councils should be reconstituted within one year from dissolution.

அதையும் மீறி இன்றைக்குக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நீங்கள் விரும்பினுல் ஏற்கனவே உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருந்தால், அவர் சரியாக நடைபெறவில்லை என்று இருந்தால் அவர்களுக்குப் பதிலாக வேருெருவரை மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்ருல் பஞ்சாயத்துக்கள் இன்னும் கலைக்கப்படவில்லை. பஞ்சாயத்துக்களைக் கூட்டி பொதுவாக இருப்பவர்களைத் தேர்ந்தெடுக்கலாம், அடுத்த தேர்தல் வரும் வரையில் இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்ருல் ஊர் நலனிலே பரிகாரம் காண முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னுர்கள். வாக்காளர் பட்டியல் எல்லாம் மே மாதத்திற்குள் முடிந்து விடும் என்று சொன்னுர்கள். இந்த வாக்காளர் பட்டியல் மே மாதத்திற்குள் முடிந்து விடும். ஜுன் மாதத்தில் நிச்சயமாக, கண்டிப்பாக எந்தக் காரணம் சொல்லாமல் மாநகராட்சிகளுக்கும் மற்ற பஞ்சாயத்துகளுக்கும் தேர்தல் நடக்கும் என்று தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னுல், இன்றைக்கு மேலவையிலே கூட 77-78-லே 15 இடங்கள் காலியாக இருக்கிறது. இப்போது 7 இடங்கள் காலியாக இருக்கின்றன. மார்ச் மாதத்தில்

இன்னும் 8 இடங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளில் எல்லாம் கவனம் செலுத்தி தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு டி.டி.ஓ. சிறப்பு அதிகாரியாக பணியாற்றுகிறார். பல பஞ்சாயத்து யூனியன்களைக் கவனிக்க அவர் ஒருவர் தான் இருக்கிறார். சராசரியாக 8 ஒன்றியங்களுக்கு ஒரு கோட்ட வளர்ச்சி அதிகாரி சிறப்பு அதிகாரியாகப் பணியாற்றுகிறார். ஒரு யூனியனுக்கு பொது நிதி 12 ஆயிரம் ரூபாய் வருவாய் வருகிறது. ஊராட்சிகளுக்கு செலவு போக 5 ஆயிரம் ரூபாய்கள். ஒரு தனி அதிகாரி 25 லட்சம் ரூபாய் செலவு செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அவர் 8 யூனியன்களுக்கு போய் வருவதற்கு முடியாத நிலை இருக்கிறது. அவருக்கும் கஷ்டம், பொது மக்களுக்கும் கஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து வேலைகளில் தேக்கம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நகராட்சி மன்றங்களுக்கு வருவாய் தேடுவதற்கு விசேஷ நடவடிக்கை எடுக்க வேண்டும். வரியைப் போடுவதனால் மாற்றிரம் வருவாய் வராது. வரிகளைப் போடாமல் வருமானத்தை அதிகரிக்கின்ற முறையில் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சிகளின் சார்பில் கட்டடங்களைக் கட்டி வாடகைக்கு விடலாம். கல்யாண மண்டபங்கள் கட்டுவது, இப்போப்பட்ட காரியங்களைச் செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, நகராட்சிகள் எடுக்கும் முடிவைக் கவனித்து பரிசீலிக்க வேண்டும். ஈரோடு நகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு வாரச் சந்தை காந்தி நகரில் அமைக்க வேண்டும் என்று ஒரு குறிப்பிருந்தது. ஆனால், அன்றைக்கு ஆட்சேபணை கிளப்பிய காரணத்தாலே அரசாங்கத்தின் சார்பாக ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டது.

G.O. Rt. No. 2290, *dated* 25—9—1974.

அந்த ஜி.ஓ. விலே

"As instructed by the Government, the Director of Municipal Administration inspected the shandy on 18-6-74 along the the Collector and the Chief Electrical Inspector to Government. The Chief Electrical Inspector to Government has expressed the view that if extra high tension lines were to snap, it will endanger the public and that it is also not desirable to have vast gathering in the area of the weekly shandy. The Inspecting Officers have unanimously stated that the present site of the shandy at Gandhinagar is unsuitable and should be shifted from the present place. They have therefore stated that the Municipality should drop forthwith the proposal for the acquisition and purchase of the land at Gandhi Nagar"

அது 31-3-1975 வரையில் இருக்கிறது. அந்த குத்தகை கட்டியது முடிந்த உடனே வேறு இடத்திற்கு அந்தச் சந்தையை அப்புறப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் 1974-லிலே போட்ட உத்தரவிலே

"The Government after careful consideration accept the unanimous recommendation of the Director of Municipal Administration, the Collector of Coimbatore and the Chief Electrical Inspector to Government. They accordingly advise the Erode Municipal Council to take steps to shift the weekly shandy at Gandhi Nagar to a suitable place with effect from 1st April 1975. . ."

1974-லிலே போடப்பட்ட உத்தரவு நான்கு ஆண்டுகள் ரத்து செய்யப்படவில்லை. அந்த உத்தரவு அமலில் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால், புதிதாக ஒரு செயலாளர் பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர் சென்ற மாதம் 1-ம் தேதி தான் பொறுப்பு எடுத்தார். அவருக்கு எவ்வளவோ முக்கியமான வேலைகள் இருக்கும். அதையெல்லாம் விட்டு விட்டு 11-ம் தேதி இன்ஸ்பெக்ஷன் செய்து இருப்பதாகச் சொல்கிறார்கள். பிறகு அந்த உத்தரவை ரத்து செய்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு உத்தரவு டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்டிரேஷன், கலெக்டர் ஆப் கோயம்புத்தூர்,

சீப் எலெக்டிரிகல் இன்ஸ்பெக்டர் டு கவர்ன்மென்ட் ஆகியோர் ஒருமனதாகச் சேர்ந்து அபிப்பிராயம் தெரிவித்து பின்னாலே போட்டது. அதை மாற்றுவது என்பது உகந்தது அல்ல, சரியானது அல்ல என்பதை மாத்திரம் நான் இப்போது சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த ஈரோடு சந்தையைப் பற்றிச் சொன்னார்கள். சீப் எலெக்டிரிகல் இன்ஸ்பெக்டர் ஒரு அறிக்கை தந்தார்கள் என்றும் சொன்னார்கள். இப்போது சீப் எலெக்டிரிகல் இன்ஸ்பெக்டர் பார்த்துத்தான் அந்த எக்ஸ்ட்ரா ஹைடென்ஷன் ஒயர் அந்த வழியாகப் போகிறது, அப்போது போதுமான கிளியரன்ஸ் இல்லை என்று அறிக்கை தந்தார்கள். ஆனால் இப்போது அது சரியா என்று பார்த்த பிறகு, அத்தகைய லைன் கோயம்புத்தூர் டவுனுக்குள் போகிறது என்று விவரம் சொல்லி, அதன் கீழ் சந்தை வைத்தால் ஒன்றும் ஆபத்து இல்லை என்று தற்போது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிலைமைக்குத் தகுந்தாற் போல் ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன். அன்று இருந்த நிலைமைக்கு ஏற்பத்தான் அவர் அறிக்கை தந்ததாகவும் அவர் என்னிடத்தில் சொன்னார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கவர்னர் ஆட்சியில் கூட எத்தனையோ ஆணைகள் மாற்றப்பட்டு இருந்தும், இந்த ஆணை மாற்றப்படவில்லை. அந்த நெருக்கடி காலத்திலேயே மாற்றவில்லை என்பதால் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் அறிக்கை வந்து இருக்கிறது என்பதைத்தான் சொன்னேன், வேறொன்றும் இல்லை.

1978 மார்ச் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாநகராட்சியைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குடிசைப்பகுதிகளில் போதுமான குடிநீர் வசதி, சுகாதார வசதி கிடையாது. மின்சார வசதி கிடையாது. குடிசை மாற்று வாரியத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்ட பிறகு அங்கே செய்யப்பட வேண்டிய முறையான செயல்கள், கார்ப்பரேஷனுக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும் இடையே கோ-ஆர்டினேஷன் இல்லாததால், அந்த நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் ஆளுநர் ஆட்சி காலத்தில் வீட்டு வரி உயர்த்தப்பட்டது. அந்த வரி உயர்வு 1 முதல் 4 மடங்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அந்த உயர்வால் பாதிக்கப் பட்டவர்கள் அப்பீல் போட்டு இருக்கிறார்கள். அந்த வரி உயர்வால் பாதிக்கப்பட்டவர்கள் நடுத்தர மக்கள், குடிசைவாழ் மக்கள், ஏழை மக்கள்தான். ஆகவே, அந்த அப்பீல் மனுக்களை, ஆட்சேபணைகளை உடனடியாகப் பரிசீலித்து அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பாக்கம் என்னும் இடத்தில் 600 ஏக்கர் நிலம் இருக் கிறது. இதை கார்ப்பரேஷன் ஊழியர்கள் கிளாஸ் 3, கிளாஸ் 4 ஆகியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருந்தார்கள். ஆனால் அந்த 600 ஏக்கர் நிலத்தையும் இப்போது மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிட்டிக்கு மாற்றவேண்டு மென்று நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. அப்படிப் பட்ட நடவடிக்கை கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதை கிளாஸ் 3, கிளாஸ் 4 கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு ஒரு விலையை நிர்ணயித்தாவது கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

அடுத்தபடியாக, இந்த 'வாட்டர் சப்ளை அண்டு டிரயினேஜ்' போர்டு பற்றி நம்முடைய 'ஏக் தின் கா சுல்தான்' லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி கடுமையாக விமர்சித் திருப்பார்கள்; ஆனால் நேரம் இல்லை; அதனால் சுருக்கமாகச் சொல்லி விட்டுவிட்டார்கள். சென்னை மாநகராட்சிக்கு தனியாக ஒரு 'வாட்டர் சப்ளை அண்டு டிரயினேஜ் போர்டு' அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

Madras Metropolitan Water Supply and Sewage Board.
என்று அதற்குப் பெயர்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரொம்ப சரி, விளக்கம் சொன்னதற்கு நன்றி.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, அவர்கள் 'ஏக் தின் கா சுல்தான்' என்று சொன்னார்கள்.
I am always a Sultan. There is no doubt about it.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரண்டு நவாபும் மோதிக் கொண்டால் கவாபு ஆகிவிடும் என்று நிதியமைச்சரவர்கள் சொல்கிறார்கள்.

மாநகராட்சிக்கு தனி போர்டு அமைக்க வேண்டும். அதை நிர்வகிக்க அங்கே அதிகாரிகள் இருக்கிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சியில் டெம்பரரி லேபரரஸ்—காஷ்வல் லேபரரஸ் இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சியில் உள்ள சில முக்கியமான பணிகளுக்கு அதிகாரிகளை அரசாங்கத்திலிருந்து டெபுடேஷனை அனுப்பி வைக்கிறார்கள். அதனால் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு ப்ரொமோஷன் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அதனால் அரசாங்க அதிகாரிகளை டெபுடேஷனை அனுப்பாமல் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு ப்ரொமோஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஒரு தொகுதிக்கு அதாவது 10 டிவிஷன்களுக்கு ஒரு அசிஸ்டன்ட் எஞ்சினியர் நியமிக்கப்பட்டு, அவர் கார்ப்பரேஷன் வேலைகளைக் கவனிக்கிறார். அதனால் அவருக்கு அதிகமான வேலைப் பளு ஏற்படுகிறது. அதை மாற்றி 5 டிவிஷன்களுக்கு ஒரு அசிஸ்டன்ட் எஞ்சினீயர் நியமிக்கப்பட்டு, அந்த வேலைகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சியில் துப்புரவுத் துறையைப் பொறுத்தமட்டில் 'மெகனேஸ்ட்' செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்யும்போது இருக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துப்புரவுத் துறையைப் பற்றிச் சொல்லும்போது இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சி மன்றத்திலே எரு—மென்யூர்—தயாரிக்கிறார்கள். இப்போது தயாரிக்கின்ற இடத்திற்குச் சென்று விவசாயிகள் எடுத்துச் செல்ல கஷ்டமாக இருப்பதால் நகர்ப்புறத்திற்கு அருகிலே எரு தயாரிக்க ஏற்பாடு செய்தால் விவசாயிகள் எடுத்துச் செல்ல நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், 'அர்பன் லான்ட் சீலிங்' காரணமாக கட்டட வேலைகள் தடைப்பட்டிருக்கின்றன. அதனால் பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பில்லை. ஆகவே, அர்பன் லான்ட் சீலிங்கை நீக்கி, கட்டடங்கள் கட்ட உதவி செய்து வேலையில்லாமல் கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சென்னை மாநகராட்சியோடு நகர்ப்புறப் பகுதிகள் சிலவற்றை இணைக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் அதை வரவேற்றார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால், அப்படிச் சேர்க்கப்போகிற பகுதிகளுக்கு முதலில் ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி போன்ற முக்கியமான வசதிகளை எல்லாம் செய்து முடித்த பிறகு மாநகராட்சியோடு சேர்த்துக்கொள்வதுதான் சிறப்பாக இருக்கும்.

நம்முடைய கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு எல்லாம் கார் அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. கவர்னர் ஆட்சி காலத்தில் அதைக் குறைத்து விட்டார்கள். குறைத்ததோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அலவன்ஸையும் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை ரத்து

செய்து, முன்பு கொடுத்து வந்ததைப்போல், அவர்களும் அதிகாரிகள்தான் என்ற முறையில், அவர்களுக்கும் கார் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அடுத்தபடியாக, கவர்னர் ஆட்சிக்குப் பிறகும் மாநகராட்சிப் பணிகளில் அக்கறை செலுத்தப்படவில்லை; இன்றும் கவனம் செலுத்தப்படாமல் இருக்கிறது. நான் அதிகாரிகளை குறை சொல்லவில்லை. அங்கே சிறப்பு அதிகாரியாக இருக்கக் கூடியவர் டிவிஷன்தோறும் வந்து மக்கள் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்படும் என்று சொல்லி, சில நாள் அப்படி டிவிஷன்களுக்கு வந்தார். பின்னர் அதை நிறுத்திவிட்டார், அதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. எப்படி இருந்தாலும் மாநகராட்சிப் பணிகளைச் செய்ய தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் இருக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் காரியங்கள் ஒழுங்காக நடைபெறும். ஆகவே, மேலும் காலதாமதம் செய்யாமல் மாநகராட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், நகரப் பகுதி மேம்பாடு ஆகிய இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மேல் பயனுள்ள பல கருத்துக்களை, இந்தத் துறை இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்குரிய நல்ல ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சில குறைபாடுகளையும் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவைகளைக் களைவதற்கும் உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியினை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கருத்துரை நிகழ்த்திய அண்ணன் சாதிக் அவர்கள் கிராமப்புறத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கவில்லை என்பதனை முதலிலே சொல்லி விட்டு சென்னை மாநகரத்திற்குரிய பல பிரச்சினைகளை இங்கே எடுத்து முன்வைத்திருக்கிறார்கள். மக்கள் குழு அமைக்கப்

படுவது தேவை என்கிற காரணத்தைத் கூட அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அத்தகைய குழுக்கள் எவ்வளவு அவசியம், எவ்வளவு தேவை என்பதனை கிராமப்புறத்திலேயிருந்து வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் திரு. கலியமூர்த்தி அவர்கள்கூட வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதனைப் பார்ப்பதற்கு இத்தகைய நல்ல குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். சீரான முறையிலே அமைக்கப்பட வேண்டும் என்கிற கருத்தினை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதனை நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் நான் ஒன்றை அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்கு அமைக்கப்படுகின்ற அனைத்துக் கட்சி குழுவாயினும் அல்லது மதுரை மாநகராட்சிக்கு அமைக்கப்படுகின்ற குழுவாயினும் அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு அமைக்கப்படுகிற குழுவாயினும் அவைகள் எல்லாம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் பார்க்காமல் முறையாகவே மக்களுடைய கோரிக்கைகளை, வேண்டுகோள்களை பிரதிபலிக்கின்ற வகையில் நடந்து கொண்டு நிர்வாகத்திற்குத் துணை புரிகின்ற வகையில் அவைகளுக்குத் தூண்டுகோலாக, ஊன்றுகோலாக இருக்கின்ற வகையில் அதிகாரபூர்வம் இல்லாத குழுக்களாகச் செயல்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அமைந்திருக்கிற, அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் ஏதாவது தவறு எங்காவது நடந்து இருக்குமானால் எடுத்துச் சொல்கின்ற நேரத்தில் திருத்திக் கொள்வதற்கும், முறைப்படுத்திக் கொள்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் குடிசைப் பகுதிகள் சரிவரக் கவனிக்கப்படவில்லை என்கிற வகையிலே ஒரு கருத்தினை அண்ணன் சாதிக் அவர்கள் தெரிவித்தார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 1,300 குடிசைப்

பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே அடிப்படையான சில குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அதிலே 100 குடிசைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே அடிப்படையான சில வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடப்பு நிதியாண்டில் 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியினுடைய பள்ளிகளில் ஏழைக் குழந் தைகள் படிக்கிறார்கள். அவர்களுக்கு, 60 ஆயிரம் பேருக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. சகோதரர் லத்தீப் அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல் அதிலே தவறு நடந்திடாமல் உரிய வகையிலே வழங்குவதற்குரிய ஏற்பாட்டை மாநகராட்சி நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஏழைக் குழந்தைகள் அங்கே பயிலுகிறார்கள் என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாள் ஒரு பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடிய மதிய உணவை ஏற்றிச் செல்ல வேண்டிய வாகனம் ப்ரேக் டவுன் ஆகி இடையிலே ரிப்பேர் ஆகிவிடுகிறது. பிறகு ரிப்பேர் செய்து, அந்த உணவைக் கொண்டு சென்று சேர்க்கின்ற வரையில் மாலை 5½ மணி வரை குழந்தைகள் யாரும் விட்டிற்குப் போகவில்லை காரணம், அவர்கள் சாப்பிடுவது அந்த ஒரு வேளை உணவுதான் அந்த அளவுக்கு வறுமையில் வாடும் குடிசைப் பகுதியைச் சேர்ந்த குழந்தைகள் அங்கே பயிலுகிறார்கள்.

இந்த ஆண்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதனையும் அதோடு பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடையும், புத்தகமும் வழங்குவதற்குரிய வகையிலே ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றையும் அண்ணன் சாதிக் அவர்கள் இங்கே குறிப் பிட்டுச் சொன்னார்கள். மக்கள் குறை தீர்க்கும் நாள் என்கிற வகையில் அதிகாரிகள் மக்களைச் சந்தித்து அவர்களது கோரிக்கை

1978 மார்ச் 10] [திரு. கா. காளிமுத்து]

களைப் பெற்றார்கள், ஆனால் இடையிலே ஏன் அது நிறுத்தப் பட்டது என்கிற வினாவினை எழுப்பினார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்—எல்லா வட்டங்களிலும் அதுபோல மக்களைச் சந்தித்து 2,233 கோரிக்கைகளை மக்களிட மிருந்து பெற்றார்கள். 491 கோரிக்கைகளை 41 இலட்ச ரூபாயிலே நிறைவேற்றி இருக்கிறார்கள். 356 கோரிக்கைகள் ஒரு கோடியே இருபத்தி ஏழு இலட்சம் ரூபாயில் நிறைவேற்றப்பட்டுக் கொண் டிருக்கின்றன. 768 கோரிக்கைகளை உடனடியாக நிறை வேற்றி இருக்கிறார்கள். ஆகவே கொடுத்திருக்கிற கோரிக்கைகள்—சாலைப் போக்குவரத்து வேண்டும் அல்லது விளக்கு வசதி வேண்டும் என்று கொடுக்கப்பட்ட—கோரிக்கைகள் அனைத்தையும் முழுமைபெறச் செய்து நிறைவேற்றிய பிறகுதான் மீண்டும் நிதி நிலையை இடம் கொடுக்கும் என்ற வகையில் மக்களை அணுகுவது நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, அதற்குப் பிறகு மீண்டும் அந்த திட்டம் செயல்படும் என்பதைத் தவிர நிரந்தரமாக நிறுத்தப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(பிற்பகல் 1-30)

இன்னொன்று, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தெரியும். லேசாக மழை பெய்தால்கூட குடிசைப் பகுதிகள் வெள்ளத்தில் தெப்பமாக மிதக்கக்கூடிய அளவில் நிலைமையிருக்கிறது. குடிசைப் பகுதிகளில் தண்ணீர் தங்காமல் அவைகளை வழிப்படுத்தி, வடிகால் அமைத்து கடலுக்குச் சென்று சேருகிற வகையில் ஒரு பெரிய திட்டம், ரூ. 22 கோடி செலவில் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேறுமானால் மழை நேரத்திலும் குடிசைகள் பாதிக்கப் படாத அளவிற்கு நிச்சயமாக சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல், சென்னை மாநகராட்சியில் மூவாயிரம் வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதி ஆந்திரர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இவைகளை எல்லாம் முன்னாலே சொல்வதற்குக் காரணம் இந்த அரசு தலைநகரைப் புறக்கணித்துவிடவில்லை என்பதையும் தலைநகரத்தில், குறிப்பாக பின்தங்கிய ஏழை மக்களுடைய

நலனில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு, தன்னடக்கத்தோடு முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு முடியும்வரை பேரவையின் நேரத்தை பேரவையின் அனுமதியோடு நீட்டிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் இங்கு ஒன்றாக எடுத்துக்கொள்வதற்கே அரசாங்கம் கிராமப்புறம் என்றோ நகர்ப்புறம் என்றோ பேதம் பார்த்து, பிரித்துப் பார்த்து ஓரவஞ்சனை, பாரபட்சம் காட்டவில்லை என்பதைத் தெரிவிக்கத்தான்.

அரசாங்கம் விரும்புவதெல்லாம் நகரங்கள் என்றால் வீங்கக் கூடாது, கிராமங்கள் நோஞ்சான் குழந்தைகளாக மாறிவிடக் கூடாது என்ற வகையில்தான் அரசின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. எப்படி ஒரு நோயுற்ற குழந்தையின்மேல் தாய்க்கு அதிக அக்கறையும் ஆர்வமும் ஏற்படுமோ அதே வகையில்தான் இன்னும் அடிப்படைத் தேவைகள் இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்ற கிராமப்புற மக்களை உய்விக்க வேண்டுமென்ற வகையில்தான் தமிழக முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அந்த வகையில்தான் அரசாங்க நடவடிக்கைகள் உருவாக வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று அனைத்திந்திய அளவில் கிராமப்புறங்களுக்கு வாழ்வளிக்கிற வகையில் அல்லது ஊராட்சி அமைப்புகளை வலிவுபடுத்துகிற வகையில் பல்வேறு செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு குழு உருவாகியிருக்கிறது. அந்தக் குழுவில் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (ஆரவாரம்.)

ஜனவரி திங்கள் டெல்லியில் ஒரு மாநாடு நடைபெற்றது. அதிலே நமது முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு பேசினார்கள் அவர்கள் வழங்கிய கருத்துக்களை கேட்டு மைய அரசின் கவனம்,

அனைத்து மாநில முதல் அமைச்சர்களின் கவனம் கூட நம்மை நோக்கி திரும்பியிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தக் குழு ஏறத்தாழ ஒரு ஆறு மாத காலத்திற்குள்ளாக ஒரு அறிக்கை தயாரித்து அளிக்க இருக்கிறது. அந்த அறிக்கை மூலம் இன்னும் ஊராட்சிகள் சிறப்புற்று விளங்க ஊராட்சி களின் நிலையை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசும் கைகோர்த்து நிறைவேற்றுவதற் குரிய வகையில் அந்த அறிக்கை பல பரிந்துரைகளைத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் திரு லத்தீப் அவர் களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியதைப் போல் இதிலே இருக்கிற அலுவலர்கள் தொண்டு உணர்ச்சியோடு, நம் உழைப்பிற்கு ஊதியம் கிடைக்கிறது என்ற வகையில் கணக்குப் பார்க்காமல், கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்து காலண்டரைப் பார்த்து சம்பளம் வாங்குவோம் என்ற உணர் வில்லாமல் மெய்யாகவே மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டு மென்ற ஆர்வத்துடன் செயல்பட்டால்தான் இந்தத் துறை சிறப்பாக அமைய முடியும்.

அந்தவகையில் ஊர்ப்புற வளர்ச்சிக்கு அடித்தளமாக, வேராக இருக்கிற ஊர் நல அலுவலர்களை உற்சாகப்படுத்துகிற வகையில் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. முதலில் அவர்களுக்கு இருந்த கிராம சேவக் என்ற பெயரை மாற்றி ஊர் நல அலுவலர் என்ற பெயர்மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. (ஆரவாரம்)

அதுமட்டுமல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பாக சில கோரிக்கைகளைத் தெரிவித்தார்கள். வேளாண்மை விரிவாக்க பயிற்சி பெற்ற ஊர் நல அலுவலர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர்களுக்கு ரொக்க மானியமாக ரூ. 100 கொடுப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பதிவறை எழுத்தர்கள் கோரிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு உள்ள சலுகைகள் உள்ளாட்சித்துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு

உடனடியாக கொடுக்கத்தக்க வகையில் சீரிய ஏற்பாட்டினை அரசாங்கம் செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு இந்த ஊராட்சி அமைப்புக்கு இன்னும் பல்வேறு உதவிகளைச் செய்கிற வகையில் சில திட்டங்களை வகுத்துள்ளது. வருமான வரியில் ஒரு விலக்கு அளித்து, கிராமங்களில் தொண்டு செய்யக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கு, கிராமப்புற வளர்ச்சிக்காக உதவி செய்கிற தனியார் நிறுவனங்களுக்கு வருமான வரியில் விலக்கு அளிக்கிற வகையில் திட்டமிட்டிருக்கிறது.

அதைப்போலவே 'பாடி' என்கிற அமைப்பு கிராமப்புற மேம்பாட்டுக்காக நல்ல முறையில் அமைக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே சத்துணவுத் திட்டம் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கிராம முழு வளர்ச்சித் திட்டம் நடைபெற்று வருகிறது. இதெல்லாம் மைய அரசின் துணையோடு நடைபெற்று வருகிறது. இதிலிருந்து மைய அரசும் மாநில அரசும் ஒரே நோக்கும் போக்கும் கொண்டிருக்கின்ற நல்ல சூழ்நிலை இருந்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே ஏற்கனவே கேள்வி நேரத்தில் கேட்டிருக்கிறார்கள், பெரிய ஊராட்சி மன்றங்கள், பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளை நிர்வாக அலுவல்கள் வசதியின் அடிப்படையில் இவைகளைப் பிரிக்கின்ற செயற்குறிப்பு ஒன்று அரசிடம் இருக்கிறது. இவைகள் எல்லாம் ஊராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னால் 163 பெரிய ஊராட்சிகள் பிரிப்பதற்கும், 35 பேரூராட்சிகளாக ஆக்குவதற்கும், 29 ஊராட்சிகளுக்கு எல்லைக்கு ஏற்றவாறு பெயர்களை மாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அடிக்கடி இங்கே உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து ஒன்று, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத நேரத்தில் அங்கு செயல்படும் வகையில் தங்களுக்கு வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். போன சட்டமன்றக கூட்டத்திலேயே இதற்காக ஊராட்சிமன்றத்தின் ஷீப்பை மாற்றம்

ஒரு முறை தரவேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். இப்போது மாதம் ஒரு முறை என்றிருப்பது சரியல்ல. . . மாதம் இரு முறையாவது வேண்டும் என்று அண்ணன் சிவசாமி அவர்களும் திரு. கரியமாணிக்க அம்பலம் அவர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், தேர்தல் முடிந்து ஊராட்சி ஒன்றியத்திற்குப் பெருந்தலைவர் வருவது வரையிலும் மாதம் இரண்டு முறை ஜீப்பைக் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் அதன் தலைவர் இல்லாதபோது, அதாவது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது வரையிலும் ஜீப் வழங்க உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் கேட்க விரும்புவது, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகும் இந்த வசதி எங்களுக்கு இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. காரணம் அங்கே நடைபெறுகின்ற வேலைகளில் எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. வேலைகள் எல்லாம் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வதில்—அங்குள்ள மக்களின் தொண்டர்கள் என்ற முறையில் அந்த சலுகை வேண்டும் என்று கேட்கிறோம். ஆகவே தொடர்ந்து இந்த வசதி இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆண்டிப்பட்டி யூனியனை எடுத்துக் கொண்டால் தொடர்ந்து அங்கு இந்த வசதியைக் கொடுக்கவேண்டும் என்பதுதான் நிலைமை. இதையும் அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிதி வசதியில்லாத இடங்களில் கிராமப் பொதுக் கிணறுகள் அமைப்பதற்காக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 40 ஆயிரம் ரூபாய் அளிப்பதற்கு அரசு கருதியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன், அதாவது சட்டமன்ற, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நகராட்சிக்குச் சொந்தமான பயணிகள் விடுதியில்

தங்குவதற்கு முன் உரிமை சலுகை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்தப்பற்றிப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும், மக்களுக்காகப் பணியாற்றுகின்றவர்களுக்கு வேண்டிய வசதிகளை இதுபோன்ற சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதில் அரசு அக்கறை செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சலுகை தருவது ஒருபக்கம் இருந்தாலும், ரிசர்வ் செய்திருந்தால், நாங்கள் போன பின், அங்கு அஸிஸ்டன்ட் என்ஜினியர் வந்திருக்கிறார், அந்த அதிகாரி வந்திருக்கிறார், இந்த அதிகாரி வந்திருக்கிறார் என்று சொல்லி எங்கள் ரிசர்வேஷனை கேன்ஸல் செய்யாமல் இருந்தால் போதும். ஆகவே, ரிசர்வேஷன் செய்த பின்னால் யார் வந்தாலும் கேன்ஸல் பண்ணக் கூடாது என்று சொல்லிவிட்டாலே அதுவே பெரிய சலுகையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதுபோன்ற தொந்தரவுகளை அப்போது நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த போது அனுபவித்திருக்கிறோம். அப்போதெல்லாம் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இதைக் கவனிக்க முன் வரவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: பயணிகள் விடுதிகள் ரிசர்வ் செய்வதில், யார் யாருக்கு முன்உரிமை கொடுக்கவேண்டும் என்று ஒரு லிஸ்ட் அரசாங்கத்தின் சார்பில் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் எல்லா விதமான அதிகாரிகளையும் போட்டு விட்டு கடைசியில் சட்ட மன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். இதை மாற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு முதல்வரிசையில் போட்டு லிஸ்ட் வெளியிடுவார்களேயானால் நன்றாக இருக்கும். இதை அரசு கவனிக்க வேண்டும்.

அதோடு, கிராம சேவக் என்ற பெயருக்கு நல்ல தமிழில் "ஊர்நல அலுவலர்" என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள், வரவேற்கிறேன், அதற்காக என் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று நல்ல தமிழ்ச் சொல்லில் 'பால சேவிகா' என்பதையும் மாற்றினால் நன்றாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 10]

திரு. மு. அரங்கநாதன் : சென்னை மாநகராட்சியைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். முன்னால் சுகாதாரத் துறையிடமிருந்து நற்பகல் உணவுத் திட்டம் 73-ம் ஆண்டுக்குப் பிறகு கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் வந்த பின்னால் பள்ளி ஆசிரியர்கள் பதிவேட்டில் வருகை தந்ததாகப் பதிவு செய்துகொண்டு, அவர்களை சமையல் வேலையை கவனித்துக்கொள்ளவும், சூப்பர்வைசராகப் பணியாற்றவும் ஆசிரியர்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆசிரிய பெருமக்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.40)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துக்களை மாநகராட்சி மன்றத்திலே பேச வேண்டும். எனவேதான், அனைத்துக் கட்சிகளின் குழுவை அரசு அமைக்க இருக்கின்றது. ஆகவே, அங்கே அவைகளைச் சொல்லி, இந்தக் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வகையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு காலத்திற்குத் தேர்தலை தள்ளிக் கொண்டு போகிறீர்கள், தேர்தலை சீக்கிரம் வைக்க வேண்டுமென்று சகோதரர் சுப்பு அவர்கள் மிகத் தீவிரமாக சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதாவது நொண்டிச் சாக்கைச் சொல்லி தள்ளிப் போடுகின்ற வகையிலே நிச்சயமாக இந்த அரசு முயற்சிக்கவில்லை.

வாக்காளர் பட்டியலைப் புதிதாக திருத்தி அமைக்கின்ற முறையிலே, அதற்கான எற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது. அதிலும், வாக்காளர் பட்டியலிலே பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆளுநர் அவர்கள் உரையிலேயே ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக செயற் குழு கூட்டத்திலேகூட இத்தகைய ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, சரியாக முறையாக வாக்காளர் பட்டியல் அமைக்கப்பட வேண்டுமென்ற வகையிலே

தான் விரைவிலே புதிதாக, அதுவும் 1—1—1978 அன்று 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டுமென்கிற வகையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன், அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிற வேலை முழுமை அடைந்தவுடன், தேர்தல் தேதிகளை இந்த அரசு அறிவிக்கும் என்பதிலேயே அரசு மிகுந்த ஆவலுடனும், அக்கறையுடனும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வங்கியின் உதவியுடன் சேலம், கடலூர், மாயூரம், தஞ்சாவூர், உதகை போன்ற இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 17.7 கோடி ரூபாய் செலவிலே உருவாக்குவதற்கான திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மதுரை, கோவை போன்ற இடங்களில் போக்குவரத்தைச் சரிப்படுத்துவதற்காக பல கோடி ரூபாயில் ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு அறிவிப்பை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஊரக வளர்ச்சித் துறையிலே பல்வேறு வகையான பணியாளர்களுக்குள்ள பணி விதிகளில் நடைமுறைச் சிக்கல் காரணமாக, இதை உணர்ந்து அந்தத் துறையிலுள்ள அலுவலர்களை 5, 6 வகையாகப் பிரித்து, ஒரே பணி விதியின் கீழ் கொண்டு வர இந்த அரசு ஆராய்ந்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களுக்கு மீண்டும் நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, அவர்கள் சுட்டிக்காட்டிய தவறுகளையும், குறைபாடுகளையும், புகார்களையும், அவைகள் எதுவாக இருப்பினும், அவைகளைக் கட்டாயம், நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை மனதார திருப்பிப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

1978 மார்ச் 10]

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தங்கள் மூலமாக ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய பல்வேறு தொகுதிகளிலே உள்ள பல்வேறு பிரச்னைகளை அதனுடைய கமிஷனர் அவர்கள் விரைவாகவும், நல்லமுறையிலும் கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள்.

நான் கமிஷனர் அவர்களை ஏறத்தாழ 6 மாதங்களுக்கு முன்னாலே அழைத்து, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே உள்ள பல பகுதிகளுக்கு என்னுடன் அழைத்துச் சென்று, ஒவ்வொரு இடத்திலும் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன, நிலைமைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டினேன். அவர்களும் குறித்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள்மேல் குறைசொல்ல வேண்டுமென்ற முறையிலே இதை நான் சொல்லவில்லை. இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. நாட்கள் ஆகிவிட்டது. அமைச்சர் காளிமுத்து அவர்கள் சொல்வார்கள். 'தீப்ப*றி எரிகிறபோதுதான், கிணறு வெட்டக் கிளம்புவார்கள். அதிலே பிரயோஜனம் இல்லை ஆகவே உடனே நாம் தீயை அணைக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதைப்போல் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்கள் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தீப்பற்றி எரிகிறபோது தான், கிணறு வெட்டக் கிளம்புவார்கள், அதிலே பிரயோஜனம் இல்லை என்று சகோதரர் ரகுமான்கான் அவர்கள் சொல்கின்ற அளவுக்குப் பிரச்னை இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வளவு அவசரமாக உள்ள பிரச்னையை அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். எவ்வளவோ பயன் அடைந்திருக்கலாம். ஆனால் இவ்வளவு காலமாக ஏன் கொண்டுவராமல், காலதாமதம் செய்தார்கள் என்பதுதான் எனக்குப் பெருத்த வேதனையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 28-க்கு திருவாளர்கள் பி. எஸ். திருவேங்கடம், நா. சுந்தரராஜ், மு. ஆறுமுகம், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,65,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 34-க்கு—திருவாளர்கள் சு. பாலன் பெ. உத்திராபதி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. வி. சௌந்திரராஜன், ஆர். கிருஷ்ணன், எம். ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ள பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,90,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

1978 மார்ச் 10]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(6) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*114. கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (தமிழ்).

*115. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு, 1978-79 (தமிழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* 8—3—1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றுள்ளன.

இணைப்பு -I

[911-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 494-க்கான விடையைக் காண்க.]

1977-78-ம் கல்வி ஆண்டில் இன்ஜினியரிங் கல்லூரி, பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக்குகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை விவரங்கள்—

(1) **இன்ஜினியரிங் கல்லூரி :—**

மாணவர்கள் புகுமுக (P.U.C.) தேர்வில் அல்லது அதற்குச் சமமானத் தேர்வில் படித்த பாடங்களில், கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதீகம், இரசாயனம் இவ்விரு பாடங்களுக்கும் சேர்த்து 100 மார்க்கும் ஆக மேற்படிச் சொன்ன 200 மார்க்குகளும் அடித்தள பாட மார்க்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மற்றும் நேர்முகத் தேர்விற்கு 75 மார்க்கும், கொடுக்கப்பட்டு, மொத்தம் 275 மார்க்குக்கு, மாணவர்கள் வாங்கிய மார்க்குகளை கணிப்பொறி (computer) மூலம் வரிசைப் படுத்தி மார்க் தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பிற்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 31 சதவீதம், 18 சதவீதமும் முறையே ஒதுக்கப்பட்டுள்ளன.

(2) **பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக்—**

உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்கள் இறுதியாண்டுத் தேர்வில்:

(1) கோர் சயன்ஸில் குறைந்தது 40 சதவீதம்.

(2) அல்ஜீப்ரா மற்றும் ஜியாமெட்டரி, பௌதீகம், என்ஜினியரிங் போன்ற விருப்பப்பாடங்களில் ஏதேனும் ஒன்றில் குறைந்தது 40 சதவீதமும், மேற்கண்ட இரண்டிலும் சேர்ந்து மொத்தம் 100 மதிப்பெண்களுக்குக் குறையாமலும் பெற்றிருக்க வேண்டும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 10

தொழில் நுட்பப் பள்ளியில் படித்த மாணவர்கள் :—

(1) கணிதத்தில் 40 சதவீதமும்,

(2) பௌதீகம், தொழில் நுட்பப் பாடங்களில் 40 சதவீதமும், மேலும், இவ்விரு தொகுதிகளின் மதிப்பெண்கள் கூடுதல் 100-க்குக் குறையாமல் இருக்கவேண்டும். மேற்கண்ட தேர்வுகளில், குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் மாணவ, மாணவியர் வாங்கியுள்ள மார்க்கின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் முறையே 31 சதவீதமும், 18 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

[920-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 498க்கான விடையைக் காண்க]

கைத்தறி நெசவுத் தொழில், கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில் ஆகியவற்றிலுள்ள வேலைக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் அரசு நிர்ணயித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியங்கள் வருமாறு:—

1. கைத்தறி நெசவுத் தொழில்:
செயலுக்கு வந்த நாள்: 31—7—1974.

ரகத்தின் பெயர். (1)	அளவு அங்குலத்தில் (2)	அளவு அளவு (சென்டி மீட்டரில்) (1''..2.54 செ. மீ.) (3)	சாதாரண ரகங்களுக்கு ஊதிய வீதங்கள். (4) (ஜதை ஒன்றுக்கு.) ரூ.	பை.	சிறப்பு ரகங்களுக்கு ஊதிய வீதங்கள். (5) (ஜதை ஒன்றுக்கு.) ரூ.	பை.
சாதாரண ரகம்	48×90	122×229	3	12	3	50
	54×90	137×229	3	37	3	75
அச்சுத் தறிகள்	60×90	152×229	3	62	4	00
18 முதல் 20 வரை	70×100	178×254	4	62	5	00
	90×108	229×274	7	62	8	00
நாடாத்தறி 1—6						
மீதித்தறி 2						
2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)						
2×20 (5 செ.மீ.×51 செ.மீ.)						

ரகத்தின் பெயர்.	அளவு அங்குலத்தில்	அளவு சென்டி மீட்டரில். (1''..12.54 செ. மீ.)	சாதாரண ரகங்களுக்கு ஊதிய வீதங்கள்.		சிறப்பு ரகங்களுக்கு ஊதிய வீதங்கள்.	
(1)	(2)	(3)	(4) (ஜதை ஒன்றுக்கு)		(5) (ஜதை ஒன்றுக்கு)	
			ரூ.	பை.	ரூ.	பை.
இரண்டு நாடா ரகங்கள்.—						
அச்சுத்தறி— 16—20	48×90	122×229	4	25	4	75
நாடாத்தறி— 1—6	54×90	137×229	4	50	5	00
மிதித்தறி	60×90	152×229	4	75	5	25
8—12	70×100	178×254	5	75	6	25
	90×108	229×274	8	75	9	25
2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)						
2×20 (5 செ.மீ.×51செ.மீ.)						
கட்டம் போட்ட ரகங்கள் ஜதை ஒன்றுக்கு:						
அச்சுத்தறிகள் 18×20 ..	48×90	122×229 செ.மீ.	6	50	..	
நாடாத்தறி 2—4 ..	54×90	137×229 செ.மீ.	6	75	..	
மிதித்தறி 8—12 ..	60×90	152×229 செ.மீ.	7	00	..	
	70×100	178×254 செ.மீ.	8	00	..	
	90×108	229×274 செ.மீ.	11	00	..	
2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)						
2×20 (5 செ.மீ.×51 செ.மீ.)						

அச்சுத்தறிகள், நாடாத்தறி, மிதித்தறி ஆகியவற்றின் அளவு மேலே குறிப்பிட்டதைக் காட்டிலும் அதிகமாயின் அதிகமாகும் அச்சுத்தறிகள், நாடாத்தறி, மிதித்தறிக்குக் கீழ்க்காணும் வீதங்கள் வழங்கப்படும் :—

அச்சுத்தறி ஒரு ஜதைக்கு	10 காசு.
நாடாத்தறி ஒவ்வொன்றுக்கும்	10 காசு.
மிதித்தறி ஒவ்வொன்றுக்கும்	10 காசு.

	ரூ.	பை.
செயற்கைப் பட்டு-பருத்தி நூல் கலந்தது :		
1 கிலோ கிராம் செயற்கைப் பட்டு (பருத்தி நூல் கலந்தது)—		
55 அல்லது 60 பாவு (டினையர்)	31	00
ஊடை பருத்தி நூல் 60—180 சிட்டம்	52	60
செயற்கைப் பட்டு கலப்பு-1 கிலோகிராம் :		
செயற்கைப் பட்டு பாவில் செல்லும் பருத்தி ஊடை—		
நூல் 75 (டினையர்) பாவு	25	00
100 (டினையர்) பாவு	17	00

பல்வேறு நம்பர் பருத்தி நூலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வீதங்கள், பயன்படுத்தப்படுகிற நம்பர் நூலுக்குப் பொருந்துவதாகும். எடுத்துக்காட்டாக ஊடையில் (Weft) 60 நம்பர் முதல் 79 நம்பர் நூல் வரை பயன்படுத்தப்படுமாயின் 10 சிட்டங்களுக்கு (840 கெஜம்) ரூ. 1-20 வழங்கப் பட வேண்டும்.

				ரூ.	பை.
செயற்கைப் பட்டு	I	75×100 (d)	1 கிலோகிராம்	11	60
செயற்கைப்பட்டு (டிசைன்கள் இல்லாத ரகம்)		100×75 (d)			
செயற்கைப்பட்டு (டிசைன்கள் இல்லாத ரகம்)	II	75×120 (d)	1 கிலோ கிராம்	9	75
		120×75 (d)			
	III	100×120 (d)	1 கிலோ கிராம்	8	25
		120×100 (d)			

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இரண்டு நாடாவுடன் கூடிய கட்டம் போட்ட ரகம் :
சப்போட்டா (Sappotta)

அச்சுத்தறிகள் 18—20	..	48×90	122×229 செ.மீ.	4	55	..
நாடாத்தறி 1—3	..	54×90	137×229 செ.மீ.	4	80	..
மிதித்தறி 6—12	..	60×90	152×229 செ.மீ.	5	05	..
		70×100	178×274 செ.மீ.	6	05	..
		90×108	229×274 செ.மீ.	9	05	..

2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)
2×20 (5 செ.மீ.×51 செ.மீ.)

பீஸ் ரகங்கள் :

மேட்டி. (1)	அகலம். (2)		கட்டம் போட்ட ரகம். (3)		(4)	
	அங்குலம்.	செ.மீ.	ரூ.	பை.	ரூ.	பை.
அச்சுத்தறிகள் 16—20	36	91	0	48	0	50
	48	122	0	55	0	57
	54	137	0	65	0	58
	60	152	0	75	0	78

2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)
2×20 (5 செ.×51 செ.மீ.)
கேஸ்மெண்ட் :

அச்சுத்தறிகள் 16— 20 நாடாத்தறி 2 மிதித்தறி 8	50	127	1	00	..

2×17 (5 செ.மீ.×43 செ.மீ.)
2×20 (5 செ.மீ.×51 செ.மீ.)
..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

A 293—22

II டிசைன்கள் இல்லாத நூல் துணி ரகம்.
செயலுக்கு வந்த நாள் 3—12—1975.

ரகத்தின் பெயர். (1)	நூல் நம்பர். (2)	840 கெஜம் (768.096 மீட்டர்) கொண்ட 10 சிட்டங்கள் சேர்ந்த முடி (Knot) ஒன்றுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்கள். (3) ரூ.	பை.
ஆயத்தப்பணி ஊதியம் நீங்கலாக, டிசைன்களோ அல்லது மாதிரியோ இல்லாத நூல் ரகப் புடவைகள், வேஷ்டிகள், சட்டைத் துணி, லுங்கி முதலியவை.	20 நம்பர்-39 நம்பர் வரை ..	1	00
	40 நம்பர்-59 நம்பர் வரை ..	1	10
	60 நம்பர்-79 நம்பர் வரை ..	1	20
	80 நம்பர்-99 நம்பர் வரை ..	1	30
	100 நம்பருக்கு மேல் ..	1	50

III. கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில் :
செயலுக்கு வந்த நாள் : 9—3—1974.
$5\frac{1}{2}$ மீட்டர் (6 கெஜம்) பட்டுப் புடவை நெய்தல் ;

பணியின் வகை. (1)	குறைந்த அளவு ஊதிய வீதங்கள். சாதாரணப் பட்டு நூல். (2) ரூ.	காசு.	முறுக்கிய பட்டு நூல். (3) ரூ.	காசு.
1 ஒரு பக்க இணைக்கப்பட்ட கரை ..	29	82	40	63
2 இரு பக்கம் இணைக்கப்பட்ட கரை ..	33	46	49	83
3 கைத்தறி	20	32	34	12
4 நாடாத் தறி (Doff)	16	84	16	67
5 பாவாடைத் துணி	..		36	42

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏனைய பல்வகைப் பணி.

			ரூ.	காசு.
1	30 'குளிகைகள்' வரையில் இரண்டு பக்கம் டிசைன் போட்டது, $5\frac{1}{2}$ மீட்டர்	..	3	13
2	ஒவ்வொரு முறையும் கூடுதலாகும் 10 'குளிகைகளுக்கு' ..	..	0	68
3	30 'குளிகை' வரை ஒரு பக்க டிசைன், $5\frac{1}{2}$ மீட்டர் ..	..	1	95
4	கூடுதலாகும் ஒவ்வொரு 10 குளிகைக்கும் ..	..	0	56
5	பெட்னி ஒன்றுக்கு ..	..	5	00
6	'பொரை' வரைதல்—ஒவ்வொன்றுக்கும்	..	0	94
7	Self 100 'குளிகைகள்'	..	3	75
8	$\frac{1}{2}$ 'குளிகை' ரோசெல்ப், 100 'குளிகைகள்'	..	5	00
9	புள்ளிகளுடன் கூடிய புடவைத் தலைப்பு 100 'குளிகைகள்'	..	3	44
10	புடவைத் தலைப்பு 8 மடங்கு—பனாரஸ் டிசைன் 100-க்கு	..	1	25
11	புடவையின் உடல் பகுதி 'பேட்டு' 10 'குளிகைள்' 5[illegible] மீட்டர்	..	0	43
12	டிஷ்யூ $5\frac{3}{4}$ மீட்டர்	..	7	80
13	மெல்லிய 'ஜரிகை' வேலை $5\frac{1}{2}$ மீட்டர்	..	7	80
14	புடவை உடல் பாகம் செல்ப் 100 'குளிகைகள்'	..	3	44
15	புடவை உடல் பாகத்தில் மல்லி மொட்டு ஜரிகை டிசைன் $\frac{1}{2}$ மீட்டர்	..	0	46
16	மேற்சொன்ன டிசைன் பட்டுத் துணியில் $\frac{1}{2}$ மீட்டர்	..	0	38
17	புள்ளிகளுடன் கூடிய புடவையின் உடல் பாகம் பட்டில் $\frac{1}{2}$ மீட்டருக்கு 20' 'குளிகைகள்,	..	1	25
18	பட்டுத் துணியில் கூடுதலாகும் ஒவ்வொரு 10 குளிகைக்கும்	..	0	24
19	புள்ளிகளுடன் கூடிய புடவை உடல்பாகம், $\frac{7}{8}$ மீட்டருக்கு 20 குளிகைகள் பட்டுத் துணியில் ஜரிகை வேலை.	..	33 1	
20	கூடுதலாகும் ஒவ்வொரு 10 குளிகைகளுக்கும் ஜரிகை	..	0	31

ஏனைய பல்வகை பணி—தொடர்ச்சி,

		ரூ,	காசு,
21	சிறு புள்ளிகள் (சுங்கடி புட்டா) ½ மீட்டருக்கு ..	1	88
22	கரையில் கோடுடன் கூடிய புடவைத் தலைப்பு (முத்துசீர்) 5½ மீட்டர் ..	0	94
23	கரை கோடுகள் (முத்துசீர்) செல்ப் 5½ மீட்டர் ..	0	63
24	வெவவேறு நிற நூல்கள் பயன்படுத்தப்பட்டால் ஒவ்வொரு நிற நூலுக்கும் 5½ மீட்டருக்கு, ..	1	66

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 10

இணைப்பு III

[924-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட எண் 502-க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் பணி புரியும் திரு. வி. சொக்கலிங்கம் என்ற நாயகம் திரும்பிய அகதி ஒருவர், 2-8-1977 ஆம் தேதியிட்ட மனு ஒன்றினை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து உள்ளார். இந்த மனுவில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் உள்ளன.

(1) பாரமரிப்புப்படி, குடிசை போட படி வேண்டியும், இலவச வைத்திய வசதி கோரியும்;

(2) அரிசி, கோதுமைக்குப் பங்கீட்டுப் படி;

(3) பயிற்சி காலத்திற்கு ஊதியம்;

(4) காலமுறைப்படி ஊதிய உயர்வு;

(5) வேலையில் உறுதி, நிரந்தர ஊதியம், சீருடை வழங்கல்;

(6) தேசிய விடுமுறை நாட்களில் ஊதியம்.

(7) ஊதியத்துடன் விடுமுறை;

(8) சம்பள சீட்டுக் கொடுத்தல்;

(9) வேலையாட்களின் குழந்தைகளுக்கு இலவச புத்தகம், சீருடை வழங்குதல்;

(10) வீடு கட்ட இடமும், கடன் வசதியும் ஒதுக்குதல்;

மேலே கண்ட கோரிக்கைகளில் கோரிக்கை எண் 3, 4, 6, 8 ஆகியவைகளில் கண்ட கோரிக்கைகளை ஆலை நிர்வாகத்தினர் ஏற்கனவே நிறைவேற்றி உள்ளனர். திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு என ஒதுக்கப்பட்ட அகதிகள் இந்த ஆலையில் 1978 ஆம் ஆண்டில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

1978 மார்ச் 10]

மேலே கோரிக்கை எண் 1, 2-ல் உள்ள வசதிகளை அகதிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக மறுவாழ்க்கை வசதி வழங்கல் துறையினர் நேரடியாக நிறைவேற்றி வருகின்றனர்.

கோரிக்கை எண் 5-ல் அடங்கி உள்ள அகதிகளை நிரந்தரமாக்குவதானது ஆலையினை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் ஏற்படும் காலி இடங்களை நிரப்பும்போது அகதிகளின் தகுதி, ஊதியம் ஆகியவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். நிதி பற்றாக்குறையின் காரணமாக ஆலை எல்லா அகதிகளுக்கும் சீருடை வழங்க இயலாத நிலையில் உள்ளது. இருந்த போதிலும் 2-10-1978 ஆம் தேதிக்கு முன்பு இவர்கள் எல்லோருக்கும் சீருடை வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஊதியத்துடன் விடுமுறை கொடுப்பது சம்பந்தப்பட்ட கோரிக்கை எண். 7 ஆனது தொழிற் சட்டத்தின் வருகின்றது. இத்தகைய விடுமுறைக்கு உரிய இலங்கை அகதிகளுக்கு இந்த விடுமுறை கொடுக்கப்படும். ஆலையின் தற்போதைய நிதி நெருக்கடியின் காரணமாக 9 ஆவது கோரிக்கையான வேலையாட்களின் குழந்தைகளுக்கு இலவச புத்தகம், சீருடை வழங்குதல் ஆகிய சலுகைகளைக் கொடுக்க இயலவில்லை. கோரிக்கை எண். 10 சம்பந்தப்பட்ட மட்டில் அகதிகளுக்கு தற்போது வீட்டடி இடம் கொடுக்கப்பட்டு உள்ளது. மறு வாழ்க்கை வசதி வழங்கல் துறையினர் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் மூலமாக இந்த அகதிகளுக்கு வீடு கட்ட கடன் வழங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மேற்கண்ட கோரிக்கைகள் சம்மந்தமாக 20-8-1977 ஆம தேதியன்று தஞ்சாவூரில் அகதிகள் சங்கத்தினருடன் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.

இணைப்பு IV

934-935 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி.

முன்னுரை

1952 ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பெற்றது. ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்துவதும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்து அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர வேண்டுமென்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தெளிவாகக் கூற வேண்டுமானால் மக்களின் முயற்சிகளை அரசின் முயற்சிகளுடன் இணைத்துச் செயலாற்றி மக்களின் பொருளாதார சமுதாய நிலைகளை மேம்படச் செய்து அவர்களை நாட்டின் வாழ்வுடன் இணைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்று செயல்படும் திட்டங்கள்தாம் சமுதாய நலத் திட்டமாகும். மற்றும் முன்னேற வேண்டுமென்று முனைப்புச் சக்தியானது மக்களிடமிருந்தே எழ வேண்டும். ஊர்ப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது. எனவே, மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்கள் திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றச் செய்வதே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்தவுடன், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு மாற்றத்தை அடைந்தது. ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரமும், ஊராட்சி ஒன்றியமாக அமைந்தது.

ஊராட்சி ஒன்றியங்கள் மக்களுக்கான நல்வாழ்வுப் பணிகளுடன் வட்டார அளவில் நிறைவேற்றப்படக்கூடிய வளர்ச்சிப் பணித் திட்டங்களையும் அரசின் பிரதிநிதிகளாக பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றன. இந்தக் கட்டத்தில் ஒரு முக்கியமான மாற்றம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. கிராம வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தையும் ஒன்று சேர்த்து ஊராட்சி வளர்ச்சி திட்டவாரியான நிதிநிலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்யப்பட்டது. வளர்ச்சித் திட்டங்களை ஒருமித்த முறையில் நிறைவேற்றுவதற்கு, இம்முறை ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பைத் தந்ததுடன், ஊர்ப்புற மக்கள் உற்சாகத்துடன் திட்ட வேலைகளுக்கு தங்கள் பங்கினை அளிக்கும் மனப்பாங்கையும் அவர்களிடையே வளர்க்க உதவியுள்ளது. சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இனங்களின்கீழ் ஊராட்சி ஒன்றி

1978 மார்ச் 10]

யங்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய்கள், மானியங்கள் மற்றும் இதர இனங்களின் வாயிலாக அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய எல்லா நிதி ஆதாரங்களையும் ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான நிதி நிலைத் திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்படும், உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை எந்த அளவு பெருகுகிறதோ அந்த அளவு ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த நிதி நிலையும் அதிகரிக்கும்,

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1978—79-ல் செய்யப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு சுமார், ரூ. 143,07 கோடியாக இருக்கும். சட்டப்பேரவையின் முன்னுள்ள கோரிக்கையான ரூ. 35.65 கோடி என்பது, ரூ. 143.07 கோடியின் ஒரு பகுதியேயாகும். இக்குறிப்புரையுடன், சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி வளர்ச்சிக் குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்துக் காட்டுகிறது. 1977—78-ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் ஆய்வும் 1978—79 ஆம் ஆண்டின் திட்டங்களும் இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

2. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

(அ) அமைப்பு.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் அடங்கியுள்ள ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப் பகுதியில் ஊராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்ட பின்னர், தனியாக ஊராட்சி ஒன்றியம் ஒன்று இப்பகுதியிலும் அமைக்கப்படும்.

(ஆ) நிர்வாக அமைப்பின் வளர்ச்சி.

நிர்வாக அமைப்பின் விதமும் அதன் முறையும் தொடர்ந்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை இதுவரை செய்யப்பட்டுள்ள மாற்றங்களையும் இனி செய்ய இருக்கின்ற மாற்றங்களையும் காட்டுகின்றன:—

(i) அரசின் உதவிகள் அளிக்கப்படுவதற்காக, வட்டாரங்கள் தலைவிகித நில வருவாயின் அடிப்படையில் ஆறு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரசின் உதவிகள் அளிக்கப்படுவதில் ஒரு ஒழுங்கு முறையை உருவாக்கி, குறைந்த வருவாயுள்ள வட்டாரங்களுக்கு உதவவும், அதிக வருவாய் வரத்தக்க நிலையிலுள்ள வட்டாரங்களை மென்மேலும் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஊக்குவிக்கவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) வட்டாரங்களின் வருவாயைப் பெருக்குவதற்காக உள்ளூர் செஸ் மேல் வரியில் ஒரு குறிப்பிட்ட குறைந்த தொகையை நிர்ணயிக்கவும், தற்பொழுதுள்ள உச்ச வரம்பை, அதாவது ரூபாய் 2·50-ஐ மேலும் அதிகரிக்கவும் அரசு ஆலோசித்து வருகிறது.

(iii) நிர்வாக வசதி, மக்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகள் பொதுத் தேர்தல்களுக்கு முன்பே, மிகப்பெரிய வட்டாரங்களைப் பிரிக்கவும்—அவற்றின் எல்லைகளை மாற்றி அமைக்கவும்— திட்டமிடப்பட்டுள்ளது.

(iv) ஊராட்சிகளின் கடைசி பொதுத்தேர்தல் 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் முடிவுற்ற போதிலும் தவிர்க்க இயலாத சில காரணங்களினால் அனைத்து ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக்காலம் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டது, 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி முதல் ஊராட்சி ஒன்றியங்களை நிர்வகிப்பதற்கு ''சிறப்பு அலுவலர்கள்'' நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பதவிக்காலமும் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டது. அனைத்து ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் கடைசித் தடவையாக 1970 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இப்போது ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுத்து புதிதாக வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து ஊராட்சிகளுக்கும் புதிய வாக்காளர் பட்டியல்கள் 1978 ஆம் ஆண்டு மே மாத இறுதிக்குள் தயாராகிவிடும். வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கும் பணி நிறைவுற்றதும், ஊராட்சித் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு தலைவர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(இ) பயிற்சித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி இயக்கம் நடத்தும் கீழ்க்காணும் பயிற்சி நிலையங்களில் வெவ்வேறு வளர்ச்சித்துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களும், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களும் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம், பவானிசாகர்

(2) ஊரக வளர்ச்சிப் பணிபயிற்சி நிலையம், பவானிசாகர் (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது. தே. கல்லுப்பட்டி, (மதுரை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம்), சத்திய விஜயநகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).

1978 மார்ச் 10]

மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில், மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊராட்சி கொள்கைப்பற்றியப் பயிற்சியும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு பணிப் பயிற்சியும், மேலும் ஊட்டச் சத்துணவுத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. வேளாண்மை, கால்நடை வளர்ச்சி போன்ற துறைகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்குப் ''பணிமுன் பயிற்சியும்'' இரண்டாண்டு காலம் அளிக்கப்படுகிறது. கிராமக் கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும்—ஓராண்டு காலத்திற்கு—தொழிற்கூடப் பயிற்சி—தச்சு மற்றும் கருமார்த் தொழில்களில் பயிற்சி—அளிக்கப்படுகிறது. பெண் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதிகள் ச. வி. நகரத்திலும், தே. கல்லுப்பட்டியிலும் அமைந்துள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் உள்ளன.

இந்த பயிற்சித்திட்டங்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய பணிகளில் அலுவலர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதின் மூலம் அவர்கள் தங்கள் பணியைத் திறம்பட ஆற்றுவதற்கும் பெரும் உதவி புரிகின்றன.

(ஈ) நிதிநிலை வெற்றியும் திட்டங்களின் சாதனைகளும்.

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச்செலவு, படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. 1974—75 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு.	ஒதுக்கீடு.	ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு,
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1974—75	1,04,22.05	27.87
1975—76	1,11,23.87	29.74
1976—77	1,16,25 40	31.08
1977—78	1,32,55.30	35.44
1978—79	1,43,07.36	38.25

[1978 மார்ச் 10

மக்களின் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.

''உள்ளூர் செஸ் மேல் வரி'' மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப் பெருக்கிக்கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி வருவது இதற்கு சான்றாகும் 1978—79 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் ''செஸ் மேல் வரி'' இணை மானியத்திற்காக ரூபாய் 1,350 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது கேளிக்கை மற்றும் காட்சி வரிகளின் மீதும் ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. அத்தகைய வரி 1978—79 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 110 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சில திட்டங்களைப் பொறுத்தவரையில், 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி சேகரிக்கப்பட்ட அடிப்படை புள்ளி விவரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடர் எண்ணும் விவரங்களும்.	யூனிட்டு.	31—3—74	31—3—75	31—3—76	31—3—77
		-ஆம் நாள் நிலவரப்படி.			
1 இணைப்புச் சாலைகளின் நீளம்.	கி.மீ.	35,220	35,750	36,681	36,852
2 மேல் நிலை நீர்த் தொட்டிகள், தானியங்கி அழுத்த நீர்த்தொட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	..	5,850	6,270	5,796	7,400
3 குடிநீர் கிணறுகளின் எண்ணிக்கை.	..	74,050	76,560	79,460	81,310
4 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் உள்ள தொடக்க நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை.	..	19,415	19,646	19,840	19,922
5 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர் நிலைத் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை.	..	3,172	3,166*	3,175	5*
6 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை.	..	16,514	17,360	18,034	18,615

* உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறினதின் காரணமாக இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அரசு, பல்வேறு துறைகளின் மீது செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களை கீழ்க் காணப்பெறும் விவர அறிக்கை காட்டும்:—

1974—75 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களையும், 19— 1979-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கீழ்க் கண்ட அட்டவணை காட்டும்:—

திட்டத்தின் பெயர்	1974—75	1975—76	1976—77	1977—78 திருத்தப் பட்ட திட்ட மதிப்பு.	1978—79 வரவு-செலவு திட்ட மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(ரூபாய் இலட்சத்தில்.)			
வேளாண்மை	68.40	38.12	38.82	40.00	43.00
கால்நடை வளர்ச்சி ..	15.78	10.53	10.02	10.00	10.00
மீன் வளம்	2.40	1.90	1.97	2·00	2.00
இணைப்புச் சாலைகள் ..	120.67*	67.56	56.00	60.00	65.00
குடிநீர் வழங்கல் ..	179.57*	191.94*	315.58*	140.00	150.00
பள்ளிக் கட்டிடங்கள் ..	71.55	53.16	53.79	54.00	75.00
சமூகக் கல்வி	11.86	4.20	8.02	8.00	8.00
மகளிர், குழந்தைகள் நலன்.	11·50	16.12	17.66	16.16	15.16

* வறட்சி நிவாரணத்திற்காக செலவழித்துள்ள தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

3. பணிகள் பற்றிய திட்டங்கள்.

(அ) கிராம வேலைத் திட்டங்கள்.

இத்திட்டத்தின்கீழ் ''குடிநீர் வழங்கல்'', ''இணைப்புச்சாலைகள்'' ''பள்ளிக் கட்டிடங்கள்'' அமைத்தல் ஆகிய பணிகள் அனுமதிக்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய இந்த திட்டத்தின் மூலம் செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரம் வருமாறு:—

1.	மேல் நிலை நீர்தொட்டிகள் (எண்ணிக்கை).	7,400
2.	கிணறுகள் (எண்ணிக்கை)	81,310
3.	இணைப்புச் சாலைகள் (கி.மீ.)	36,852
4.	பள்ளிக்கட்டிடங்கள் (கட்டி முடிக்கப்பட்டவை).	18,615

ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டம்

அனைத்து கிராமங்களுக்கும் நல்ல குடிநீர் வசதியை குறிப்பாக அந்த கிராமத்திற்குள்ளோ அல்லது அருகிலோ கொண்டிராத கிராமங்களுக்கு நல்ல குடிநீர் நிரந்தரமாகக் கிடைக்க வகை செய்வது தான் இந்தத் திட்டத்தின் முக்கியமான உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய அம்சமாகும். இது தொடர்பாகக் கவனமாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் கீழ்க் கண்டவாறு ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

வகை எண்.	குடியிருப்புகள்.
1	ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிநீர் வசதிகளே இல்லாத குடியிருப்புகள்.
2	ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் குடிக்கத் தகுதியற்ற குடிநீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள்.
3	நல்ல குடிநீர் நிலைகள் உள்ள ஆனால் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நீர் கிடைக்க இயலாத குடியிருப்புகள்.
4	தொடர்ந்து நல்ல நீர் கிடைக்கக் கூடிய ஆனால் குடிநீர் நிலைகள் பாதுகாக்கப்படாததாகவோ அல்லது தனியாருக்குச் சொந்தமாகவோ உள்ள குடியிருப்புகள்.
5	ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நல்ல குடிநீர் வசதி உள்ள குடியிருப்புகள்.
6	நல்ல குடிநீர் உள்ள குடியிருப்புகள்.

ஆகவே, மேற்குறிப்பிட்ட முதல் மற்றும் இரண்டாம் வகையைச் சார்ந்த சிற்றூர்கள் அல்லது குடியிருப்புகளுக்கு முன்னுரிமையை அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

ஊர்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின் கீழ் முதல் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும், ஓராண்டு காலத்திற்குள் குடிநீர் வழங்கப்பட்டுவிடும். இவற்றிலும் அரிசனங்

கள் மலைவாழ் மக்கள், மற்றும் பிற்பட்டோர் வாழும் பகுதிகளுக்கு முதலில் முக்கியத்துவம் அளிக்கப்படும். முதல் மற்றும் இரண்டாம் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு நல்ல குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிவடைந்தவுடன் மூன்று முதல் ஆறு வரையுள்ள குடியிருப்பு வகைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரக வளர்ச்சி இயக்குநர், அரிசன மற்றும் மலைவாழ் மக்கள் நல இயக்குநர் ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சிகளோடு நிறைவேற்றப்படும். 1978—79-ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர்த்திட்டங்களுக்காக ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ''கிராம குடிநீர் வழங்கல்'' திட்டங்களுக்காக அரசு மானியமும் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின்வருமாறு:—

வகை	அரசு மானியம் (சதவீதம்).	பொதுமக்கள்-நன்கொடைத் தொகை (சதவீதம்).
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

(ஆ) இணைப்புச் சாலைகள்.

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கெனவே, அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு சாலை வேலைகளை நிறைவேற்ற அரசு மானியமும், பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின் வருமாறு :—

வட்டாரத்தின் வகை.	அரசு மானியம் (சதவீதம்).	பொதுமக்கள் நன்கொடைத் தொகை (சதவீதம்).
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற் கென 15 சதவீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவீதமும், அரிசன நலத்துறை நிதிகளிலிருந்து பெறப்படுகிறது. குடிநீர் வழங்கல் இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 20 சதவீதமும் அரிசனங்கள் பயனுக்காக செய்யப்பெறும் பணிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

1974-75 ஆம் ஆண்டு தொடக்க, முதல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், உயர் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு முறையே ரூ. 20,000, ரூ. 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு அரசு மானியமும் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதமும் திருத்தி அமைககப் பட்டுள்ளது.—

வட்டார வகை.	அரசு மானிய விகிதம்.	பொதுமக்கள் நன்கொடை விகிதம்.
(1)	(2)	(3)
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

மலைப்பகுதி வட்டாரங்களைப் பொறுத்த மட்டில், கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீட்டின் உச்ச வரம்பு 25 சதவீதம் உயர்த்தப் பட்டுள்ளது. 1978-79 நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 75 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

(ஈ) சாலைகளைப் பேணுதல்.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பேணுவதற்கென ''உள்ளூர் சாலைகள் மானியம்'' ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒவ்வொராண்டும் வழங்கப் படுகிறது. 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில், மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்குவதற்காக 2.25 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 10

(உ) சிறுபாசனம்

சிறுபாசன அமைப்புகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப் படவும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்ட பூர்வமாக ஒப்படைக் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாசன அமைப்பும் குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் கவனிக்கப்படும் அடிப்படை யில் அமைந்த பராமரிப்புத் திட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியங் கள் சிறுபாசன அமைப்புகளைப் பராமரித்து வருகின்றன. ''உள்ளூர்ப்பாசன மானியம்'' என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப் பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் தொகையைச் செலவிடும். இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ள தொகைகளை மட்டும் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இப்பாசன அமைப்புகளை சரிவர பராமரிக்க இயலவில்லை என்று தெரியவந்ததால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆயக்கட்டைக் கொண்ட எல்லா பாசன அமைப்புகளையும் பொதுப்பணித்துறை எடுத்துக்கொள்ளும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டை கொண்ட சிறுபாசன அமைப்புகளை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின்கீழ் விடப்பட்டு விட்டாலும் ஏரிகளைப் பராமரிக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மானியங்களில் எவ்வித குறைப்பும் இன்றி தற்போதைய அளவி லேயே மானியங்களை அரசு வழங்கும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இந்த ஏரிகளை மேலும் சிறந்த முறையில் பராமரித்து வரும் நிலையில் இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்துக் கென 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. உற்பத்தித் திட்டங்கள்.

வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளம்.

1978-79-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில், வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோ சனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகளில் வரை யறுக்கப்பட்டுள்ள சில திட்டவட்டமான நடைமுறையின் அடிப் படையிலும், தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன :—

(அ) வேளாண்மை.

(1) வேளாண்மை டெப்போ—கிடங்கு கட்டுதல்.

(2) ஊராட்சி மலைத் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்ப கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனைய திட்டங்கள்:—

(i) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனங்கள் வழங்குதல்.

(ii) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

(iii) உதவிகள் விரிவாக்குதல்—கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன.

(iv) வேளாண்மை விரிவாக்கப்பணி—விளக்கப்பாத்திகள் அமைத்தல்.

(v) தனிப்பட்டவர்களுக்கு பசுந்தழை உர விதைகள் வழங்குதல்.

(vi) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1978-79 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வேளாண்மை திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 43 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-79-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 11,497 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 9,245 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

	ரூ.
(i) வேளாண்மை டெப்போ—கிடங்கு கட்டுதல்	2,500
(ii) ஊராட்சி மலைத்தோட்டங்கள் பராமரிப்பு	700
(iii) ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள்	8,297
மொத்தம் ..	11,497

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) கால்நடை வளர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ் அரசு மானியமாக 10 லட்சம் ரூபாய் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2,674 ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டது. இதற்கு ஈட்டுத் தொகையாக ரூபாய் 2,048 உள்ளூர் வாசிகளிடமிருந்து பெற வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

1. கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

3. கால்நடைகள், பால் பண்ணை, கோழித்தீவனம் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

(இ) மீன் வளம்.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதற்கும், ''ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்'' என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்று ஊராட்சி ஒன்றியங்களின் மீன்வளங்களின் மேம்பாடுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு எங்கெங்கு இயலுமோ அந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

(1) மீன் குஞ்சு வளர்ப்பு, பேணுதல்.

(2) மீன் குஞ்சுகளை வழங்குதல்.

(3) ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவைகள் முழுவதற்கும்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

5. நலப்பணித் திட்டங்கள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள், அவற்றின் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கி தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, விரிவுப்படுத்தி, மேம் படுத்துவது, மேலும் அப்பகுதிகளில் தனியார் தொடக்கப் பள்ளி களுக்கு மானியங்கள் வழங்குவது ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65(c) பகுதியின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழுப்பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்ததாகும். ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 28,435 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,077 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பெறு கின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களாகும். ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் உதவி பெறும் பள்ளிகளில் 1.31 இலட்சம் ஆசிரியர்கள் 48.13 இலட்சம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

1972-73 ஆம் ஆண்டிலிருந்து அரசின் செலவு, ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

ஆண்டு.	அரசின் செலவு.	ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1972-73	3,200.00	570.00
1973-74	3,432.41	372.00
1974-75	3,636.97	392.00
1975-76	3,898.28	432.04
1976-77	4,300.02	662.94
1977-78	5,069.72	741.18
1978-79	5,468.00	817.06

மதிய உணவுத் திட்டம்.

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் உள்ளாட்சிகளைப் பங்கு பெறச் செய்து மதிய உணவுத் திட்டத்தை அரசு நிலைத்துச்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செயல்படச் செய்ய முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண். 17-ல் ரூபாய் 420.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மக்கள் நல்வாழ்வுப் பணிகள்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.—ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாயத்துக்கு நோய் தடுப்பு சிகிச்சை அளிப்பது, நோய் சிகிச்சையளிப்பது மற்றும் மக்களின் உடல்நலன் நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வது ஆகிய பல்நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 374 வட்டாரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பத்து வட்டாரங்களில் ஒரு கூடுதல் தோடக்கச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

தாய்-சேய் நல நிலையங்கள். — தாய்-சேய் நல பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் மொத்த செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய்-சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,820 ஆகும். 1978-79 ஆம் ஆண்டில் இந்த இனத்தின்கீழ் ரூபாய் 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள். —மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, கிராம மருந்தகங்களும், ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் (ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,400-க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டம். —தங்களுடைய பகுதிகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன.

1978 மார்ச் 10]

(இ) சமூகக் கல்வி.

தற்போது 13,392 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயதுவந்தோர், நாட்டு நடப்புச் செய்திகளின் மீது, அவர்களுக்குள் விவாதிக்கும் ஒரு நிலையமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் திட்டம் தொடர்ந்து தீவிரமாகச் செயற்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும், வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலி பெட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளிலுள்ள சிற்றூர்களிலும் இப்பொழுது வானொலிகள் நிறுவப்படுகின்றன. 41,105 வானொலிப் பெட்டிகள் இதுவரை மாநிலத்திலுள்ள ஊர்கள், சிற்றூர்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு விவாதிக்கும் குழுக்களாகச் செயல்படுகின்றன. இன்றைய நிலவரப்படி 14,220 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்துக்கு குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப்புறப் பகுதிகளில் 12,356 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன. இம்மன்றங்களின் மூலமாக கிராமப்புறத்திலுள்ள மகளிர், தையல், ஊட்டச் சத்து உணவு முறைகள், மற்றும் குடும்ப நலம் போன்ற குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான எல்லா முறைகளிலும் அனுபவம் பெறுவதற்கு வாய்ப்புகள் பெறுகின்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கென தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் 4,000 வழங்கப்படுகிறது.

[1978 மார்ச் 10

6. சிறப்புத் திட்டங்கள்

(அ) செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962-63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக செயல் முறை சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது.

கிராமப் பகுதிகளில் குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பரப்புவதும், சத்துணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிராமச் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்வதுமே இத்திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை மற்றும் நாட்டு மக்கள் குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகளின் சத்துணவு உட்கொள்ளும் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பிற முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே கல்விப் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டமாக இச்சத்துணவுத் திட்டம் விளங்குகிறது.

1962-63 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் 61 வட்டாரங்களுக்கு விரிவுப்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றுல், 38 வட்டாரங்களில் செயல்முறைச் சத்துணவுத் திட்டம் முடிவுற்றது. 23 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் 6 ஆண்டுக் காலத்திற்குச் செயலில் இருக்கும். திட்டக் காலத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்ருல் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. திட்டம் செயல்படும் காலத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பெற்ற நிதி ஒதுக்கங்களைக் கொண்டு, ஒவ்வோராண்டும் என்னென்ன பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு அந்த வகையில் முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆண்டுத்திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. திட்டக்காலத்தில், திட்டத்தினைச் செயல்படுத்தும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பொருள்கள் வடிவிலும் ரொக்க வடிவிலும் ரூ 1.6 இலட்சம் அளவிற்கு 'யூனிசெப்', நிறுவன உதவி கிடைக்கப் பெறுகிறது. இத்திட்டத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான செலவு முழுவதையும் 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. தவிர, ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மகளிர் மன்றங்களையும், 5 இளைஞர் மன்றங்களையும் உருவாகக ரொக்க உதவியாக ரூ. 9,500-ம் கொடுக்கப்படுகிறது. திட்டம் செயல்பட்டுவரும் வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும்

1978 மார்ச் 10]

திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஆண்டொன்றுக்கு ரூ. 34,000-ம் முன்னால் திட்டத்தைச் செயல்படுத்திய வட்டாரங்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 20,000மும் மத்திய அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு உற்பத்தி வகைப் பணிகளுக்காக ரூ. 51,000 வீதமும் ஊட்டச் சத்து கல்விப் பணிகளுக்காக ரூ. 50,000 வீதமும் ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வழங்குகிறது. சத்துணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும், இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. மீன் வளம்

2. தோட்டக் கலை—

(அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்.

(ஆ) சமுதாயத் தோட்டம்.

3. கால்நடை வளர்ப்பு—

(அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்.

(ஆ) கோழிமுட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்.

(இ) புழக்கடைப் பிரிவுகள்,

(ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்,

4. வீட்டுத் தோட்டங்கள்.

5. பள்ளித் தோட்டங்கள்.

6. சத்துணவுக் கல்வி—

(அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி.

(ஆ) உணவளிப்பது குறித்துச் செயல்முறை விளக்கத் திட்டம்.

7. பொதுச் சுகாதாரப் பணிகள்—

(அ) ஆய்வு.

(ஆ) மருத்துவப் பரிசோதனை

(இ) தடுப்பு ஊசி போடுதல்,

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 10

செயல்முறை சத்துணவுத் திட்டத்திற்கு 1978-79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர். ஆதலால் இன்றியமையாத வளர்ச்சிக் கால கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும் ஆண்டில் 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயாபீன், மக்காச் சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் 'சாலாடு' எண்ணெயும் (Salad oil) அல்லது 'பீநட்' எண்ணெயும் (Peanut oil) 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டு பயன்பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும். அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 110 வட்டாரங்களில் அமைந்து கிடக்கின்ற 1,398 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 1,30,000 குழந்தைகளும், தாய்மார்களும் பயன்பெறுகின்றனர்.

1978-79 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 19.00 இலட்சமாகும். இத்தொகையில் 'கேர்' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு வழங்குவதற்கு ஆகும் செலவுகள், பால சேவிகைகள், ஆயாக்கள், ஆகியோருக்கு ஊதியம், பாத்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு, மற்றும் நிர்வாகச் செலவு ஆகியன அடங்கும்.

(இ) கிராம முழு வளர்ச்சித் திட்டம்.

வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கின்ற, கிராமப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், வேளாண்மையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் பரிந்துரைகளைச் செய்யும் பொருட்டு இந்திய

1978 மார்ச் 10]

அரசு வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு ஒன்றை நிறுவியது. இந்த ஆணைக்குழு, கிராமதானக் கிராமங்களையும் சர்வ சேவா சங்கத்தையும் மேம்படுத்துவதற்காக திட்ட ஆணைக் குழுவுடன் விவாதம் நடத்தியது. கிராமதானப் பகுதிகளில் கிராம நிலங்களுக்குரிய உரிமை முழுவதும் ஏற்கனவே உள்ளபடியால் குறிப்பாக அந்தப் பகுதிகளிலெல்லாம் முன்னோடி அடிப்படையில் வேளாண்மை மேம்படுத்துவது அல்லது காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது குறித்த பணிகள் முதற்கண் மேற்கொள்ளப்படலாமென்று வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு கருதிற்று. மேலும், கிராமதானப் பகுதிகளில் இத் திட்டத்தைச் செயற்படுத்தினால் இது மக்களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் அண்டையிலுள்ள கிராமங்களும் இத்திட்டத்தில் பங்கு கொள்ள முன் வரலாம் என்றும் ஆணைக்குழு கருதியது.

வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு, கிராம முழு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலநீலிதநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னக் கோயிலாங்குளம் பெரிய நடுவக்குறிச்சி. சின்ன நடுவக் குறிச்சி, பட்டடைக் கட்டை ஆகிய நான்கு கிராமங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.

இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில் 1976ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மேற்சொன்ன கிராமங்களுக்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இந்தத் திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 66 இலட்சம் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இத்தொகையை பின்வரும் வகைகளில் செலவிடக் கருதப்பட்டுள்ளது:—

திட்டத்தின் பெயர்.	மொத்த மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)
1 வேளாண்மை	36·49
2 கால்நடை வளர்ப்பு	13.83
3 தொழிற்சாலைத் திட்டங்கள்	3.96
4 குறைந்தளவுத் தேவைகள் திட்டம் ..	8.02
5 பணியாளர்க்கான செலவு, சில்லறைச் செலவுகள்.	3.70
மொத்தம்.	66.00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 10

ஆகஸ்டுத் திங்கள் 1977 வரை, மொத்தம் 4.96 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் செலவாகியுள்ளது,

கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நிறைவேற்றப் படுவதற்காக கீழ்க்காணும் திட்டங்களுக்குத் தேவையான செயற் குறிப்புகள் இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன :

		ரூபாய்
1	வேளாண்மை	14,15,975
2	கால்நடை வளர்ப்பு	9,66,025
3	தொழிற்சாலைகள்	1,30,000
4	பணியாளர்கள், சில்லறைச் செலவுகள் ..	1,88,000
	மொத்தம் ..	27,00,000

மத்திய அரசிடமிருந்து, இதற்கான நிதி ஒதுக்கீடு எதிர் பார்க்கப்படுகிறது,

(ஈ) கிராமப்புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் நிறுவுதல்.

கிராமப்புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடம் நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்த கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவில் 20 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. எரிவாயுக்கூடம் வெற்றிகரமாக நிறுவப்பட்டவுடன் மேற்கூறிய உதவித் தொகை வழங்கத்தக்கதாகும். மேலும் இத் திட்டத்தினல் பயனடைவோருக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் கடன் வழங்கும்.

1976-77 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 1,500 நிறுவப்பட வேண்டு மென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க அந்த ஆண்டில் 1,493 கூடங்கள் நிறுவப்பட்டன.

சாண எரிவாயுத் திட்டம்.

1977-78 ஆம் ஆண்டுக்கான இலக்கு எண்ணிக்கையான 2,100 சாண எரிவாயு முறை நிறுவப்பட சீரிய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம்,

1978 மார்ச் 10]

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்பணிக் கூட்டுறவு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் கழகம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட தனியார் தொழிற்கூடங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொழிற்பிரிவுகள் ஆகியவைகளிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும். மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்ட சாண எரிவாயு முறைகளுக்கு மட்டுமே உதவித் தொகை அனுமதிக்கப்படும்.

(உ) தமிழ்நாட்டில் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவுதலும் பேணுதலும்.

வேளாண்மை, பொது சுகாதாரம் மற்றும் பல துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அவை பற்றின நுட்பத்தையும் ஊர்ப்புற மக்களுக்கு போதிப்பதற்காகவும், விளம்பரம் செய்வதற்காகவும் சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசால் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 125 தொலைக்காட்சிப் பெட்டிகள் செங்கற்பட்டு வட ஆர்க்காடு மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டங்களில் நிறுவவப்பட்டுள்ளன. மேலும், 195 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட அரசு ஏற்பாடு செய்துள்ளது, இதில் 7 பெட்டிகள் ஏற்கெனவே பெறப்பட்டு, நிறுவப்பட்டும் விட்டன, நன்முறையில் இயங்கி வரும் இப்பெட்டிகளை ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம் பராமரித்து வருகின்றது, ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளை மட்டுமின்றி, நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சியால் நிறுவப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளையும் பராமரிப்பதற்காக ஊராட்சி வானொலி பராமரிப்பு நிலையத்தில் 'தொலைக் காட்சிப் பிரிவு' ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(ஊ) பூமிதானமும் கிராமதானமும்,

தமிழ்நாடு பூமிதான சட்டம், 1958-ல் (தமிழ்நாடு சட்டம் XV—1958) கண்ட பிரிவு 3-ன் படி, தமிழ்நாடு மாநில பூமிதான வாரியம் 1959 இல் ஏற்படுத்தப்பட்டது. பூமிதானம் மற்றும் கிராமதானத்தின்கீழ் அன்பளிப்பாக அளிக்கப்படும் நிலங்களைப் பெற்று நிலமற்ற ஏழைகளுக்கு ஒழுங்காக அளிக்கும் பணியை இந்த வாரியம் ஏற்று நடத்துகிறது.

[1978 மார்ச் 10

பூமிதானம் :

திரு. ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டு நிலமற்ற ஏழைகள், கூட்டுறவு சங்கங்கள், சர்வோதய ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு-சமுதாய நலன் அடிப்படையில்—இனாமாகப் பெற்ற நிலங்களை வழங்கும் திட்டமே பூமிதானம் எனப்படும்.

தக்க விசாரணைக்குப் பின்னர் அறிவிப்பு வெளியிட்ட பிறகு தமிழ்நாடு அரசிதழில் வெளியான பின்பே, அந்த நிலங்கள் வாரியத்தின் உடைமையாகும்.

கிராமதானம:

'கிராமதான கிராமம்' என்பது ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் தங்கியுள்ள—சொந்தத்தில் நிலம் கொண்டவர்களில்—மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாதவர்கள் தாமாகவே முன்வந்து தங்களுக்குச் சொந்தமான நிலம் அனைத்தையும் கிராம தானமாக அளிக்கும் பகுதியாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் பாதிக்கு மேல் நிலத்தைச் சொந்தமாக உடையவர் மனமுவந்து அளித்தாலும் அதுவும் கிராமதான கிராமமாக எடுத்துக்கொள்ளப்படும். கிராமதானம் அளிப்போர் கொடுப்பதுடன், அந்நிலத்தில் 19/20 பங்கினில் பயிர் செய்யவும், மீதி 1/20 பங்கினை நிலமற்ற ஏழைகளுக்காக அளிக்கும் வகையுடன் தமக்கு அந்நிலங்களின் மீதுள்ள உரிமையை கிராம சபைகளுக்காக விட்டுக் கொடுக்க வேண்டும்.

பூமிதான நிலங்களைப் பெற்றவர்கள்—அதனைப் பயிர் செய்யும் வகையில் உதவுவதற்காக சில மாவட்டங்களில் 'பூமிதான கூட்டுறவுச் சங்கங்கள்' ஏற்படுத்தப்பட்டுள்ளன. பூமிதானமாகக் கிடைத்த நிலம் 20 ஏக்கருக்குக் குறையாமல் ஒரே நிலமாக இருக்குமானால் அந்த நிலத்தை சீர்திருத்தி-பயிர் செய்யும்பணியை தமிழ்நாடு சர்வோதய மன்றத்திலிருந்து இப்பணிகளுக்காக பண உதவியை பெற்று, அந்நிலங்களைப் பெற்றவர்களின் உழைப்பையும் பெற்று, 'சர்வ சேவைப் பண்ணைகள்' நிறைவேற்றும் அந்த நிலங்கள் முழுவதும் முன்னேற்றம் பெறும் வரை, அந்த நிலத்தைப் பெற்றவர்கள் ஊதியமும் பெறுவர், முதலில் செலவழித்த தொகையைப் பெற்ற பின்னர் அந்த நிலம் முதலில் அளிக்கப்பட்டவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுவிடும்,

பூமிதானமாக தமிழ்நாட்டில் இதுவரை 23,470 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. இதில் 22,240 ஏக்கர் நிலம், நிலமற்ற 15,084 ஏழைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன, அவர்களில் பெரும்பான்மையோர் அரிசனங்கள் ஆவர்,

1978 மார்ச் 10]

இணைப்பு V

[934-935ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மானியக் கோரிக்கை எண் 34

நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பு

நகர்-ஊரமைப்பு

கிராமப்புறக் குடியிருப்புகள் மற்றும் நகரங்கள் ஆகிய இரண்டின் ஒருமுகப்படுத்திய வளர்ச்சியின் மூலமே மக்கள் தம் வாழ்வில் விரும்புகின்ற மேம்பாட்டினைப் பெறமுடியுமென தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கிராம-நகரப் பகுதிகளிடையே உறுதியாக உள்ள பிணைப்பைத் தள்ளிவிட இயலாது, நகர்ப்புற பகுதிகளின் திட்டங்கள் யாவும் முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன, கிராமப் பகுதிகளின் திட்டங்கள் யாவும் மண்டலத் திட்டங்கள் மற்றும் உள் மண்டலத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. கிராம-நகர்ப் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த அணுகு முறையை உறுதிப்படுத்தும் வகையில், 1971-ம் ஆண்டின் நகர் ஊரமைப்புச் சட்டம் இங்கு குறிப்பிடப்பட்டபடி முறையான திட்டங்களுக்கு வழிவகை செய்துள்ளது.

2, எனவே, இந்த நகர்-ஊரமைப்பு இயக்கம், உள் மண்டலத் திட்டங்கள், மாவட்டத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது, இத் திட்டங்களில் இட இணைப்புகளும், பொருளாதார கூறுபாடு திட்டங்களும் வருங்காலத்திற்கான எதிர் நோக்கிய நிலப் பயன்பாடு தொகுதிகளுடன் அறிவியல் முறையின் அடிப்படையில் இணைக்கப்படுகின்றன. இந்தப் பணி இனி வரும் ஆண்டுகளில் வலுப்பெறும், இத்துடன், இந்தத் திட்டங்களின் ஆய்த்தம் செய்யும் அணுகு முறையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது, செயற்படுத்தும் பணிகள் ஏதும் மேற்கொள்ளாமல் வெறும் திட்டங்களைத் தயாரிப்பதை மட்டுமே இவ்வியக்கம் இந்நாள் வரை செய்து வந்துள்ளது, தற்போது இத்திட்டங்களைச் செயற்படுத்தக்கூடிய பகுதியையும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது, இதன் மூலமாக இத்திட்டங்கள் மிகுந்த பயன் விளைவிப்பனவாகவும் நடைமுறைக்கு ஏற்ற இயல்பும் பெறுவதோடு இத்திட்டங்களைச் செயற்படுத்தும் இடங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பின் ஊட்டங்கள் மூலமாக ஒத்துணர்வும், செயற்துறை ஈடுபாடும் கிடைக்கப்பெறும்.

3, ஆகையால், முழுமைத் திட்டங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு புதிய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது, இத்திட்டங்கள் வீட்டு வசதி' சிறு தொழில்கள், போக்குவரவு, மற்றும் போக்குவரத்து, குடிநீர் மற்றும் வடிகால் ஆகிய பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளன.

[1978 மார்ச் 10

மேலும் நகர்ப்பகுதிகளைப் புதுப்பித்தல், விரைவாக வளரும் இரண்டாம் நிலையிலுள்ள சிறு நகரங்களுக்கும், சிறிய குடியிருப்புகளுக்கும், பொது வசதிகள் செய்தல் ஆகிய கருத்துக்களையும் கொண்டுள்ளன, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற மாநகரங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, மத்திய அரசு, உலக வங்கி, உலக நாடுகளின் வளர்ச்சித் திட்டம் அகியவற்றின் உதவியுடன் செயல் படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு உருவாக்கியுள்ளது. சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த மாநகரங்களின் பகுதிகளைப் பார்வையிட்ட உலக வங்கியைச் சேர்ந்த சிறு குழு இந்த அரசு நகரமைப்புத் துறையில் செய்துள்ள நகர்ப்புற திட்டமிடுதலின் தரத்தில் பெரிதும் ஈடுபாடு காட்டியது. 1978-ம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் மத்திய அரசு உதவியுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் முதற்கட்டப் பணி, மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களில் தொடங்கும் இப்பணி, வரும் ஆண்டுகளில், மேலும் ஊக்கம் பெறும், மதுரை, கோயம்புத்தூர், மற்றும் திருச்சிராப்பள்ளி, மாநகரங்களுக்கான குடிநீர், சாக்கடை வசதிக்கான முன் மூதலீடு ஆய்வுகள் தொடங்க உத்தேசித்துள்ளது, மற்றும் தேசிய தொலை புலனுணர்வு செயலாண்மை நிலையம் (நேஷனல் ரிமோட் சென்சிங் ஏஜென்சி) உதவியுடன் வான்வெளி மூலம் நில ஆய்வு ஏனைய விளக்கங்களை ஆய்வு செய்யும் பணியினையும் இந்த இயக்கம் ஏற்றுக் கொள்ள இருக்கின்றது.

4. எந்த நகர்ப்புறத் திட்டத்திலும் போக்குவரவு மற்றும் போக்குவரத்துத் திட்டம் பெரும் பங்கு உடையது. சென்னை மாநகரத்திற்கான போக்குவரவுத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே இவ்வியக்கம் ஆயத்தம் செய்து போக்கு வரவுத் துறையில் சிறப்பான திறமை பெற்றுள்ளது. இந்த போக்குவரவுத் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலில் தயாரான திட்டமாகும். இது சென்னை மாநகருக்கான விரைவுப் போக்குவரவு அமைப்பிற்கு (Rapid Transit System) அடிப்படையானதாகவும் உள்ளது. இந்த அனுபவத்தின் அடிப்படையில், இந்த இயக்கம் கோயம்புத்தூர் மாநகருக்கான போக்கு வரவு மற்றும் போக்குவரத்து ஆய்வுகளை முடித்துவிட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாநகரங்களுக்கான ஆய்வுகளை தற்போது மேற்கொண்டுள்ளது. மற்ற நகரங்களில் உள்ள உடனடியாக கவனிக்க வேண்டிய போக்குவரவுச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய விரைவான பகுப்பாய்வு ஊராட்சி ஒன்றிய அளவில் கிராமப் போக்கு வரத்திற்கான சாலை இணைப்புகள், எல்லா வகைப் போக்குவரவுச் சாதனங்களையும் கருத்தில் கொண்டு மாநில அளவிலான ஒருங்கிணைந்த போக்குவரத்திற்கான திட்டம் தயாரித்தல் முதலியன இவ்வியக்கம் மேற்கொண்டுள்ள மற்ற சில முக்கிய பணிகளாகும்.

1978 மார்ச் 10]

5. மேற்குறிப்பிட்ட எல்லாப் பணிகளையும் புதுமையான அடிப்படை விவரங்களை முறைப்படுத்தும் கருவிகளும், வான் வெளி நிழற்பட விளக்கக் கருவிகளும், மனித கணிப்புத் திறனுக் குப் புறம்பான ஆய்வு முறைகளைக் கணக்கிடும் கணிதக் கருவி களும் இல்லாமல் செய்ய முடியாது. எனவே, இந்த இயக் ககத்தை நவீனமாக்கவும் இத் துறையின் திறனை மேம்படுத்த வும், தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. திட்ட அமைப்பில், பொது மக்களின் ஈடுபாடு மிகவும் இன்றியமை யாதது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உள்ளூர்த் திட்ட அதிகாரக் குழு, மண்டலத் திட்ட அதிகாரக் குழு, மாநில நகர் ஊரமைப்புக் குழு ஆகியவற்றைச் செயற்படுத்தத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்பாக சட்டம் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு உள்ளன. இந்த இயக்ககம், திட்ட அமைப்பு முறையில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற டெல்ஃபி செயல்முறை போன்ற புதிய நுட்பமான செயற் முறைகளைப் பின் பற்றி வருகின்றது.

6. இந்த இயக்ககம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் (Indian Standerds Institutions) உதவியுடன், இம் மாநிலத்திற்கான விரிவான வளர்ச்சிக் கட்டுப்பாடு மற்றும் கட்டிட விதிகளை உருவாக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கும், மலைப்பாங்கான பகுதிகளுக்கும் வேறு தனிப் பண்பு கொண்ட நிலப் பகுதிகளுக்கும், சிறப்பான விதிகளையும் இவ்வியக்ககம் உருவாக்கி வருகிறது.

7. சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளத் தால் உருவான பயங்கர பெருந் துன்பத்தைத் தொடர்ந்து, இவ்வியக்ககம் செய்த பணி குறிப்பிடத்தக்கது. குடிசை வாழ் மக்களின் துன்பங்களைக் கண்டு புயல் வீசும் சமயத்தில் மக்களைப் பாதுகாக்க காப்புக் கூடமாகவும், மற்ற சமயங்களில் பொது பயனுக்காக சமுதாயக் கூடமாகவும் பயன்படும் தனிப் பண்பு கொண்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கு இவ்வியக்ககம், அறி வியல் அடிப்படையான வடிவமைப்பையும், திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இப் பணி இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தின் பாராட்டையும், உலக நாடுகளின் குழந்தை காப்பு அவசர கால நிதி (UNICEF) போன்ற வெளிநாட்டு முக மைகளின் கருத்தையும் கவர்ந்துள்ளது. மேலும் பெரும் அழிவு தடுப்புத் திட்டம் பற்றி தொழில் நுட்ப திட்ட அறிக் கை ஒன்றையும் இந்த இயக்ககம் தற்போது ஆயத்தம் செய்ய முனைந்திருக்கிறது. சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்ப கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமுதாய அறிவியல் துறையின் உதவியுடன், புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பாதிப்புகளை (cyclone Disaster Simulator) உருவாக்கியுள்ளது;

இது போன்ற பணிகள் இம்மாநிலத்தில் இயற்கையால் ஏற்பட்ட பெருந் துன்பத்தைக் குறைக்கப் பெரிதும் உதவுவதுடன் இந்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு ஒரு முன்மாதிரியாகவும அமையும்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

சென்னைப் பெருநகர் பரப்பு 1,167 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள சென்னை நகரமும் மற்றும் புறநகர் பகுதிகளை யும் கொண்டுள்ளது. இப்பகுதி அதிகமாகப் பெருகிவரும் மக் கட் தொகையமைந்த தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. சென்னைப் பெருநகர் வட்டாரத்தின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கு உத்திரவாதமளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சின்னாட்களுக்கு முன்னர் அதன் நான்காண்டு சாதனையை முடித்திருக்கிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் புறநகர்ப் பகுதி மற்றும் புது நகர திட்டமிடலுக்கும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. மேலும் அடிப்படைத் திட்டங்கள் தீட்டலும், சென்னை பெருநகர் பதிக்குள் வட்டார வளர்ச்சியை இனிது நிறைவேற்றலும், உலக வங்கி திட்டத்தின் ஒரு பகுதியான குடிநீர் அமைத்தல், சாலை பராமரிப்பு, போக்குவரத்து; குடிசை மாற்று மேம்பாடு, சமு தாய அபிவிருத்தித் திட்டம் போன்ற இன்னோரன்ன பிற பல தரப்பட்ட வட்டாரத் திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து நிறைவேற்றலும் இக்குழுமத்தின் செயலாகும். நகர வளர்ச்சி யின் பகுதியாக சமுதாய வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டின் சிறப்பினை வலியுறுத்தல் செய்யப்பட்டு இருக்கிறது. முன்னேற்றத்திலுள்ள பலதரப்பட்ட திட்டங்களின் சிறப்பான அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மணலி திட்டமும் வளர்ச்சியும்.

2. மணலி புறநகர்ப் பகுதி, சென்னை மாநகரின் வடறபுத்தே, மணலி எண்ணூர்-திருவொற்றியூர் சுற்றுப் புறங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கும் இதர தொழிலாளிகளுக்கும் குடியிருப்பு மனைகள் அமைக்கும் வகையில் அபிவிருத்தி செய்யப் படுகிறது. இவ்வபிவிருத்தி யின் முதற் கட்டமாக 198 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 400 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டு, 114.78 இலட்ச ரூபாய் இது வரையில் செலவிடப்பட்டுள்ளது. 69.20 இலட்ச ரூபாய் கடனுதவியாக புறநகர் வீட்டு வசதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து (ஹட்கோ) மணலி பகுதியில் 543 வீடுகள் கட்டுவதற்காகப் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட முழுச் செலவு ரூ. 92.66 லட்சமாகும். 1978-79-ம் ஆண்டிற்காக மேற் கொள்ளப்படவிருக்கும் வேலைபாடுகள் அதாவது மாநில வரவு-

1978 மார்ச் 10]

செலவுத் திட்டத்துடனும் 'ஹட்கோ' போன்ற நிறுவனங்களின் வெளிப்புற உதவியுடனும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதி முழுதும் முறை படுத்தப்பட்ட நகர வளர்ச்சியின் குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில் மணலி வளர்ச்சி வேகமாகச் செயல்பட இருக்கிறது.

மறைமலை நகரப் புதுநகரம் :

3. மறைமலை நகர் என்ற பெயருடன் புதிய நகரம் ஒன்று சென்னை மாநகரிலிருந்து தென்மேற்காக 45 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே திட்டமிடப்பட்டுள்ளது. இப்புது நகர் முடிவாக ஒரு இலட்சம் மக்களுக்குக் குடியிருப்பு வசதியளித்து, தன்னிறைவு பெற்றதாக விளங்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இப்புது நகர் தொழிற்சாலை, குடியிருப்பு, வாணிகம் மற்றும் அறிவுக் கூடங்கள் ஆகியவைகளுக்குமான மனைகள் கொண்டதாக விளங்கும், சமுதாய வசதிகளுக்கான மனைகளும் ஏற்படுத்தப் படுகின்றன, இத்திட்டத்தின் முதல் கட்டமாக 200 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டு, 94.09 இலட்சம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் செயற்குறிப்புகள் தீவிர மேம்பாடு முயற்சியைக் கொண்டு தொழிற் சாலைகளையும் மக்களையும் புதிய நகரத்திற்கு கவர்ந்து இழுக்கும் தன்மையுள்ளதாக அமையும். திருவள்ளூரில் புதிய நகரமைப்புக்கான ஆரம்ப ஆய்வுப் பணி தொடங்கப் பெற்று இடத்தினை நேராய்வு செய்யப் பட்டுள்ளது. இது மாதிரியான பிறிதொரு ஆய்வு கும்மிடிபூண்டியிலும் துவங்க திட்டமிடப்பட வேண்டியுள்ளது.

அடிப்படைத் திட்டமும் வட்டார வளர்ச்சி திட்டமும்.

4. அடிப்படைத் திட்டத்தின் ஒழுங்குமுறை விதிகளைச் செயலாக்கக் கோருதல் விரிவான வளர்ச்சித் திட்டங்களை குறிப்பாக சென்னை நகரத்திலும் மற்றும் பெருநகர பலவேறு பகுதிகளிலும் முறையாக அமைத்தல் ஆசியவை இத்திட்டத்தில் அடங்கும். கடந்த ஆண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்திலும், சென்னை மாநகராட்சியிலும் சட்டத்தின்படி வழங்கப்படும் திட்ட அனுமதிகள் வழங்க ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட முறைகள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டு விரைவு படுத்தப்பட்டு வருகிறது, சென்னை நகர் சம்பந்தப்பட்ட பகுதிகளில் விரைவான வளர்ச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்து வதற்காக 99 திட்டப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது, இவைகளில் 38ப் பகுதிகளுக்கான விரிவான திட்டங்கள் இது வரை அறிவிக்கப்பட்டு அவைகளைத் தயாரிக்கும் பணி பல்வேறு நிலையில் உள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 20 பகுதிகளில் இத்தகைய திட்டம் செயலாக்க அறிவிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

[1978 மார்ச் 10

சிறப்பு வளர்ச்சித் திட்டங்கள்.

5. சென்னை நகரத்திற்குள் ஏற்படும் வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடனும், மற்ற பெருநகர் வளர்ச்சி வட்டாரத்திற்கு உதவும் வகையிலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பழக்கடைப் பகுதியை திருத்தி அமைத்தல், பேருந்து மற்றும் வாகன நிலையங்கள் மூன்றை அபிவிருத்தி செய்தல், கோயம்பேட்டில் மொத்த வியாபார அங்காடியை அமைத்தல், வட தென் சென்னையில் அலுவலகங்களை உருவாக்க கட்டிடம் கட்டுதல் போன்ற சிறப்புத் திட்டங்களை தொடங்கியுள்ளது. இச்செயல் முறைகளுக்கு திட்டமிடல் 1978-79-ல் முழுமையடைய இருக்கிறது.

சென்னை நகர வளர்ச்சித் திட்டம் :

6. சென்னைப் பெருநகர் வட்டாரத்தின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கும் நீண்டகாலத் தேவைக்கும் வருங்கால உடனடித் தேவைக்கும் உறுதியளிக்கும் வகையிலும், சென்னைப் பெருநகர் பரப்பில் வாழும் ஏழை எளிய மக்கட் பகுதிக்கு நேரடியாகப் பயனளிக்கும் முகத்தான் முதலீடுகளை பயன்படச் செய்யும் சென்னை நகர வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அவற்றைச் செயல்படுத்த உலக வங்கியின் உதவியும் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட வேலைகள் கடந்த ஆண்டு துவங்கின. இரண்டாமாண்டான இவ்வாண்டில் மேலும் பணியின் வேகம் அதிகரிக்கும். இத்திட்டத்தின் பல்வேறு அங்கங்களை அரசுத் துறைகளும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், சிறு தொழில் வளர்ச்சிக் குழுமம் போன்ற அரசுச் சார்பு நிறுவனங்களும் நிறைவேற்ற இருக்கின்றன, அவற்றில் தண்ணீர் மற்றும் கால்வாய் வசதிகள், போக்குவரத்து, குடிசை மேம்பாடு சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள், மற்றும் மகப்பேறு குழந்தை நலம் ஆகியவை முக்கியமாகும். உலக வங்கி திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பொறுப்பை செவ்வனே செய்ய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திறனை வலுவடையச் செய்வது இத்திட்டத்தின் ஒரு முக்கிய கூறு ஆகும். இதனைக் கருத்திற் கொண்டு கீழ்க் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக தக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

1. திட்டமிடலுக்கும், ஒருமைப்படுத்தலுக்கும், திட்டங்களின் மதிப்பீடு செய்தலுக்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உதவ தொழில் நுட்ப ஆலோசகர்களின் பணிகளைப் பெறுதல்;

2. திறம்படச் செயல்களை நிறைவேற்ற இயலச் செய்வதற்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலர்களுக்கும், தன் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல்.

1978 மார்ச் 10]

நகராட்சி நிர்வாகம்,

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 4-ன்படி அரசு அறிவிப்பின் மூலமாக எந்த நகரத்தையும் அல்லது கிராமத்தையும் நகராட்சியாக அமைக்கலாம். சிறப்பு தேர்வு, முதல், இரண்டு மற்றும் மூன்றும் தர நகராட்சிகளாக கருதுவதற்காக அரசு கீழ்க் காணும் வழிமுறைகளை விதித்துள்ளது.

எண்.	நகராட்சியின் தரம்.	கணக்கின்படி சாதாரண ஆண்டு வருமானம்.	கடந்த 3 ஆண்டுகளில் மொத்த வருமானம்.
(1)	(2)	(3)	(4)
1.	சிறப்பு நகராட்சி ..	ரூ. 50 இலட்சம் அதற்கு மேலும்.	ரூ. 75 இலட்சம் அதற்கு மேலும்.
2.	தேர்வு நகராட்சி ..	ரூ. 25 இலட்சம் அதற்கு மேலும்.	ரூ. 50 இலட்சம் அதற்கு மேலும்.
3.	முதல்தர நகராட்சி ..	ரூ. 10 இலட்சம் அதற்கு மேலும்.	ரூ. 15 இலட்சம் அதற்கு மேலும்.
4.	இரண்டாம் தர நகராட்சி.	ரூ. 5 இலட்சம் அதற்கு மேலும்.	ரூ. 7 இலட்சம். அதற்கு மேலும்
5.	மூன்றும் தர நகராட்சி.	ரூ. 2 இலட்சம் அதற்கு மேலும்	ரூ. 3 இலட்சம் அதற்கு மேலும்.

மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 4-ஏ-ன் கீழ் நகராட்சியையோ அல்லது குறிப்பிட்ட பகுதியையோ தொழிற்சாலை, தொழிலாளர் அல்லது நிறுவனங்கள் சார்ந்த குடியிருப்பு அல்லது உடல் நலத்திற்கு உகந்த இடங்களை, நகரியமாக, அரசு அறிவிக்கலாம். தற்போது 8 நகரியங்கள் உட்பட, 104 நகராட்சிகள் உள்ளன. அவை;—

சிறப்புத்தர நகராட்சிகள் ..	..	3
தேர்வுத்தர நகராட்சிகள் ..	..	12
முதல்தர நகராட்சிகள் ..	..	29
இரண்டாம்தர நகராட்சிகள்	..	35
மூன்றும்தர நகராட்சிகள்	..	25

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1977-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்திலுள்ள சின்னமனூர் நகர பஞ்சாயத்தும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி நகர பஞ்சாயத்தும் புதியதாக மூன்றும்தர நகராட்சிகளாக அமைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் நகர பஞ்சாயத்து, 1978 ஜனவரி மாதம் முதல் மூன்றும்தர நகராட்சியாக அமைக்கப் பட்டது. 1977-ல் கீழ்க் கண்டவாறு நகராட்சிகள் உயர்த்தப்பட்டது.

1. திண்டுக்கல் .. தேர்வுத் தரம்

2. திருப்பத்தூர் .. முதல் தரம்

3. கோபிசெட்டிபாளையம் .. முதல் தரம்

4. ஸ்ரீரங்கம் .. முதல் தரம்

5. சத்தியமங்கலம் .. இரண்டாம் தரம்

6. தென்காசி .. இரண்டாம் தரம்

3. 1978 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மேட்டுப்பாளையம் நகராட்சியை முதல்தர நகராட்சியாக உயர்த்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பு (1) நகராட்சி மன்றத்தையும், (2) நகராட்சி மன்றத் தலைவர், மற்றும் (3) நிர்வாக அதிகாரியையும் சாரும். மக்கள் தொகைக்குத் தகுந்தபடி, நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசு அறிவித்தபடி நிர்ணயிக்கப்படும். மன்றத்தின் காலவரம்பு ஐந்தாண்டுகளாகும்.

4. நிதி வசதிக்கேற்ப, குடி மக்களுக்கு தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், வடிகால்கள் மற்றும் பொது கழிவறைகளைப் பராமரித்தல் முதலிய பணிகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும்.

5. தமிழ்நாட்டில், ஒரு இணை நகராட்சி ஆய்வாளர் மற்றும் ஐந்து மண்டல நகராட்சி ஆய்வாளர்களின் உதவியோடு, நகராட்சி நிர்வாகம் சீராக நடைபெறுவதற்கு, நகராட்சிகளின் ஆய்வாளர் பொறுப்பாவார். சிறப்பு மற்றும் தேர்வு நகராட்சிகள், நகராட்சிகளின் ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படும். முதல் தர, இரண்டாம் தர, மற்றும் மூன்றும் தர நகராட்சிகளை, மண்டல நகராட்சி ஆய்வாளர்கள் தணிக்கை செய்வார்கள். சென்னையில் நகராட்சிகளின் ஆய்வாளரின் தலைமை அலுவலகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

அமைக்கப்பட்டுள்ளது. மண்டல நகராட்சி ஆய்வாளர்களின் எல்லை மற்றும் தலைமை அலுவலகம் கீழே குறிப்பிட்டுள்ள வாறு அமைக்கப்பட்டுள்ளது:—

மண்டலம்.	தலைமை அலுவலகம்	எல்லை.
(1)	(2)	(3)
(1) மண்டல நகராட்சி ஆய்வாளர், சேலம்.	சேலம்	சேலம், கோயம்புத்தூர் மற்றும் உதகமண்டலம் மாவட்டங்கள்.
(2) மண்டல நகராட்சி ஆய்வாளர், மதுரை.	மதுரை	மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
(3) மண்டல நகராட்சி ஆய்வாளர், திருநெல்வேலி	திருநெல்வேலி	திருநெல்வேலி, இராமநாதபுரம், மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.
(4) மண்டல நகராட்சி ஆய்வாளர், தஞ்சாவூர்	தஞ்சாவூர்	தஞ்சாவூர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள்
(5) மண்டல நகராட்சி ஆய்வாளர், சென்னை.	வேலூர்	செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நகர் அமைப்புத் திட்டங்களுக்காக கடன் வழங்குதல்.

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர், நகராட்சிகள் மற்றும் மதுரை மாநகராட்சி ஆகியவற்றிலிருந்து நகர் மற்றும் ஊரமைப்பு திட்டங்களுக்காகக் கடன் கேட்டு வரும் விண்ணப்பங்களை ஒவ்வொரு ஆண்டிலும் அரசுக்கு அனுப்புகிறார். அந்தக் கடன் தொகை இருபது (20) ஆண்டுகளில் திரும்பிச் செலுத்தப் படுகிறது. வழங்கப்படும் தொகை அத் தொகையை பெற்ற நாளிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் அப்பணிக்காக செலவு செய்யப்பட வேண்டும். நகராட்சிகள் கடன் தொகையை திரும்பச் செலுத்துவதை மாநில கணக்காய்வுத் தலைவர் கண்காணிக்கிறார். இந்த நடப்பு ஆண்டில் நகராட்சிகளுக்கு ரூபாய் ஆறு இலட்சம் கடனுக வழங்குவதற்கான செயற்குறிப்புகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

[1978 மார்ச் 10

பின் தங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த முன்னேற்றம்.

சமுதாயத்தின் நலிந்த பகுதியினர் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் மக்களின் அடிப்படைத் தேவையான சாலை வசதி, மின் விளக்கு வசதி, மற்றும் குடிநீர் வசதி ஆகியவை அளிக்கப்பட நகராட்சிகளின் ஆய்வாளர் ''பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்ற திட்டம்'' ஒன்றினைத் தீட்டியுள்ளார். இத்திட்டத்தை ஊக்கத்துடன் செயல் படுத்துவதற்காக நடப்பு ஆண்டில் 10 நகராட்சிகளுக்கு மானியமாக ரூ. 10.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது அந்தப் பத்து நகராட்சிகள் பின்வருமாறு:

சேலம், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், நாமக்கல், திருப்பூர், பழனி, வேலூர், திருவொற்றியூர், கும்பகோணம், திண்டிவனம்.

நகராட்சித் தேர்தல்.

நகராட்சிகளின் கடைசி பொதுத் தேர்தல் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது. 1974-ம் ஆண்டில் குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் முடிவடைந்த போதிலும் அனைத்து நகராட்சிகளின் பதவிக்காலம் 30—6—1976 வரை நீடிக்கப்பட்டது. 1—7—1976 முதல் நகராட்சிகளை நிர்வகிப்பதற்கும் மன்றப் பணிகளின் பொறுப்புகளைச் செயலாற்றவும் சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பதவிக்காலமும் 30-9-1978 வரை தவிர்க்க இயலாத சில காரணங்களினால் நீட்டிக்கப்பட்டது. அனைத்து நகராட்சிகளின் வாக்காளர் பட்டியல் கடைசியாக 1973-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இப்போது ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுத்து புதிதாக வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து நகராட்சிகளுக்கும் புதிய வாக்காளர் பட்டியல்கள் 1978-ம் ஆண்டு மே மாதம் இறுதிக்குள் தயாராகிவிடும். வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கும் பணி நிறைவுற்றதும், நகராட்சித் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. நகராட்சித் தலைவர்கள் வருகின்ற நகராட்சி தேர்தலில் நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 அக் 1978
MADRAS

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society. (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No 46D Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot., Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennur High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B B. Ganguli Street, Calcutta-17.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
12 SEP 1978
MADRAS

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED ... DIRECTOR OF STATIONARY AND PRINTI... ADRAS.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS